பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 26 வெள்ளிக்கிழமை (10.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 204

moving money for better

உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்

உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.

இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை

Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-9845)

### கஞ்சா கடத்தலின் மையமாக வடக்கு

## 2,327 கிலோ கிராம் கேரள கஞ்சா இவ்வருடத்தில் கைப்பற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)
வடக்கில் இவ்வருடம் 2,327 கிலோ கிராம் கஞ்சா போதைப் பொருள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாக வடக்கு கடற்படை கட்டளைத் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடத்து ▷23

## கல்வியங்காடு இளைஞன் வரணியில் சடலமாக மீட்பு



(கொடிகாமம்)
தென்மராட்சி வரணி தாவளை இயற்றாலைப் பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, யாழ். கல்வியங்காடில ▷23


## யாழ்.நகரில் ஒருவருக்கு கத்திக்குத்து

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் வைத்தியசாலை ▷23

### இலங்கையில் மீண்டும்

# கொரோனா அச்சுறுத்தல்

### 57 பேருக்கு நேற்று வைரஸ் தொற்று



(கொழும்பு)
இலங்கையில் மீண்டும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

நேற்று ஒரே நாளில் மட்டும் 57 பேருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

**க.பொ.த (சா/த)**
மாணவர்களுக்கான
**கணித** பாட
மாதிரி வினாத்தாள்
பகுதி I, II
உள்ளே ☛

## வாள்வெட்டுக் குழுவின் வீடு நீர்வேலியில் முற்றுகை

கைக்குண்டுகள், இராணுவச் சீருடை, வாள்கள், மோ.சைக்கிள்கள் மீட்பு

23ஆம் பக்கம் பார்க்க

### கெடுபிடிகளுக்கு மத்தியில்

## நவாலி படுகொலையின் 25ஆவது நினைவேந்தல்



▷23

## தந்தையின் கத்திவெட்டில் 5 வயது சிறுமி படுகாயம்

### முல்லைத்தீவில் சம்பவம்

(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவு முள்ளியவளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கேப்பாப்புலவு பகுதியில் நேற்று முன் ▷23

## ஒரு பவுண் தங்கம் இலட்சமாக உயர்வு

(கொழும்பு)
இலங்கை வரலாற்றில் முதன்முறையாக தங்கத்தின் விலை உச்சபட்ச அளவை எட்டியது. 24 கரட் ▷23

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2020
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
TNA
X 10

என் அன்புக்குரிய அரச சேவையாளர்களே!

உங்களில் ஒருவனாக 20 ஆண்டுகள் அரச பணியிலிருந்து, அரசியல் பணியில் பிரவேசித்தவன் என்ற உரிமையோடு, கடந்த ஒன்பதரை ஆண்டுகள் நான் ஆற்றியுள்ள மக்கள் பணிகளையும், பற்றுறுதிமிக்க எனது தமிழ்த்தேசியப் பயணத்தையும் மனங்கொண்டு உங்கள் வாக்குகளால் எனக்கு வலுச்சேர்ப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

(C-028)

நிரந்தர அரசியல் உரிமை...
நிலையான அபிவிருத்தி...
நிலத்தினில் தமிழராய் நிமிர்ந்திட...



சிவஞானம் சிறீதரன்
M.Ed, B.A, PGDE(Mt), PGDEM, Sp. Tr(Ag)
மேனாள் பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
இல.882, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி, கிளிநொச்சி
மேனாள் அதிபர் :-
கிளி/ கிளிநொச்சி மகாவித்தியாலயம்
கிளி/ கண்டாவளை மகாவித்தியாலயம்
கிளி/ கோணாவில் மகாவித்தியாலயம்

WWW.FACEBOOK.COM/IMSHRITHARAN
WWW.SHRITHARAN.COM

# யாழ்.மாநகர சபையில் கூட்டமைப்பு வெளிநடப்பு

## அமர்வை புறக்கணித்ததற்கு முன்னணி, ஈ.பி.டி.பி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் அமர்வு நேற்றைய தினம் இடம்பெற்ற போது அமர்விலிருந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கூண்டோடு வெளி நடப்புச் செய்தனர்.

கடந்த 27.05.2020 அன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகர சபை உறுப்பினரான தனுஜனின் தந்தை விபத்தில் பலியாகியிருந்தார். இந்நிலையில் கடந்த மாதம் மாநகரசபை அமர்வின் போது அடுத்த மாநகர அமர்வு இன்று நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

எனினும், பின்னர் தான் குறித்த தினத்தன்றே தன்னுடைய தந்தையின் 45 ஆவது நாள் வருவதனை தனுஜன் அறிந்து கொண்டார். எனவே, தன்னுடைய தந்தையாரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அத்தனை பேரையும் அன்றைய நாளில் அழைக்க வேண்டும் என்பதனால் அவர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் பொருட்டு அமர்வினை வேறொரு திகதியில் நடத்த முடியுமா? என சபையின் செயலாளர் அ.சீராளனிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

சபையின் செயலாளரும் மனிதாபிமான அடிப்படையில் பதில் முதல்வருடன் கலந்துரையாடி தபால் மூல வாக்களிப்பு அடுத்த வாரத்தில் நடைபெறவுள்ளதன் காரணமாக அமர்வினை அடுத்த வாரத்திற்குப் பிற்போட முடியாமையினால் குறித்த அமர்வினை நேற்று நடத்துவதற்குத் தீர்மானித்திருந்தார்.

இந்நிலையில் யாழ். மாநகரசபையின் அமர்வு நேற்று முற்பகல்-10 மணியளவில் மாநகர சபையின் பதில் முதல்வர் து. ஈசன் தலைமையில் ஆரம்பமானது. குறித்த அமர்வு ஆரம்பமாகிய சில நிமிடங்களில் உரையாற்றிய கூட்டமைப்பு உறுப்பினர் மகாலிங்கம் அருள்குமரன் மாநகரசபைக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் ஒரு கூட்டமானது நான்கு நாட்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட வேண்டும். எனினும், மூன்று நாட்கள் முன்னறிவித்தலுடன் இன்றைய(நேற்றைய) கூட்டம் நடத்தப்படுகிறது. எனவே, கூட்டம் சட்டவலுவற்ற கூட்டமென சபைக்குத் தெரியப்படுத்திவிட்டு அங்கிருந்து வெளியேறிச் சென்றுள்ளார்.

இந்நிலையில் அமர்விற்குத் தலைமை தாங்கிய பதில் முதல்வர் இதுதொடர்பில் தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கின்றேன் எனத் தெரிவித்த போதும் அவரது கருத்துக்குச் சிறிதும் செவிசாய்க்காமல் சட்டவலுவற்ற இக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது எனத் தெரிவித்து யாழ்.மாநகரசபையின் பதில் முதல்வர் தவிர்ந்த அனைத்துத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் வெளி நடப்புச் செய்தனர்.

இதனையடுத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேற்றைய அமர்வைப் புறக்கணித்து வெளிநடப்புச் செய்தமைக்கு ஈபிடிபி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் சார்பில் கடும் கண்டனமும் வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து யாழ்.மாநகர சபையின் பதில் முதல்வர் து.ஈசன் உரையாற்றினார். அவர் தனதுரையில் ஒருவருடைய மரணத்திற்கு மதிப்பளிக்க வேண்டுமென்பதில் நான் அக்கறையுடையவனாகவிருக்கின்றேன். இதனால் தான் நாளை (இன்று) நடைபெறவுள்ள அமர்வு இன்றைய தினம் (நேற்று) நடைபெறுகிறது. எல்லோரும் எமது உறுப்பினர்கள். எல்லோரும் எமக்குத் தேவை. எல்லோரும் இணைந்தால் தான் மாநகரசபையைக் கட்டியெழுப்ப முடியும். சட்டங்களுக்கேற்ற மாதிரி நாங்கள் இந்த சபையைக் கொண்டு செல்வதாகவிருந்தால் இன்றைய (நேற்றைய) சபையை ஒத்திவைப்பது தான் சிறந்தது எனவும் தெரிவித்தார். (ம-3,18)

# வியாவில் ஐயனாருக்கு நாளை கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் மகோற்சவம் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும்.

ஆலய மகோற்சவத்தில் பங்குபற்றும் அடியார்கள் கொரோனா தொற்று நோய்த் தடைக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றி உதவுமாறு ஆலய அறங்காவலர் கேட்டுள்ளார். (ம-3)


## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப் பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு (3172)
Tel : 077 340 5951
Email : engchelvam@gmail.com


# கொரோனா; குழந்தை பலி

(சென்னை)

தமிழகத்தில் பிறந்து 25 நாள்களே ஆன குழந்தை ஒன்று கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளது.

திருவண்ணாமலையைச் சேர்ந்த இந்த குழந்தைக்கு இரத்த ஓட்டத்தில் பாதிப்பு, நரம்பு மண்டலத்தில் பாதிப்பு, அடிவயிற்றில் நோய்தொற்று உள்ளிட்ட காரணங்களுக்காக இதுவரை மூன்று முறை அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பாதிப்பின் காரணமாக கடந்த 27 ஆம் திகதி சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த 7 ஆம் திகதி குழந்தை உயிரிழந்தது. (ம-3)


குருவே துணை



வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

## அன்பர்களின் வேண்டுகோளுக்கமைய மீண்டும் மனவளக்கலை யோகாப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

கடந்த சில மாதங்களில் உலகம் முழுவதும் நடைபெற்ற கொடிய கிருமித் தொற்றிலிருந்து மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பியிருப்பினும் இன்னும் உலகத் தலைவர்களும் விஞ்ஞானிகளும் வைத்தியர்களும் மற்றும் சுகாதாரத்துறை சார்ந்த அனைவரும் மக்களுக்கு அறிவுறுத்துவது மக்கள் தங்களுடைய நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க யோகப் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும் என்பதே. அதனை வழங்குவதே அருட்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்களின் மனவளக்கலை யோகாப் பயிற்சிகள் ஆகும்.

இலகுவான எண்பது வயது முதியவரும் செய்யக்கூடிய எளியமுறைப் பயிற்சிகள் கைக்கு எட்டிய தூரத்தில் இருக்க ஏனைய மருத்துவங்களும் அநாவசிய செலவுகளும் எதற்காக? எனவே புதிய அன்பர்களும் மாணவச் செல்வங்களும் தவறாது பங்குபற்றி பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.

இம்முறை இலங்கையின் ஒளிவிளக்காகத் திகழும் யாழ். அறிவுத்திருக்கோவில் தலைவரும் பேராசிரியருமான அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள் பயிற்சியினை வழ்ங்கவுள்ளார் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

- எளியமுறை உடற்பயிற்சிகள்
- எளியமுறை தியானப்பயிற்சி
- காயகல்ப்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சி

காலம் :11.07.2020 சனிக்கிழமை தொடக்கம் 17.07.2020 வெள்ளிக்கிழமை வரை
நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரை
அறிமுகவுரை : மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி சி. முருகானந்தவேல் அவர்கள்
பயிற்சி வழங்குபவர் : துணைப் பேராசிரியர் அருள்நிதி த. நந்தகுமரன் அவர்கள்
குறிப்பு : கொவிட் - 19 சமூக பாதுகாப்பு விதிகளுக்கமைவாக பயிற்சிகள் வழங்கப்படுவதால் மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியாளர்களே உள்வாங்கப்படுவர்.

தொடர்புகளிற்கு :
யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 222 2772 (C-9865)



## கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி நிலையத்தின் க.பொ.த (உ/த)
தமிழ் ஆசான் திரு இராமநாதன் இன்பதாஸ்
அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்
சின்னத்தம்பி இராமநாதன்

மலர்வு 23.07.1933 உதிர்வு 08.07.2020

அவர்கள் (08.07.2020) அன்று அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து ஆற்றொணாத் துயருற்றோம். அவர் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள்
சதாபொன்ஸ் கல்வி நிலையம் – அல்வாய் (C-9868)



## காணி விற்பனைக்கு

யாழ். மாவட்டம், வடமராட்சிப் பகுதி பருத்தித்துறை கோயிற்பற்று, புலோலி கிழக்கு மழவராய்குறிச்சியிறையில் "மண்பற்றங்கூடல்" என்னும் காணியில் நிலப் பரப்பு 3 குளி 11 24/32, வெட்டுக் கிணறுடன் பாதை வசதியுடன், நாற்புறமும் மதிலுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

(C-9869)

தொடர்பு :- 077 940 9327

# தேர்தல் சட்டங்களை மீறுவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை

## பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் சட்டவிதிகளை மீறி செயற்படும் நபர்களுக்கு எதிராக 1981 ஆம் ஆண்டு பாராளு மன்ற தேர்தல் சட்டம், பொலிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் தொற்று நீக்க சட்டவிதிகளுக்கு கீழ் கடும் சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் என்று பெரலிஸ் தலை மையகம் அறிவித்துள்ளது.

தேர்தல் காலங்களில் பிர சார நடவடிக்கைகளை மேற் கொள்ளும் போது கடைப்பிடிக்க வேண்டிய சட்டவிதிகள் தொடர் பில் பொலிஸ் தலைமைய கத்தினால் நேற்று விடுக்கப் பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக் கப்பட்டுள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

பொதுத் தேர்தலில் போட் டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் பிரசா ரங்களில், வேட்பாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் எவ ரும் அவர் சார்பில் வீடுகளுக் குச் சென்று பிரசாரங்களில் ஈடுபட முடியாது. வேட்பாள ரின் உறவினர்கள் அல்லாத ஏனை யவர்கள் பிரசாரத்தில் ஈடுபடலாம்.

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட தின த்திலிருந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப் பட்டு ஒருவாரம் ஆகும் வரையில் எந்தவித பெரஹெரா மற்றும் விழாக்களில், வேட் பாளர்கள் கலந்து கொள்ளக் கூடாது. அதே வேளை சமய நிகழ்வுகளில் அரசியல் சார் ந்த செயற்பாடுகளை முன்னெடுக்கக்கூடாது.

இந்நிலையில் மூன்று பேர் மாத்தி ரமே வீடுகளுக்குச் சென்று பிரசாரங்களில் ஈடுபட முடியும். இதேவேளை வேட்பா ளர்களின் கட்சிக் கொள்கைத்திட்டம், சின்னம், அவர்களது போட்டி இலக்கம், புகைப்படம், துண்டுப்பிரசுரம் மற்றும் சுவரொட்டிகளை வாக்காளர்களின் இல் லங்களுக்குச் சென்று கையளிக்க முடி வதுடன், வாகனங்களில் அதனை காட் சிப்படுத்த முடியாது.

இதேவேளை இல்லங்கள் தோறும் சென்று தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடும் போது , குறித்த வீட்டு உறுப்பினர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் பிர சாரங்களில் ஈடுபடுவதுடன் ஒலிபெருக் கிகளை உபயோகிக்கக் கூடாது. இதன் போது வேட்பாளர்களின் சின்னம், இலக்கம், புகைப்படம் ஆகியவற்றை காட்சிப்படுத்தும் வகையிலான ஆடை களை அணிந்து செல்வதையும் தவிர்த் துக் கொள்ள வேண்டும்.

வேட்பாளர்களின் கட்சி , கொடி மற்றும் பதாகைகளை பிரசார கூட்டம் இடம்பெறும் தினத்தில் , கூட்டம் நடைபெறும் இடத்தில் மாத்திரமே காட்சிப்படுத்த முடியும். அதே வேளை வேட்பாளர் அவரின் சொந்த வாகனத்தில் அவரது கட்சியின் சின்னம், இலக்கம் மற்றும் கட்சியின் கொடியை காட்சிப்படுத்தலாம். ஆனால் வாகனத்தின் பொதுவான நிறத்தை மாற்றும் வகை யிலோ பின்பகுதி கண்ணாடியை மூடும் வகையிலோ காட்சிப்படுத்தக்கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)


இலங்கையின் முதல்தர இலத்திரனியல் நிறுவனமான

LG Life's Good

Abans குழுமத்தின் புதிய பிரமாண்ட காட்சியறை




கோலாகல திறப்புவிழா

Abans Elite காட்சியறை

காலம் : 11.07.2020 சனிக்கிழமை
நேரம் : காலை 10.35 மணி
இடம் : 420, 1ம் மாடி, காகில்ஸ் சதுக்கம், யாழ்ப்பாணம்

காட்சியறை இலக்கங்கள்: 0215776040, 6041

e-mail : ade_iff@abansgroup.com

முகாமையாளர் - ஜெ.உத்தமன் 077 317 9593

விற்பனைப் பிரதிநிதிகள்

ச.கஜேந்திரன் - 0770653004 ம.ஜெனகன் - 0771633505
ம.மயூரன் - 0775048724 ஜி.கென்றிக்சன் - 0777683121

வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்

LG Life's Good Abans TOSHIBA Authorized Reseller VIVO Haier

(3241)

OPPO mistral pyrex. Lenovo acer PHILIPS ELBA Whirlpool hp UBL



# 90ம் நாள் நினைவு அஞ்சலி நிகழ்வும் சபிண்டீகரண அழைப்பும்

## அமரர் தில்லைநாதன் ஆனந்தவர்ணன்



மேனாள் பூநகரி பிரதேசசபை உறுப்பினரும்
தமிழ்த் தேசிய தொலைக்காட்சி (T.T.N) பிரான்ஸ்
நிகழ்ச்சி தயாரிப்பாளரும் செய்தி அறிவிப்பாளரும்



தோற்றம் 22.01.1990

மறைவு 09.04.2020

கடந்த 09.04.2020 அன்று பிரிட்டனில் கொரோனா தொற்றுக்கு இலக்காகி இறைபதம் எய்திய எங்கள் செல்வ மகனின் அந்தியேட்டிக் கிரியையின் பின் இன்று 10.07.2020 வெள்ளிக்கிழமை 10 மணியளவில் அமரரின் பூநகரி 4ம் கட்டையில் உள்ள **“ஆனந்தவாசா”** இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மன்னார் வீதி,
4ம் கட்டை, பூநகரி.

(3254)

குடும்பத்தினர்.
T.P: 0763711795

# நரேந்திர மோடியின் ஆதரவு எங்களுக்கே என்பது தமிழ் மக்களை முட்டாள்கள் ஆக்கும் கருத்து

## சம்பந்தனின் பேச்சுக்கு சந்திரகுமார் பதிலடி



(அக்கராயன்)

இந்திய பிரதமர் நரேந்திர மோடி தங்களோடுதான் இருக்கின்றார் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் தெரிவித்துள்ள கருத்து தமிழ் மக்களை முட்டாள்களாக்கும் கருத்து என்றும் தமிழ் மக்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீண்டும் இந்த தேர்தலில் ஏமாற்றுவதற்கு இவ்வாறான அறிக்கைகளை அவர்கள் விடுகின்றனர் என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிராந்திய அரசியல் நலன்கள்சார்ந்து இந்தியா எப்பொழுதும் கொழும்போடுதான் இருந்துள்ளது. இன்றும் இருந்து வருகிறது. சர்வதேச நாடுகள் அனைத்தும் ஏனைய நாடுகளின் எந்த விடயத்திலும் தலையிடுகின்ற போது தங்களின் நலன்களிலிருந்து சிந்தித்தே முடிவுகளை எடுத்து வருகின்றன.

மாறாக அவர்கள் தமிழ் மக்கள் மீதான அக்கறையினால் அல்ல. யுத்தம் நிறைவுற்று கடந்த 10 வருடங்களாக தமிழ் மக்களின் விடயத்தில் சர்வதேச நாடுகளின் செயற்பாடுகள் இவ்விதமே இருந்து வருகின்றன.

ஆனால் ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்கள் முன் சர்வதேசம் என்ற மாயமானை காட்டி வாக்குகளை பெற்று தங்களை வளப்படுத்திக்கொண்டார்களே தவிர தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள உடனடி பிரச்சினைகளை கூட நிவர்த்தி செய்யவில்லை.

பிரதேசங்களின் அபிவிருத்தி. இளம் சமூகத்தின் வேலைவாய்ப்புகள், மக்களின் பொருளாதார முன்னேற்றம் போன்ற மக்களின் நாளாந்த வாழ்க்கை பிரச்சினைகளைக்கூட அவர்களால் தீர்த்து வைக்க முடியவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில் போட்டியிடுகின்ற 10 வேட்பாளர்களும் ஒரே மேடையில் ஒற்றுமையாக இருந்து ஒரு தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நடத்த முடியுமா? பத்து பேருக்குள்ளும் பத்துவிதமான கருத்துக்கள், ஒருவருக்கொருவர் குழிபறிக்கின்ற செயற்பாடுகள், கட்சிக்குள் அடிபாடுகள், மாறிமாறி ஊழல் மோசடிகளை அம்பலப்படுத்துகின்றனர். நியாயமாக கேள்வி கேட்கின்றவர்களை கட்சியிலிருந்து விலக்குகின்றனர்.

இவ்வாறு தங்களுக்குள் ஒற்றுமையின்றி இருந்து கொண்டு தமிழ் மக்களை ஒற்றுமையாக தங்களுக்கு வாக்களிக்க கோருவது கேலிக் கூத்தான செய்ற்பாடு.

எனவே இனியும் இவர்களை நம்பி இவர்களின் வார்த்தைகளை நம்பி தமிழ் மக்கள் ஏமாந்து போகக் கூடாது. மக்களின் நலனில் நாம் கேடயமாக நின்று காப்போம். இதனை கடந்த கால எங்களின் செயற்பாடுகள் கட்டியம் கூறுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4-350)

# தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு கண்ணீர் கூட விடமுடியாத நிலை

## அனந்தி சசிதரன் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

அரசியலுக்கு எப்போதும் துணிச்சல் தேவை. அந்த துணிச்சல் இல்லாதவர்கள் அரசியலுக்கு வரக் கூடாது எனத் தெரிவித்த தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளரும் ஈழத்தமிழர் சுயாட்சிக்கழகத்தின் செயலாளர் நாயகமுமான அனந்தி சசிதரன், கொள்கை மாறாது கடைசிவரை எமது மக்களுக்காக பயணிப்பேன் எனவும் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அனுப்பிய அவரது அறிக்கையில்,

2020 பாராளுமன்றத்தேர்தலில் நாங்கள் ஒரு புதிய கூட்டணியாக களமிறங்கி இருக்கின்றோம். அதுவும் கொரோனா என்ற கொடிய தொற்றுநோயின் தாக்கத்தில் இருக்கின்ற போது இலங்கை அரசாங்கத்தினால் இந்த தேர்தல் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக நாம் கண்ணீர் விடக்கூட இந்த அரசாங்கம் எங்களுக்கான அனுமதியை தர தயாராகவில்லை. எனவே இன்று இந்த நிலைமை ஒரு இராணுவ ஆட்சிக்குள் இருக்கின்ற அல்லது இராணுவ முற்றுகைக்குள் இருக்கின்ற சூழ்நிலையில்தான் நாங்கள் இந்த தேர்தலை எதிர்கொள்கின்றோம்.

உங்களுக்கு தெரியும் நாங்கள் எதற்காக தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு எதிரான மாற்றணியாக இறங்கி இருக்கிறோம். இன்றைக்கு பலர் சில முகப்புத்தகங்கள் ஊடாக பேசுகின்றவர்கள் நாங்கள் பதவிகளுக்காக கட்சியைவிட்டு வெளியேறினோம் என்று. இல்லை நாங்கள் கொள்கைகளுக்காக வெளியேறியவர்கள். 2015 ஆம்ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் என்று இவர்களால் கொண்டு வரப்பட்ட ஆட்சியின் போது மிகத்தெளிவாக சொன்னேன். மனச்சாட்சிக்கு விரோதமாக மைத்திரியையும் ஆதரிக்கமாட்டேன், மகிந்தாவையும் ஆதரிக்கமாட்டேன் என்றும் இரண்டு போர்க்குற்றவாளிகள் என்று கூறியதன் காரணமாக கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டேன்.

எந்த ஒரு கூட்டணிக்குள்ளும் ஒருவரது வெற்றி வாய்ப்பை இன்னொருவர் தட்டிப் பறிக்கின்ற நிகழ்ச்சி நிரலிலுக்குள் அவர்கள் சென்று விடக்கூடாது. ஏன் என்றால் ஒருவரைக் குற்றவாளியாக காட்டிக் கொண்டு எனையவர்கள் தூய்மையானவர்களாக காட்டிக் கொள்ள முயற்சிக்கின்றார்கள்.

எந்தக் காலத்திலும் கொள்கையை விட்டு விலகிப் போகிறவர்கள் நாங்கள் இல்லை. நான் பாதிப்பிலிருந்து வந்த பெண் அது மட்டுமல்ல சரணடைந்து காணாமல் போனோர்கள் தொடர்பில் தொடர்ச்சியாக பேசிக்கொண்டிருக்கின்றேன்.

அரசியலுக்கு எப்போதும் துணிச்சல் தேவை. துணிச்சல் இல்லாதவர்கள் அரசியலுக்கு வரக்கூடாது. அரசாங்கம் பிடிக்கும், அடிக்கும், சுடும் என்றெல்லாம் நினைப்பவர்கள் அரசியலுக்கு வர முடியாது. நான் எந்த நேரமும் எதையும் எதிர்கொள்ள தயாராக இருக்கிறேன்.

ஏனென்றால் என் கணவரின் சரணடைவுக்கு பின் மூன்று பெண் பிள்ளைகளுடன் நான் அநாதரவாக நின்றபோது எனக்கு இருந்த நம்பிக்கை அத்தனை பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கும் வரவேண்டும் என்று எண்ணுகிறேன் என அவர் அறிக்கை தொடர்ந்து செல்கிறது. (ஜ-4-9)

தேர்தல் வியூகம்

# தமிழ் மக்களுக்கு உறுதியோடு செயற்படும் மாற்று அரசியல் தலைமை ஒன்றே தேவை

## சிவசக்தி ஆனந்தன் எடுத்துரைப்பு



(மன்னார்)

தமிழ் மக்கள் எங்களுக்கு வழங்குகின்ற ஆதரவின் ஊடாக நிச்சயமாக நாங்கள் இந்த தேர்தலில் அதிகபட்சமான ஆசனங்களைப் பெற்று இத்தேர்தலுக்கு பிற்பாடு நீண்டகாலமாக தீர்க்கப்படாமல் இருக்கின்ற எமது மக்களுக்கான பிரச்சினைகளுக்கு தீர்வு காணுகின்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம் என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று முந்தினம் புதன்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொடர்ந்து வடக்கு-கிழக்கில் "தமிழ் மக்கள் தேசிய கூட்டணிக்கான" மக்கள் ஆதரவு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. அந்த வகையில் தமிழ் மக்கள் நூற்றுக்கு நூறு வீதம் இந்த தேர்தலில் வாக்களிக்க வேண்டும்.

நீண்டகாலமாக ஏற்பட்டுள்ள அரசியல் வெற்றிடத்தை நிவர்த்தி செய்யும் வகையில் "தமிழ் மக்கள் தேசிய கூட்டணி" அதனுடைய தலைவராக இருக்கக் கூடிய விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற இருக்கின்ற பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு-கிழக்கில் அதிகளவான ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளும்.

தமிழ் மக்கள் நிச்சயமாக ஆணையை எமக்கும் வழங்குவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

எங்களுக்கு எம் மக்கள் மீது அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு. மேலும் தமிழ் மக்களினுடைய வாக்குகளை சூறையாடும் வகையில் அரசும் அரசுசார்பான கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் மக்கள் மத்தியில் தாங்கள் பாரிய அளவில் அபிவிருத்திகளை செய்ய உள்ளதாகவும் அதற்காக தமக்கு வாக்களிக்கும் படி கேட்கின்றனர். எனவே தமிழ் மக்கள் மிகவும் தெளிவாகவும் விழிப்பாகவும் இருக்க வேண்டிய ஒரு தேவைப்பாடு உள்ளது.

கடந்த காலத்தில் உறுதியற்ற, அரசிற்கு ஆதரவு வழங்குகின்ற தமிழ்த் தலைமைகளை தெரிவு செய்யாமல் தமிழ் மக்களுக்காக உறுதியோடு செயற்படக்கூடிய புதிய மாற்று அரசியல் தலைமைக்கு தமிழ் மக்கள் தமது ஆதரவை வழங்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (ஜ-4-285)

## வாக்களிக்க முன்னர் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டியவை...

# ஏன் ஒரு மாற்று அரசியல் அணி தேவை?

**எமது அன்புக்குரிய மக்களே!**

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கோ அல்லது இன அழிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களின் துன்ப, துயரங்களை போக்குவதற்கோ எந்தவிதமான நடவடிக்கைகளையும் கடந்த 10 ஆண்டுகளில் எடுக்கவில்லை. இலங்கையின் பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கும், இன அழிப்பு குற்றவாளிகளை பாதுகாக்கும் வகையிலுமே உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஐக்கிய நாடுகள் சபையிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தனது கூடுதலான கவனத்தையும், நேரத்தையும், வளங்களையும் செலவிட்டுள்ளது. எந்தக் கட்சியையும் விமர்சனம் செய்வது எமது நோக்கம் அல்ல. ஆனால், எமது மக்கள் இம்முறை தேர்தலில் மிகுந்த விழிப்புணர்வுடனும் எச்சரிக்கையுடனும் தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும் என்பதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு கடந்த 11 வருடங்களில் என்ன செய்திருக்கின்றது என்பது தொடர்பில் சில விடயங்களை கீழே பட்டியலிட விரும்புகின்றோம்.

1. ஐ. நா மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தினை மேலும் வலுப்படுத்தி இன அழிப்புக்கான சர்வதேச விசாரணை ஒன்றை ஏற்படுத்துவகற்கு மிகவும் பலம்பொருந்திய, வாய்ப்புக்கள் நிறைந்த எதிர்க்கட்சி தலைவர் பதவி கிடைத்தபோதும் அவ்வாறு செய்யாமல் போர் குற்றத்துக்கான சர்வதேச விசாரணை முடிந்து விட்டதாக பிரசாரம் செய்ததுடன் ஐ.நா. மனித உரிமைகள் சபை தீர்மானத்துக்கு கால அவகாசத்தை பெற்றுக்கொடுத்து இறுதியில் அதனை நீர்த்துப்போக செய்துள்ளது. இதன்மூலம் இன அழிப்பு குற்றவாளிகளை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தண்டனையில் இருந்து பாதுகாத்ததுடன் பரிகார நீதி ஊடாக தீர்வினைப் பெறுவதற்கான வாய்ப்பினையும் மழுங்கடித்துள்ளது.
2. முள்ளிவாய்க்கால் இனஅழிப்பை இனஅழிப்பு இல்லை என்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பரப்புரை செய்தமை.
3. 1990ல் பாதுகாப்பு கருதி விடுதலைப்புலிகளினால் யாழ் குடாநாட்டில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியற்றப்பட்டதை இன அழிப்பு என்று வாதிட்டமை.
4. வட-கிழக்கிலிருந்து முற்றான இராணுவ வெளியேற்றத்தை சர்வதேச சமூகமும் மனித உரிமைகள் அமைப்புக்களும் வலியுறுத்தி வந்த நிலையில் தனியார் காணிகளிலிருந்தான இராணுவ வெளியேற்றம் போதுமென்று கூறியமை.
5. கிழக்கு மாகாண சபையை வென்று முஸ்லிம் காங்கிரசிடம் கையளித்தமை.
6. வடக்கு மாகாண சபை இனவழிப்புத் தீர்மானம் நிறைவேற்றியமைக்காக தொடர்ந்து செயற்படவிடாமல் முடக்கியதுடன் முதலமைச்சர் நிதியத்தை ஏற்படுத்த ஒத்துழைப்பு வழங்காமை.
7. வவுனியா வடக்கு முதல் முல்லைத்தீவு வரை நல்லாட்சியென்ற பெயரில் பாரிய சிங்கள குடியேற்றங்களும் இராணுவ குடியேற்றங்களும் ஏற்படுத்தப்படவும் பௌத்த விகாரைகள் கட்டப்படுவதற்கும் உடந்தையாக இருந்தமை. இந்த குடியேற்றங்களை நிறுவுவதற்காக யுத்தம் நடைபெற்ற காலங்களை விடவும் மிகவும் பெருமளவு நிதி பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டபோது பாராளுமன்றத்தில் அவற்றுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்கி தமிழ் தேசிய கூட்டமைப்பு பாரிய ஒரு குற்றத்தை இழைத்துள்ளமை.
8. நாவற்குழி, வவுனியா வடக்கு வெடுக்குநாரிமலை, திருக்கேதீஸ்வரம், கிளிநொச்சி பல்கலைக்கழக வளாகம், வலிகாமம் ஆகிய இடங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதற்கும் எமது தலைநகர் திருகோணமலையில் கன்னியா வெந்நீரூற்று பிள்ளையார் கோவில் இடிக்கப்பட்டு பௌத்த கோவில் கட்டப்படுவதற்கும் நல்லாட்சி அரசாங்கத்துக்கு எந்த எதிர்ப்பையும் வெளியிடாமை.
9. ஓர் (இலங்கை) அரசு செய்யும் போர்குற்றத்தை மூடி மறைப்பதற்காக இன அழிப்பில் இருந்து தற்காத்துக் கொள்வதற்காகப் போராடிய இளைஞர்கள் செய்த நடவடிக்கைகளை அவற்றுடன் ஒப்பிட்டு சமன் செய்தமை.
10. இனப்பிரச்சினைக்கான தீர்வை இலங்கையின் அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்குள் கொண்டு சென்று இனப்பிரச்சினை தீர்வுக்கான பிரத்தியேகமான பேச்சவார்த்தை வழிமுறைகளை இல்லாமல் செய்தமை.
11. வராத ஒரு தீர்வுக்காக தமிழ்த் தேசிய கோட்பாடுகளான வடக்கு கிழக்கு இணைப்பு, இறைமை என்பவற்றை கைவிட்டும் ஒற்றையாட்சி மற்றும் பௌத்தத்திற்கு முதல் உரிமை ஆகியவற்றை ஏற்றுக்கொண்டும் தமிழர் தரப்பை பலவீனப்படுத்தியமை.
12. புலி நீக்க, உரிமை நீக்க அரசியலை மேற்கொண்டு 70 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தமிழ் மக்களின் உரிமை அரசியலை சலுகை அரசியலாக மாற்றியமை.
13. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் மற்றும் தமிழரசு கட்சியின் மூத்த தலைவர்கள் இலங்கையின் சிங்கக் கொடியை நிராகரித்தும் சுதந்திர தினத்தை கரி நாளாக தொடர்ந்து பிரகடனப்படுத்தியும் வந்த நிலையில் எதிர்க்கட்சி தலைமைப் பதவியை தக்க வைப்பதற்காகவும் சலுகைகளுக்காகவும் சிங்க கொடியை ஏற்று கையில் ஏந்தியதுடன் சுதந்திரதின நிகழ்வுகளிலும் கலந்துகொண்டமை.

### ஏன் நீங்கள் தமிழ் மக்கள் தேசிய கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும்?

ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசரும் வட மாகாண முன்னாள் முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன் அவர்களின் தலைமையில் கொள்கை அடிப்படையிலும் புதிய அணுகுமுறையின் அடிப்படையிலும் 5 கட்சிகள் ஒன்றுசேர்ந்து உருவாக்கியுள்ள ஒரு பெரும் கூட்டுக்கட்சி தமிழ் மக்கள் தேசியகூட்டணி ஆகும். ஒழுக்கம், நேர்மை, தற்றுணிவு கொண்ட மற்றும் லஞ்சம், சலுகைகளுக்கு விலைபோகாத அரசியல் தலைமைத்துவத்தை நீதியரசர் விக்னேஸ்வரன் கடந்த 5 வருடங்களாக வழங்கிவருகின்றார். தமிழ் தேசிய கூட்டமைப்பின் சலுகை அரசியலுக்கும் ஏமாற்றுக்களுக்கும் எதிராகவும் அரசாங்கங்களுக்கு அடிபணியாமலும் அவர் துணிச்சலாக மேற்கொண்ட நடவடிக்கைகளே தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டமும் இனஅழிப்புக்கான நீதிக்குமான போராட்டம் அஸ்தமித்துவிடாமல் தொடர்ந்தும் உயிர்ப்பாக பேணப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருவதற்குக் காரணமாகும். அத்தகைய ஒரு தலைவரின் கீழேயே இறுக்கமான ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைவாக தமிழ் மக்கள் தேசிய கூட்டணி செயற்பட்டுவருகின்றது. வேட்பாளர்கள் தமது சொத்துவிபரங்களை வெளியிடுவது, பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது மாதாந்த படிகளில் குறைந்தது 10 சத வீதத்தினை பொதுமக்களின் நலன்களுக்கு வழங்குவது உட்பட பல்வேறு நிபந்தனைகளை இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை உள்ளடக்கியிருக்கிறது.

### எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் என்ன விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்?

1. சட்டப்படி தமிழ் மக்கள் ஒரு தேசம் (Nation), இலங்கையின் வடக்கு கிழக்கு அவர்களின் மரபுவழி தாயகம் (Traditional Homeland), அவர்கள் சர்வதேச சட்டங்களின் கீழ்சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் (Right of Self Determination) என்பவற்றின் அடிப்படையில் இணைந்த வடக்கு கிழக்கில் இறைமையுடனான உயர்ந்த மட்ட சுயாட்சியை சமஷ்டி அடிப்படையில் பெற்றுக்கொள்வதே தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் நோக்கமாகும். ஆனால், இலங்கையில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லவே இல்லை என்றும் பொருளாதார பிரச்சினையே இருக்கிறது என்றும் ஜனாதிபதி மிகவும் திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில் இனப்பிரச்சினைக்கான நிரந்தரமான தீர்வு தொடர்பில் சர்வதேச ரீதியாக ஒரு சர்வஜன வாக்கெடுப்பை நடத்துமாறு சர்வதேச நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்துவதை தவிர எமக்கு வேறு எந்தத் தெரிவுமே இல்லை. எரித்திரியாவில் 1990ஆம் ஆண்டு தொடங்கியதுமுதல் பிரித்தானியாவில் ஸ்கொட்லாந்து, கனடாவில் கியூபெக், கிழக்கு திமோர், சூடான் என்று பல நாடுகளில் பிணக்குகள் மற்றும் தேசிய இனங்களின் அதிகாரங்களை தீர்மானித்துக்கொள்வதற்கு சர்வஜன வாக்கெடுப்பை சர்வதேச சமூகம் நடத்தியிருக்கின்றது. ஆகவே, இலங்கையில் எத்தகைய ஒரு தீர்வு தமக்கு வேண்டும் என்பதை தமிழ்ப் பேசும்மக்கள் தீர்மானிக்கும் வகையில் சர்வதேச சமூகம் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவேண்டும் என்று கோரிதமிழ் மக்கள் தேசிய கூட்டணி அரசியல், ராஜதந்திர ரீதியாக அர்ப்பணிப்புடன் செயற்படும். மேலே, நாம் குறிப்பிட்ட சமஷ்டி அடிப்படையிலான தீர்வு இந்த சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் தெரிவுகளில் ஒன்றாக இருக்கும்.
அதேவேளை, இறுதி தீர்வை எட்டும்வரை யுத்தத்தினால் அழிவடைந்த வடக்கு கிழக்கு பிரதேசங்களை மீள கட்டியெழுப்புவதற்காக ஒரு இடைக்கால தீர்வினை சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையுடன் ஏற்படுத்துவதற்கு இந்தியா மற்றும் சர்வதேச நாடுகளுடன் நாம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்போம்.
2. இனஅழிப்பு நடைபெற்று 10 வருடங்கள் கடந்துள்ளபோதிலும் போர்க்குற்றம், மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள்மற்றும் இனஅழிப்புகுற்றங்கள் ஆகியவற்றுக்கு நீதி கிடைக்கவில்லை. அதேசமயம், ஐ. நா மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட 30/1 கருத்தொருமித்த தீர்மானத்தில் இருந்து இலங்கை அரசாங்கம் விலகுவதாக அறிவித்துள்ள நிலையில் இலங்கையிடம் இருந்து நீதியையும் நியாயத்தையும் எதிர் பார்க்க முடியாது. இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்துமாறு சர்வதேச நாடுகளை வலியுறுத்துவதே எமக்கு எஞ்சியுள்ள ஒரே வழி. இதற்கான சகல நடவடிக்கைகளையும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி மேற்கொள்ளும்.
3. வடக்கு கிழக்கில் வாழ்ந்துவரும் 90,000 விதவைகளின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கில் 'வாழ்வாதாரத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த இருக்கிறோம். இதற்கு முன்னோடியாக "தேவைகள் மதிப்பீடு" ஒன்றை விதவைகள் மத்தியில் நாம் விரைவில் நடத்த இருக்கின்றோம்.
4. காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகள் தொடர்பில் நாம் மிகுந்த கரிசனை கொண்டுள்ளோம். இவர்களின் பிரச்சினைகளைக் கையாளும்வகையில் சட்டவல்லுனர்கள் குழு ஒன்றை நாம் அமைக்க இருக்கின்றோம். இன அழிப்பு தொடர்பில் சர்வதேச ரீதியான சுயாதீன விசாரணை ஒன்று நடத்தப்படும்பொழுதே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம். இதனடிப்படையில், சர்வதேச விசாரணை ஒன்றை இயன்றளவு விரைவாக கொண்டுவருவதற்கு நாம் பாடுபடுவோம். அதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் பிரச்சினைகளை அறிந்து புலம்பெயர் தமிழ் மக்கள் மற்றும் சர்வதேச அமைப்புக்கள் ஆகியவற்றின் உதவியுடன் அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.
5. பல வருடங்களாக சிறைகளில் வாழும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்யும் பொருட்டு சட்ட வல்லுநர்கள் குழு ஒன்றை விரைவில் அமைத்து செய்யக்கூடிய எல்லா வழிமுறைகளையும் மேற்கொள்வோம். குறிப்பாக பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவதற்கு உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பாடுபடுவோம். அதே சமயம் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துடன் இவர்களின் விடுதலை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவோம். பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்படும் எமது உறுப் பினர்கள் ஐ. நா, சர்வதேச நாடுகள், சர்வதேச அமைப்புக்கள், இந்திய அரசு ஆகியவற்றுடன் இது விடயத்தில் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்துவார்கள்.
6. உலகில் உச்சளவு இராணுவமயமாக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாக வடக்கு- கிழக்கு தொடர்ந்து காணப்படுகின்றது. தனியார் காணிகளில் இருந்து மட்டுமன்றி வடக்கு - கிழக்கில் இருந்து இராணுவம் வெளியேற்றப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. 1983ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் இருந்த நிலைகளுக்குள் இராணுவம் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று பாராளுமன்ற மட்டத்திலும் ஐ.நா. மட்டத்திலும் நாம் வலியுறுத்துவோம். போரின் போது இராணுவத்தினர் தொகை பெருமளவு அதிகரித்துள்ளமை தெரிந்துள்ளதால் அவர்களைச் சிங்களப் பிரதேசங்களுக்கு அனுப்பக் கோருவோம்.
7. சர்வதேச சட்டங்களின் அடிப்படையில் இங்கு நடைபெறும் நில ஆக்கிரமிப்பு மற்றும் பௌத்த மயமாக்கல் நடவடிக்கைகள் பாரிய மனித உரிமை மீறல்களாகும். ஐ. நா, சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் ஆகியவற்றின் கவனத்தை இந்த விடயத்தில் ஈர்த்து அவர்கள் இதுதொடர்பில் ஆய்வுகளையும் கண்காணிப்பு அறிக்கைகளையும் வெளியிட்டு அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை பிரயோகிக்க நடவடிக்கைகளை எடுப்போம். அதேவேளை, இலங்கை சட்டத்துக்கு உட்பட்ட ரீதியில் மேற்கொள்ளக்கூடிய அனைத்து முயற்சிகளையும் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக நாம் எடுப்போம். குறிப்பாக, ஐ. நா மனித உரிமைகள் சபையில் தமிழர் பகுதிகளில் நில ஆக்கிரமிப்பை நிறுத்தும் தீர்மானம் ஒன்றை கொண்டுவருவதற்கும் நில ஆக்கிரமிப்பு தொடர்பில் ஐ. நா விசேட பிரதிநிதி ஒருவரை நியமிப்பதற்கும் நாம் முயற்சிகள் மேற்கொள்வோம்.
8. தமிழ் மக்களின் பொருளாதார அபிவிருத்தி, கல்வி, விளையாட்டு மற்றும் கலாசார மேம்பாட்டை ஏற்படுத்துவதில் நாம் கூடுதல் கரிசனையுடன் செயற்படுவோம். இதுதொடர்பில் பல்வேறு கட்டமைப்பு ரீதியான திட்டங்களை நாம் வகுத்துள்ளோம். இவற்றை நிறைவேற்ற அரசாங்கத்திடம் இருந்து பெறக்கூடிய அனைத்து வளங்களையும் நாம் பெறுவதுடன் தமிழகம், புலம்பெயர் மக்கள் ஆகியோரின் உதவிகளை ஒன்றிணைக்க இருக்கின்றோம். தமிழ் நாட்டுடனான உறவுகளை வலுப்படுத்தி எமது பகுதிகளில் தொழிவாய்ப்புக்களை ஏற்படுத்தும் முதலீடுகளை மேற்கொள்வதற்கு நாம் விசேட கவனம் செலுத்துவோம். எமது எல்லா முயற்சிகளும் நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
9. 1958ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரை தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் வடக்கு கிழக்கு பகுதிகளில் அருங்காட்சியகங்கள் மற்றும் நினைவு ஸ்தூபிகளை அமைக்க நாம் நடவடிக்கை எடுப்போம்.
10. சர்வதேச ரீதியில் எல்லா நாடுகளுடனும் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார மேம்பாட்டை ஏற்படுத்தவும் நாம் தொடர்புகளைப் பேணுவோம். இதில் இந்தியா முக்கியமானது. இலங்கையில் தமிழ் மக்களின் பாதுகாப்பையும் அவரகளின் சுயநிர்ணய உரிமையினையும் உறுதிப்படுத்துவது மட்டுமன்றி வடக்கு கிழக்கின் சமூக,பொருளாதார மறுமலர்ச்சிக்கு இந்தியா காத்திரமான ஒரு வகிபாகத்தை மேற்கொள்ளவேண்டும். இதற்கான சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம். குறிப்பாக, பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு,மற்றும் இந்தியாவிற்கும் காங்கேசன்துறை, திருகோணமலை, தலைமன்னார் ஆகியவற்றுக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்து ஆகிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தமிழ் மக்கள் தேசிய கூட்டணி நடவடிக்கைகளை எடுக்கும்.

### இறுதியாக ஒரு வேண்டுகோள்

சுயநலம் மற்றும் சலுகைகள் ஆகியவற்றுக்கு அப்பால், தமிழ் தேசிய கூட்டமைப்பின் சகல தோல்விகளுக்கும் தவறுகளுக்கும் முக்கியமான ஒரு காரணம் ஒரு சிலர் தமது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப மொத்தத் தமிழ் மக்கள் சம்பந்தமானமுடிவுகளை எடுத்து செயற்பட்டமை ஆகும். அந்தத் தவறை நாம் விடப்போவதில்லை. அதனால் தான் எமது செயற்பாடுகள் நிறுவன ரீதியான கட்டமைப்புக்களின் ஊடாக நன்கு ஆராயப்பட்டு முன்னெடுக்கப்படவிருக்கின்றது. நிறுவனமயப்படுத்தல் என்னும்பொழுது அரசியல் தீர்வு விடயம் பற்றியதானதாகவுஞ்சரி, சமூக, பொருளாதார மேம்பாடு சம்பந்தமானதுஞ் சரி எதுவானதாக இருந்தாலும் அவற்றுக்கான செயற்பாடுகளின் நிலைத்துநிற்கும் தன்மையும் உபாயங்களும் தனி ஒருவரில் தங்கி இருக்காமல் அந்த நோக்கங்கள் தொடர்பிலான கோட்பாடுகள் மற்றும் நடைமுறைகளின் மீதான கூட்டுப்பொறுப்பிலும் பற்றுறுதியிலும் தங்கி இருத்தலாகும். இதன் அடிப்படையில், உலகளாவிய ரீதியில் பரந்து வாழும் தமிழ் புத்திஜீவிகளை ஒருங்கிணைத்து நிலத்திலும் புலத்திலும் கட்டமைப்புக்களை உருவாக்கி செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம். நாம் மேலே குறிப்பிட்டுள்ள வாக்குறுதிகளை இந்த நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளே பெற்றுத்தரும்.

ஆகவே, வடக்கு கிழக்கில் வாழுகின்ற எமது அன்புக்கினிய மக்களே! தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படி அமையப்போகின்றது என்ற விதியை தீர்மானிக்கும் முக்கிய தேர்தலாக எதிர்வரும் தேர்தல் அமைகின்றது. உங்கள் வாக்குகள் தான் அந்த விதியை எழுதப்போகின்றன. நீங்கள் எழுதும் விதி வடக்கு- கிழக்கில் "மீனாட்சி" மலர்வதற்கானதாக இருக்கட்டும்! நாம் ஒருபோதும் தமிழ் மக்களின் உரிமைகள், நல்வாழ்வு, பாதுகாப்பு ஆகியவற்றுக்கான எமது பற்றுறுதியில் இருந்து' தளரமாட்டோம். தயவுசெய்து "மீனுக்கு" புள்ளடி இடுங்கள். உங்களின் வாக்குகள் எமது தமிழ் மக்களின் அரசியல் சமூக, பொருளாதார மாற்றுக்கும் எமது கலாசார அபிலாஷகளை வென்றெடுப்பதற்கும் வலுவூட்டுவதாக அமையட்டும்! இனப்படுகொலைக்கு நீதியை பெற்றுத் தருவதாக அமையட்டும்! நீதிமான் விக்னேஸ்வரன் அவர்களை பலப்படுத்துவதாக அமையட்டும்! உங்களை ஏமாற்றியவர்களுக்கு பாடம் புகட்டுவதாக அமையட்டும்! நீங்கள் சென்றமுறை வழங்கிய அதிகாரத்தை அரசாங்கத்துக்கு முண்டுகொடுத்து சலுகைகளை அனுபவித்தவர்களுக்கு தண்டனை வழங்குவதாக அமையட்டும்!

இப்படிக்கு,

**தமிழ் மக்கள் தேசிய கூட்டணி**



(C-027)

# மஞ்சள், உழுந்தின் இறக்குமதித் தடையை நீக்குமாறு பிரதமரிடம் யாழ்.வணிகர் கழகம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்ட கொரோனா தாக்கத்தால் மஞ்சள் மற்றும் உழுந்துக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்ற நிலையில் அவற்றுக்கான இறக்குமதித் தடையை நீக்குமாறு வலியுறுத்தி யாழ்.வணிகர் கழகம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளது. அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கொரோனாத் தாக்கத்திற்கு முன்பு மார்ச் மாதம் வரை மஞ்சள் 400 ரூபாவாகவும், உழுந்து 300 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்போது அதன் விலைகள் மிக அதிகரித்து மஞ்சள் ஒரு கிலோ கிராம் 3000 ரூபாவாகவும், உழுந்து ஒரு கிலோ கிராம் 600 ரூபாவாகவும் விற்கப்படுகிறது.

அத்துடன் மஞ்சள் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அறிகின்றோம். நாட்டில் தற்போது மஞ்சள் போதியளவு உற்பத்தி செய்யப்படவில்லை.

மஞ்சள் உற்பத்தியில் தன்னிறைவை அடையும் வரை மஞ்சளைத் தடை செய்யாது இறக்குமதிக்கு அனுமதிக்கும்படி தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். தற்போது ஏற்பட்டுள்ள கொரோனாத் தாக்கத்தின் எதிரொலியாக பொதுமக்கள் நோயெதிர்ப்பு சக்தியுள்ள மஞ்சளை அதிகளவில் பாவனை செய்கின்றார்கள்.

ஆகவே இவ் விடயத்தினையும் கருத்தில் எடுத்து மஞ்சளுக்கான இறக்குமதித் தடையை நீக்கி தாராளமாக மஞ்சள் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அதேவேளை உழுந்தும் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிகிறோம். கடந்த மார்ச் மாதம் விற்பனை செய்த விலையில் இருந்து 100 வீதமாக அதிகரித்து சுமார் 600 ரூபா அளவில் விற்கப்படுகிறது.

தற்போது நாட்டில் உழுந்து உற்பத்தி போதியளவில் இல்லை. சாதாரண ஏழை மக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகையால் அதன் இறக்குமதித் தடையை நீக்கி பொதுமக்களுக்கு இவை குறைந்த விலைக்குக் கிடைக்கக்கூடியதான ஏற்பாடுகளை செய்து தருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான தீயணைப்பு வாகனம் கடந்த 16.06.2020 தீயணைப்புச் சேவைக்குச் சென்றபோது விபத்துக்குள்ளாகி முழுமையாக சேதமடைந்து காணப்படுகிறது. யாழ்.மாவட்டம் முழுவதும் சேவை செய்த தீயணைப்பு வாகனம் அவ்விபத்தின் பின் முழுமையாக செயலிழந்து உள்ளதனால் உடனடியாக யாழ்.மாநகர சபைக்கு தீயணைப்பு வாகனத்தை பெற்றுத் தரக் கோரியும் கடிதம் ஒன்றினை பிரதமர் மகிந்தராஜ பக்ஷாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஜ-5)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு



(கரணவாய்)

முன்பள்ளிகளை பாதுகாப்புடன் மீளத்திறப்பதற்கான விழிப்பூட்டல் கருத்தமர்வு பருத்தித்துறை வலயக்கல்வி அலுவலக முன்பள்ளிகளுக்கான உதவிக்கல்விப் பணிப்பாளரின் ஏற்பாட்டில் நேற்று முற்பகல் பருத்தித்துறை பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் சுமார் 50 முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (4-5-8-60)

# தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த 164 பேர் சொந்த இடங்களுக்கு

(நெளுக்குளம்)

வெளிநாடுகளிலிருந்து இலங்கை வந்து வவுனியா பெரியகட்டு மற்றும் பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த 164 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

கொவிட்-19 நோய்த் தாக்கம் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித்தவித்த இலங்கையர்களை நாட்டிற்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அரசினால் முன்னெடுக்கப்படுகிறது.

அந்த வகையில் கடந்த 27 ஆம் திகதி அமெரிக்கா, பிரித்தானியா, சிங்கப்பூர், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலிருந்து அழைத்து வரப்பட்டவர்கள் வவுனியா பெரியகட்டு மற்றும் பம்பைமடு தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அழைத்து வரப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர்.

அவர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவுசெய்த நிலையில், பெரியகட்டு முகாமிலிருந்து 72 பேரும் பம்பை மடு முகாமிலிருந்து 92 பேரும் அவர்களது சொந்த இடங்களான புத்தளம், காலி, மாத்தறை, களுத்துறை போன்ற பகுதிகளிற்கு பேருந்துகள் மூலம் நேற்று அனுப்பிவைக்கப்பட்டனர்.

பி.சி.ஆர். பரிசோதனைகளில் அவர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (4-5-299)

# மதுபானப் போத்தல்களை கைப்பற்றிய பொலிஸார்

(கரணவாய்)

வடமராட்சியில் பேருந்தொன்றிலிருந்து 180 மில்லி லீற்றர் அளவுடைய 50 மதுபானப் போத்தல்கள் பருத்தித்துறை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

பருத்தித்துறையிலிருந்து கட்டைக்காடு நோக்கிச் செல்லும் பேருந்தில் சந்தேகத்திற்கிடமான பொதியொன்று காணப்பட்டதையடுத்து பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் பொதியை பரிசோதித்து அதிலிருந்த 180 மில்லி லீற்றர் அளவுடைய 50 மதுபானப் போத்தல்களைக் கைப்பற்றினர். (8-60)

# மணல் ஏற்றியவர்கள் ஓட்டம்; உழவு இயந்திரம் பறிமுதல்

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாலாவி வடக்கு கட்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை உழவு இயந்திரம் ஒன்று மணலுடன் கொடிகாமம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

குறித்த பகுதியில் மணல் ஏற்றப்படுவதாக கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து அவ் இடத்திற்கு பொலிஸார் சென்ற போது சாரதியும் உதவியாளரும் தப்பி ஓடியுள்ளனர்.

அங்கு மணலுடன் நின்ற உழவு இயந்திரத்தை பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றதுடன் விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (2-114)



சாவகச்சேரியில், கல்வயல், நுணாவில் பகுதிகளுக்கான தாய்-சேய் பராமரிப்பு நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இதில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.சுதோக்குமார் கலந்து கொண்டார். பிரித்தானியாவில் வைத்தியராக கடமையாற்றும் வைத்தியர் சிவலிங்கம் சிவதாசன் குறித்த வீட்டை இலவசமாக வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

(படம்: சாவகச்சேரி செய்தியாளர்)

# யாழ்.நகரில் கழிவுகள் அகற்ற களமிறங்கும் 250 படையினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றி சுற்றுச்சூழலை சுத்தப்படுத்தும் பணி முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் வணிகசூரிய தலைமையில் 250 படையினரின் பங்களிப்புடன் தூய்மைப்படுத்தும் பணி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

யாழ்.நகரில் 9 பிரதான இடங்களில் காணப்படும் பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுப் பொருட்களை அகற்றி நகரைச் சுத்தப்படுத்தும் நோக்குடன் இந்தப் பணி முன்னெடுக்கப்படுகின்றது. (4-5)

# "த நியூஸ் பேப்பர்" அமெரிக்க விருது ஜனாதிபதியிடம் கையளிப்பு



(கொழும்பு)

"த நியூஸ் பேப்பர்" திரைப்படம் அமெரிக்காவில் இடம்பெற்ற The Indie FEST Film விருது விழாவில் விசேட பாராட்டு விருதை பெற்றுள்ளது.

இத்திரைப்படத்திற்கு கிடைத்த விருது சான்றிதழ் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடமும் கையளிக்கப்பட்டது.

இத்தாலி அமெரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, லெபனான், சிரியா, சுவிட்சலாந்து மற்றும் இங்கிலாந்து உள்ளிட்ட பல நாடுகள் இந்த விருது விழாவிற்கு படைப்புகளை சமர்ப்பித்திருந்தன.

விடுதலை, சமூக நீதி மற்றும் எதிர்ப்பு மனோ நிலையை வெளிப்படுத்தும் சிறந்த படைப்பாக "த நியூஸ் பேப்பர்" திரைப்படம் The Indie FEST Film குழுவின் பாராட்டைப் பெற்றது.

"த நியூஸ் பேப்பர்" திரை படம் சரத் கொத்தலாவல மற்றும் குமார, திரிமாதுர ஆகியோரின் இயக்கத்தில் உருவானதாகும். அமைச்சர் பந்துல குணவர்த்தன, ரவீந்திர குருகே மற்றும் எச்.டி.பிரேமசிறி ஆகியோர் இதன் இணைத் தயாரிப்பாளர்கள் ஆவர். (ஜ-4)

## கலைப்பீடம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
## பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா கற்கைநெறி

# பரீட்சைகள் 2018/2020
# (பகுதிநேரம்-I) இரண்டாம் அரையாண்டு

09.03.2020 அன்று இடைநிறுத்தப்பட்ட மேற்படி பரீட்சையானது எதிர்வரும் ஜூலை 18, 19 ஆம் திக்திகளில் நடைபெறும்.

மாணவர்கள் அனுமதி அட்டையுடன் பரீட்சைக்கு சமுகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பரீட்சைக்கான நேர அட்டவணையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

(C-9863)

**பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## Faculty of Management Studies & Commerce, University of Jaffna, Sri Lanka

**Bachelor of Business Administration / Bachelor of Commerce**
**1st Year 2nd Semester Examinations - 2018**
**1st Year 1st Semester Examinations - 2018 Repeat (New / Old Syllabus)**

The above examinations cancelled due to unavoidable circumstances have been rescheduled as follows. Please find further details from our website, http://www.maco.jfn.ac.lk/.

| Examination | Date |
|---|---|
| 1st Examination in Business Administration 2nd Semester – 2018 | 20th July 2020 |
| 1st Examination in Commerce 2nd Semester – 2018 | 21st July 2020 |
| 1st Examination in Business Administration, 1st Semester - 2018 (Repeat) | 22nd - 30th July 2020 |
| 1st Examination in Commerce, 1st Semester - 2018 (Repeat) | 22nd -29th July 2020 |
| 1st Examination in Business Administration, 1st Semester - 2018 Repeat (Old Syllabus) | 24th July 2020 |

**Registrar, University of Jaffna.** (C-9864)

உ
சிவமயம்

# ஆச்சார்ய அபிஷேக அழைப்பிதழ்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவின் திருஉரு சிந்தித்தல்தானே

அன்புடையீர்!
ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான சார்வரி வருடம் ஆனி மாதம் 28ம் நாள் (12.07.2020) ஞாயிற்றுக்கிழமை ஸப்தமி திதியும் உத்தரட்டாதி நட்சத்திரமும் அமிர்தயோகமும் கூடிய காலை 6.24 முதல் 8.20 மணி வரையுள்ள மிதுனலக்ன சுபமுகூர்த்த வேளையில்

*கீரிமலை நகுலேஸ்வர ஆதீனத்தைச் சேர்ந்த கார்த்திகேயக்குருக்கள் சாரதாம்பாள் தம்பதியரின் பௌத்திரனும் மாவை ஆதீனம் துரைச்சாமிக் குருக்கள் விசாலாட்சியம்மா தம்பதியரின் தௌஹித்திரனும் கோப்பாய் ப்ரம்மஸ்ரீ மங்களேஸ்வரசர்மா இலட்சுமியம்மாள் தம்பதியரின் மருகரும் எமது ஜேஷ்ட புத்திரனுமாகிய*

# ப்ரம்மஸ்ரீ சுப்பிரமணிய சர்மாவிற்கு

ஸ்ரீ நகுலேஸ்வரப்பெருமான், ஸ்ரீ மாவைக்கந்தன், ஸ்ரீ விஸ்வநாதப் பெருமான், ஸ்ரீ லங்னவ் விநாயகர், ஸ்ரீ கோப்பாய் முத்துமாரி அம்பாள் திருவருட் துணையுடனும் பெரியோர்களின் ஆசியுடனும் சமய, விசேட, நிர்வாண தீக்ஷை ஆச்சார்ய அபிஷேகம் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப ஸமேதராக வருகை தந்து ஆசி வழங்கி/ ஆசி பெற்று கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்பாக அழைக்கின்றோம்.

**தீக்ஷா மண்டபம்**
**நவாலி- அட்டகிரி**
**விசாலாட்சி அம்பாள் சமேத**
**ஸ்ரீ விஸ்வநாதீஸ்வரர்**
**தேவஸ்தானம்**


**தீக்ஷா குரு**
**வேதசிவாகமஞானபானு**
**சிவஸ்ரீ.மு.சோமசுந்தரக்குருக்கள்**
**உரும்பிராய்**

சுபம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
**சிவஸ்ரீ. கா.துரைச்சாமிக்குருக்கள் அகிலாண்டேஸ்வரி தம்பதியர்**
அட்டகிரி வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்
+94778458448, +41795510062

(3251)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்களின்
மக்கள் நலன் நடவடிக்கைகளை
கண்காணித்து தரவரிசைப்படுத்தும்
அமைப்பான MANTHRI.LK இன்
மக்கள் சேவையாளர்கள் தரவரிசையில்
இலங்கை பூராகவும் தெரிவு செய்யப்பட்ட
25 பாராளுமன்ற உறுப்பினர்களில்

*கௌரவ அமைச்சர்*
## டக்ளஸ் தேவானந்தா

அவர்கள் இலங்கை தீவில் 6வது இடத்திலும்
யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலாவது
இடத்திலும் தெரிவு செய்யப்படுள்ளார்.

**இவ்விருது பெற்றதை**
**பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

(3255)

**பாராட்டி வாழ்த்துவோர்:**
**வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம், சங்கானை.**

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா: 43 செவ் 1 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BBA, MBA, அரச வங்கி உதவி முகாமையாளர்<br>எதிர்பார்ப்பு: தனியார், அரச உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/10938 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 51 செவ் 3 இல் உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: கல்வியியற்கல்லூரி ஆசிரியை<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் உடையவர் மட்டும்<br>தொ.இ: G/10978 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: செவ் 8 இல் உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: QS, Digital marketing (private)<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/10941 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 1<br>கி.பா: 53 செவ் 1 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: முகாமைத்துவ பட்டதாரி DEMO<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் அல்லது வெளிநாட்டு மணமகன்<br>தொ.இ: G/10979 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 1<br>கி.பா: செவ் 10 இல் உயரம்: 180cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி பல்கலைக்கழக விரிவுரையாளர் (அரச)<br>எதிர்பார்ப்பு: கணக்காளர், ஆசிரியர், விரிவுரையாளர் போன்ற உத்தியோகத்தர்<br>தொ.இ: B/10942 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 18 1/2 செவ் 8 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: வலயக் கல்விப் பணிப்பாளர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த உள்நாட்டு வரன்<br>தொ.இ: G/10981 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: 24 செவ் 12 இல் உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:க.பொ.த.உ/த. சாரதி (இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10944 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: செவ் 12 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. I.T Trainning RDH (gov)<br>எதிர்பார்ப்பு: அரச, உயர் தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/10983 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்


# நாம் வாழும் பூமி



பூமியின் மத்திய பகுதியில் உருகிய நிலையில் உலோகக் குழம்பு காணப்படுவதால் பெருமளவு வெப்ப சக்தியை அது கொண்டுள்ளது. பூமியின் உட்புறவெப்பம் கிரகங்களின் சேர்க்கையினால் (**planetary accretion**) உண்டாகிய மிதவெப்பத்தாலும் (சுமார் 20%) மற்றும் அணுச் சிதைவுகளாலும் - **Radioactive decay(80%)** உருவாகியுள்ளது. அணுச் சிதைவு என்பது கதிர் வீச்சினால் அணுவென்று தனது ஆற்றலை இழக்கும் செயல் முறையாகும். அதாவது உறுதியற்ற ஒரு கரு உறுதியடைய முனைகையில் சில கதிர்வீசல்களை வெளியிட்டு உறுதியடைய முயலும். பூமியில் அதிகமான வெப்பத்தை உருவாக்கும் ஐசோடோப்புகளாக (**isotopes**) பொட்டாசியம் (**potassium**) - 40, யுரேனியம் - 238,யுரேனியம் (**uranium**) - 235 மற்றும் தோரியம் (**thorium**) - 232 என்பன காணப்படுகின்றன.

எல்லா அணுக் கருக்களும் உறுதியானவையல்ல. உறுதியில்லாத கருக்கள், துணிக்கைகள், துணிக்கைகள், மற்றும் கதிர்கள் ஆகியவற்றைச் சுயமாகக் காலுவதன் மூலம் வேறு கருக்களாக நிலைமாறுகின்றன. இத்தகைய உறுதியில்லாக் கருக்கள் கதிர்த் தொழிற்பாட்டுக் கருக்கள் எனப்படும். பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பெக்ரல் என்பவரால் 1896 ஆம் ஆண்டில் இத் தோற்றப்பாடு கண்டுபிடிக்கப்பட்டது.

துணிக்கைகள் பருமனில் பெரிதாக இருப்பதால் எமது கைகளால் இலகுவாகத் தடுக்க முடியும். துணிக்கைகள் இலத்திரனுக்கு ஒப்பானதால் அவை எமது கைகளை இலகுவில் ஊடுருவக்கூடியன. எனினும் அதனை ஓர் அலுமினியத் தகட்டால் தடுக்கமுடியும். ஆனால் $\gamma$ கதிர்களுக்கு ஏற்றமோ திணிவோ இல்லாமையால் இவை அலுமினியத் தகட்டையும் ஊடுருவக்கூடியது. மிகவும் அடர்ந்த மூலகமான ஈயக் குற்றியால் கதிர்களை உறிஞ்சச் செய்ய முடியும். எனினும் 100% ஆன $\gamma$ கதிரையும் முழுமையாக ஈயக் குற்றியால் உறிஞ்சச் செய்ய முடியாது.




தரப்பட்டுள்ள கதிர்த் தொழிற்பாட்டுமாதிரியொன்றின் தேய்வு வீதம் அதன் தொழிற்பாடு (**Activity**) எனப்படும். அதாவது ஒருசெக்கனில் தேய்வடையும் கருக்களின் எண்ணணிக்கை அச்சமதானியின் தொழிற்பாடு எனப்படும்.

இது மாதிரியிலுள்ள உறுதியில்லாக் கருக்களின் எண்ணிக்கை N இற்குநேரடி விகித சமனாகும். இத் தொழிற்பாட்டு விதியை $A=\lambda N$ என எடுத்துரைக்கலாம். இங்கே $\lambda$ ஆனது தேய்வு மாறிலியும் T ஆனது அரை ஆயுட் காலமும் ஆகும்.

ஒரு சமதானிக் கரு, அடுத்த செக்கனில் பிரிந்தழிவதற்கான நிகழ்தகவு அதன் தேய்வு மாறிலி ($\lambda$) என வரையறுக்கப்படும். மேலும் ஒரு கதிர்த் தொழிற்பாட்டு மாதிரியிலுள்ள கருக்களின் எண்ணிக்கை அரைவாசியாக எடுக்கும் காலம் அரை ஆயுட் காலம் (**Half Life Time**) எனப்படும்.

உதாரணமாக ஒரு சமதானியில் தற்போது 10,000 அணுக்கள் உள்ளன எனக் கொள்ளின், அதிலுள்ள அணுக்களின் எண்ணிக்கை 5000 ஆகக் குறைவதற்கு எடுக்கும் காலம் அதாவது அரைவாசியாவதற்கு எடுக்கும் காலம் அச்சமதானியின் அரை ஆயுட் காலம் எனலாம். இதன் பெறுமதி ஒரு சில செக்கனிலிருந்து பல வருடங்கள் வரை சமதானிக்குச் சமதானி வேறுபட்டிருக்கும்.

உயிர்ச் சுவடுகளின் வயதைத் துணியப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பமாகிய கதிர்க் காபன் தேதியிடல் கதிர்த் தொழிற்பாட்டின் முக்கிய பிரயோகமாகும். பின்வரும் அட்டவணை ஒரு சில சமதானிகளின் அரைவாழ்வுக் காலத்தை வெளிப்படுத்துகின்றது.

| சிலசமதானிகளின் அரைஆயுட் காலங்கள் | |
|---|---|
| பெரிலியம் - 11(beryllium-11) | 13 81Sec |
| போரன் -7 (boron-7) | $350 \times 10^{-24}$ seconds (yoctoseconds) |
| போரன் - 9 (boron-9) | $80 \times 10^{-21}$ seconds (zeptoseconds) |
| காபன் - 21 (carbon-21) | $30 \times 10^{-9}$ seconds (nanoseconds) |
| காபன் - 22 (carbon-22) | $6.2 \times 10^{-3}$ seconds (milliseconds) |
| பொஸ்பரஸ் - 32 (phosphorus-32) | $1.235 \times 10^{6}$ seconds (megaseconds) |
| யூரேனியம் - 232 (uranium-232) | $2.17 \times 10^{9}$ seconds (gigaseconds) |
| காபன் - 14 (carbon-14) | 5730 years |

வளியில் இருக்கும் ஒரு நைதரசன் அணுவுக்கும் அண்டக் கதிர்களில் இருக்கும் ஒரு நியூத்திரனுக்குமிடையே நிகழ்ந்து ஒரு புரோத்தனைக் காலும் கருத்தாக்கத்தின் விளைவாகப் புவியின் வளிமண்டலத்திலே தொடர்ச்சியாகக் கதிர்த் தொழிற்பாட்டுக் காபன் $^{14}_{6}C$ உண்டாகின்றது.

பின்னர் இந்த $^{14}_{6}C$ அணு 5730 ஆண்டுகள் ($=1.8\times10^{11}s$) என்னும் அரை ஆயுட்காலத்

$$^{1}H + ^{16}O \rightarrow ^{13}N + ^{4}He$$

துடன் ஒரு $\beta$ துணிக்கையைக் காலுவதன் மூலம் நைதரசனாகத் தேய்கின்றது. இவ் விரு செய்முறைகளின் விளைவாகவும் வளிமண்டலத்தில் $^{14}_{6}C$ உண்டாகும் வீதத்திற்கும் அது தேயும் வீதத்திற்குமிடையே நாப்பம் (சமநிலை) இருக்கின்றது. கடந்த சில ஆயிரம் ஆண்டுகளிலே புவியின் வளிமண்டலத்தின் அமைப்பும் அண்டக் கதிர்களின் பாயமும் கணிசமான அளவில் மாறவில்லை. ஆகையால், வளிமண்டலக் காபனீரொட்சைட்சைட்டில் $1/10^{12}$ ஆக இருக்கும் விகிதம்

$$\frac{^{14}_{6}C \text{ அணுக்களின் எண்ணிக்கை}}{^{12}_{6}C \text{ அணுக்களின் எண்ணிக்கை}},$$

ஆனது இக் காலத்தில் மாறிலியாக இருக்கின்றதெனக் கருதலாம். உயிருள்ள தாவரங்களும் விலங்குகளும் வளிமண்டலத்திலிருந்து காபனைப் பெற்றுக் கொள்கின்றமையால் அவை உயிருள்ளனவாக இருக்கும் வரைக்கும் அவற்றில் இருக்கும் $^{14}_{6}C$ ஆனது பிரதியிடப்படாமல் தொடர்ந்து தேயும். இதன் விளைவாகக் காலப்போக்கில் $^{14}_{6}C$ இன் சதவீதம் குறைகின்றது. கதிர்த் தொழிற்பாட்டுக் காபன் தேதியிடலிலே தரப்பட்ட அமுக்கத்திலும் வெப்பநிலையிலும் இருக்கும் வளிமண்டல $CO_2$ வாயுவின் நிலைத்தகனவளவினால் யாதாயினும் ஒரு குறித்த காலத்தில் வெளிவிடப்படும் $\beta$ துணிக்கைகளின் எண்ணிக்கையானது துணிக்கை எண்ணிக்கையைப் (**Gigar Mular Counter**) பயன்படுத்தி முதலில் அளவிடப்படும். இதிலிருந்து வளிமண்டல $CO_2$ கனவளவில் இருக்கும் $^{14}_{6}C$ இன் தொழிற்பாட்டினைக் கணிக்கலாம். பின்னர் உயிர்ச்சுவட்டின் ஒரு சிறிய பகுதியைத் தகனமடையச்செய்து அதே நிலைமைகளில் $CO_2$ இன் சமகனவளவு தயாரிக்கப்படுகின்றது.

அந்த $CO_2$ கனவளவிலிருந்து காலப்படும் $\beta$ துணிக்கைகளின் எண்ணிக்கையை அளவிடுவதன் மூலம் அவ்வுயிர்ச்சுவட்டு மாதிரியில் $^{14}_{6}C$ இன்தொழிற்பாட்டினைக் கணிக்கலாம். மேற்குறித்த தரவுகளைப்பயன்படுத்தி உயிர்ச்சுவட்டின் வயதைத் துணியலாம். பூமியின் மத்தியில் வெப்ப நிலை 7,000 கெல்வினையும் (**7000K**) மற்றும் அமுக்கம் **360GPa** (**$3.6\times 10^{11}$Pa**) ஐயும் கொண்டிருக்கலாம் என்று கணிப்புக்கள் மூலமாக அறிய முடிகின்றது.

பூமியின் வெப்பம் பெரும்பாலும் அணுச்சிதைவிலிருந்து உருவாவதால், அறிவியலாளர்களின் கருத்துப்படி பூமியின் ஆரம்பகால கட்டத்தில், அதாவது பூமி உருவாகிய காலகட்டத்தில், குறைந்த அரைவாழ்வுக் காலத்தைக் (**Half Life Time**) கொண்ட சமதானிகள் (**Isotops**) தேய்வடைந்து முடியுமுன், புவியின்வெப்பம்அதிகமாயிருந்திருக்கும் என்றும் மூன்று பில்லியன் வருடங்களுக்கு முன் தற்போதைய வெப்பத்தை விட இருமடங்கு வெப்பம் உற்பத்தி ஆகிய போது, பூமியின் வெப்பம் சார் தன்மைகள் மாறியிருந்திருக்கும் என்றும் அதிகமான மூடக பரப்பலும், டெக்டோனிக் பலகை நகர்தலும், மேலும் கோமடைட்ஸ் (**koma tiites**) என்ற தீப்பாறைகள் உருவாவதும் ஏற்பட்டிருக்கும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.


GigarMular Counter

அ.குகன், விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

# உள்ளூராட்சி சபைகளின் பரிணாமம்

12



கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர் – எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

### மாத்தளை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (13)

**மாநகர சபைகள் (2) :-** 1. மாத்தளை, 13. தம்புள்ளை

**நகர சபைகள்:- (இல்லை)**

**பிரதேச சபைகள்(11):-** 2. கலேவெல, 3.தம்புள்ளை- 4. நாவுல, 5. பல்லேபொல, 6.யட்டவத்த, 7.மாத்தளை, 8.அம்பன்கங்கை கோரளை, 9. லக்கல பல்லேகம, 10.வில்கமுவ, 11. ரத்தொட்ட, 12 .உக்குவெல

### நுவரெலியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (12)

**மாநகரசபைகள்(1):-** 1.நுவரெலியா

**நகர சபைகள்(2):-** 2.தலவாக்கலை, லிந்துல், 3. ஹட்டன திக்ஓய

**பிரதேச சபைகள்(9):-**

4.ஹங்குரான்கெத்த, 5.வலப்பனே,6.கொத்மலை, 7.அம்பகமுவை, 8. நுவரெலியா, 9.கொட்டகலை, 10. நோர்வூட், 11.மஸ்கெலியா,12. அக்கரப்பத்தனை

### காலி மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (20)

**மாநகர சபைகள் (1) :-** 1.காலி

**நகர சபைகள்(2):-** 2. ஹிக்கடுவ 3. அம்பலாங்கொடை

**பிரதேச சபைகள்(17):-** 4.பெந்தோட்டை, 5.பலபிட்டிய, 6.கரந்தெனிய, 7.எல்பிட்டிய, 8.நியாகம, 9.தவலம, 10.நெலுவ, 11.நாகொட, 12.வெலிவிட்டிய -திவிதுர, 13. அம்பலாங்கொடை, 14. ரஜகம, 15. பத்தேகம, 16. போப்பே போத்தல, 17.அக்மீமன, 18. யக்கலமுல்ல, 19.மதுாவ, 20.ஹபராதுவ

### மாத்தறை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (17)

**மாநகர சபைகள்(1) :-** 1.மாத்தறை

**நகர சபைகள்(1):-** 2.வெலிகம

**பிரதேச சபைகள்(15):-** 3.பிட்டபெத்தர, 4.கொட்டபொல, 5.பஸ்கொட, 6.முலட்டியன, 7. அத்துரலிய, 8.அக்குரெஸ்ஸ, 9.ஹக்மன, 10.கம்புறுபிட்டிய, 11.மாலிம்பட, 12.வெலிகம, 13.திஹாகொட,14.மாத்தறை, 15.தெவிநுவர, 16.கிரிந்த புஹூல்வெல்ல,17.திக்வெல்ல

### அம்பாந்தோட்டை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (12)

**மாநகர சபைகள் (1) :-** 2. அம்பாந்தோட்டை

**நகர சபைகள்(1):-** 1.தங்காலை

**பிரதேச சபைகள்(10):-** 3. கட்டுவன, 4.வீரகெட்டிய, 5. அங்குணகொலபெலெஸ்ஸ, 6.பெலிஅத்த, 7. தங்கால, 8.அம்பலாந்தோட்டை, 9. சூரியவெவ, 10. அம்பாந்தோட்டை, 11. லுனுகம்வெஹெர, 12. திஸ்ஸமஹாராம

### யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (17)

**மாநகர சபைகள் (1) :-** 1. யாழ்ப்பாணம்

**நகர சபைகள்(3):-** 2. வல்வெட்டித்துறை, 3. பருத்தித்துறை, 4. சாவகச்சேரி

**பிரதேச சபைகள்(13):-** 5.நெடுந்தீவு, 6.ஊர்காவற்றுறை, 7.காரைநகர் 8.வலிகாமம் மேற்கு, 9.வலிகாமம் தென் மேற்கு, 10.வலிகாமம் வடக்கு , 11.வலிகாமம் தெற்கு, 12.வலிகாமம் கிழக்கு, 13.வடமராட்சி தென்மேற்கு 14.பருத்தித்துறை, 15.சாவகச்சேரி, 16.நல்லூர் , 17. வேலணை

**குறிப்பு:** யாழ்ப்பாண மாநகர சபையின் தோற்றம்- 1861ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க பெருந்தெருக்கள் குழுக்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் கீழ் பெருந்தெருக்கள் குழு என்ற அமைப்பு யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டது.

பின்னர், 1898 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உள்ளூர் சபைகள் கட்டளைச் சட்டவிதிகளுக்கு அமைய முதலாவது உள்ளூராட்சிச் சபை (Local Board) உருவானது. 1920 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 1921 ஆம் ஆண்டில் இது, நகரப்பகுதிச் சபை (Urban District Council) ஆகவும், பின்னர் 1940 இல் 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நகரசபையாகவும் தரம் உயர்த்தப்பட்டது. 1949 ஆம் ஆண்டில் இது மாநகரசபை ஆனது.

### கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (3)

**மாநகர சபைகள்:-** இல்லை

**நகர சபைகள்:-** இல்லை

**பிரதேச சபைகள்(3):-**1. பூநகரி, 2. கரைச்சி, 3. பச்சிலைப்பள்ளி

### மன்னார் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (5)

**மாநகர சபைகள்:-** இல்லை

**நகர சபைகள்(1):-** 1.மன்னார்

**பிரதேச சபைகள்(4):** 2.மன்னார், 3.நானாட்டான், 4.மாந்தை மேற்கு, 5.முசலி

### வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (5)

**மாநகர சபைகள்:-** இல்லை

**நகர சபைகள்(1):-** 1. வவுனியா

**பிரதேச சபைகள்(4):-** 2. வவுனியா வடக்கு, 3. வவுனியா தெற்கு தமிழ், 4.வவுனியா தெற்கு சிங்களம், 5.வெங்கலசெட்டிக்குளம்

### முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (4)

**மாநகர சபைகள்:-** இல்லை

**நகர சபைகள்:-** இல்லை

**பிரதேச சபைகள்(4):-** 1. துணுக்காய்,2.புதுக்குடியிருப்பு, 3.மாந்தை கிழக்கு, 4.கரைதுறைப்பற்று

### மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (12)

**மாநகர சபைகள்(1):-** 1.மட்டக்களப்பு

**நகர சபைகள்(2):-** 2. காத்தான்குடி,7. ஏறாவூர்

**பிரதேச சபைகள்(9):-** 3.கோரளைப்பற்று வடக்கு,4.கோரளைப்பற்று மேற்கு, 5.கோரளைப்பற்று,6.ஏறாவூர் பற்று,8.மண்முனை மேற்கு (வவுணதீவு), 9.மண்முனை பற்று, 10.மண்முனை தென்மேற்கு, 11.போரதீவுபற்று, 12. மண்முனை தெற்கு மற்றும் எருவில்பற்று

### அம்பாறை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (20)

**மாநகர சபைகள்(2):-** 1. கல்முனை, 20.அக்கரைப்பற்று

**நகர சபைகள்(1):-** 2. அம்பாறை

**பிரதேச சபைகள்(17):-** 3. தெஹியத்தகண்டிய, 4.மகாஓயா, 5.பதியதலாவை, 6. உஹன, 7.நாவிதன்வெளி, 8.சம்மாந்துறை, 9.காரைதீவு,10.நிந்தவூர், 11.அட்டாளைச்சேனை, 12.அக்கரைப்பற்று, 13.நாமல்ஓயா,14.தமன, 15.ஆலயடிவேம்பு, 16.திருக்கோவில், 17.பொத்துவில், 18.லாஹூகல, 19. இறக்காமம்

### திருகோணமலை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (13)

**மாநகர சபைகள்:-**இல்லை

**நகர சபைகள்(2):-** 1. திருகோணமலை, 2.கிண்ணியா

**பிரதேச சபைகள்(11):-** 3.பதவிஸ்ரீபுர, 4.குச்சவெளி, 5. கோமரங்கடவல, 6.மொரவெவ, 7.திருகோணமலை பட்டினமும் சூழலும் 8.தம்பலகாமம், 9.கிண்ணியா, 10.மூதூர், 11.கந்தளாய்,12.சேருவில, 13.வெருகல்

### குருநாகல் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (21)

**மாநகர சபைகள்(1):-** 1.குருநாகல்

**நகர சபைகள்(1):-** 2. குளியாப்பிட்டி

**பிரதேச சபைகள்(19):-** 3. கிரிபாவ, 4.கல்கமுவ, 5.பொல்பித்திகம,6.மஹவ, 7.நிக்கவெரட்டிய, 8.பிங்கிரிய, 9. கோபேகனை, 10.பண்டுவஸ்நுவர, 11.வாரியப்பொலை, 12.இப்பாகமுவ, 13. ரிதீகம, 14.மாவத்தகம, 15.குருநாகல், 16.பொல்கஹவல, 17.குளியாப்பிட்டி, 18. உடுபத்தாவ, 19.பன்னல, 20.அளவ்வ, 21நாரம்மல

### புத்தளம் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (12)

**மாநகர சபைகள்:-** இல்லை

**நகர சபைகள்(2):-** 1.புத்தளம், 2.சிலாபம்

**பிரதேச சபைகள்(10):-** 3. வனாத்தவில்லு, 4.கருவலகஸ்வெவ, 5. நவகத்தேகம, 6.புத்தளம், 7.கற்பிட்டி, 8.ஆனமடுவ, 9.ஆரச்சிகட்டு,10.சிலாபம். 11.நாத்தாண்டிய, 12.வென்னப்புவ

### அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (19)

**மாநகர சபைகள்(1):-** 1.அநுராதபுரம்

**நகர சபைகள்:-** இல்லை

**பிரதேச சபைகள்(18):-** 2.பதவிய, 3.கெபித்திகொல்லாவ, 4.மதவாச்சி 5.நுவரகம்பலாத மத்தி, 6.ரம்பேவ, 7.கஹட்டகஸ்திகிலிய, 8.ஹொரவபொத்தான, 9.கலென்பிந்துனுவெவ, 10.மிஹிந்தலை, 11.நுவரகம்பலாத்த கிழ்க்கு, 12.நொச்சியாகம, 13.ராஜாங்கனய, 14.தலாவ, 15.திரப்பனே, 16. கெக்கிராவ, 17. இப்பலோகம, 18. கல்நேவ, 19.பலாகல

### பொலநறுவை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (8)

**மாநகர சபைகள்(1):-** 8. பொலநறுவை

**நகர சபைகள்:-** இல்லை

**பிரதேச சபைகள்(7):-** 1.மெதிரிகிரிய, 2.ஹிங்குரக்கொட, 3.லங்காபுர.4.வெலிகந்த, 5.பொலநறுவை, 6.எலஹர, 7.திம்புலாகல

### பதுளை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (18)

**மாநகர சபைகள்(2):-** 1. பதுளை 2. பண்டாரவளை

**நகர சபைகள் (1):-** 3. ஹப்புத்தளை

**பிரதேச சபைகள்(15):-** 4. மஹியங்கனை, 5.ரிதீமாலியத்த, 6.கன்தகெடிய, 7.மீகஹகிவுல, 8.சொரணாதொட்ட, 9. ஊவாபரணகம, 10.ஹாலியெல, 11.பதுளை, 12.பசறை, 13. எல்ல, 14.பண்டாரவளை, 15. அப்புத்தளை, 16.வெலிமட 17.ஹல்துமுள்ள, 18.லுணுகல

### மொனராகலை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (10)

**மாநகர சபைகள:-** இல்லை

**நகர சபைகள்:-** இல்லை

**பிரதேச சபைகள்(10):-** 1.பிபிலை, 2.மடுல்ல, 3.மெதகம,4.படல்கும்புர, 5.மொனராகலை, 6.சியம்பலாண்டுவ, 7. புத்தல, 8.வெல்லவாய, 9. தனமல்வில, 10.கதிர்காமம்

### இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (17)

**மாநகர சபைகள்(1):-** 1.இரத்தினபுரி

**நகர சபைகள்(2):-** 2. பலாங்கொடை,3. எம்பிலிப்பிட்டிய

**பிரதேச சபைகள்(14):-** 4. எகலியகொட, 5.குருவிட்ட, 6.அயகம, 7. இரத்தினபுரி, 8.இம்புல்பே, 9.பலாங்கொடை,10.வெலிகபொல,11. கொடக்கவெல,12.கஹவத்த,13.பெல்மடுல்ல, 14.நிவித்திகல, 15.கலவான, 16. கொலன்ன, 17. எம்பிலிப்பிட்டிய

### கேகாலை மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகள் (12)

**மாநகர சபைகள்:-** இல்லை

**நகர சபைகள்(1):-** 1. கேகாலை

**பிரதேச சபைகள்(11):-** 2.ரம்புக்கன, 3.வரக்காபொல, 4.கலிகமுவ, 5. கேகாலை, 6.மாவனல்லை, 7. அரநாயக்க, 8.புலத்கொகுப்பிட்டிய, 9. ருவன்வெல்ல, 10.யட்டியன்தொட்ட 11.தெஹியோவிட்ட,12.தெரனியகலை

(முற்றும்...)


# பாரதம்

## பாரதிய ஜனதா கட்சி தலைவர் உட்பட மூவர் சுட்டுக்கொலை

(காஷ்மீர்)

ஜம்மு-காஷ்மீர் ஸ்ரீநகரில் உள்ள பந்திபோரா மாவட்டத்தின் பாரதிய ஜனதா கட்சி தலைவராக இருந்தவர் ஷேக் வாசிம் பாரி.

நேற்று முன்தினம் பந்திபோராவில் உள்ள தனது கடையில் அப்பா மற்றும் சகோதரர் ஆகியோருடன் இருக்கும்போது பயங்கரவாதிகள் மூன்று பேர் மீதும் கண்மூடித்தனமாக சுட்டுள்ளனர்.



இதில் ஷேக் வாசிம் பாரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். படுகாயமடைந்த தந்தை மற்றும் சகோதரர் ஆகியோரை அருகில் உள்ள வைத்திய சாலைக்கு கொண்டு சென்றனர். ஆனால் சிகிச்சை பலனின்றி அவர்களும் உயிரிழந்தனர்.

ஷேக் வாசிம் பாரியின் பாதுகாப்பிற்காக 8 பொலிஸார் நியமிக்கப்படிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்படி சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்திவருகின்றனர்.(2)

## கொரோனா

## ஒப்புக்கொள

(ஜெனிவா)

**கொரோனா வைரஸ் தொற்று, காற்றி யுள்ள ஆதாரங்களை முதல்முறையாக உ**

கொரோனா வைரஸ் தொற்று, புற உலகில் ஒருவரின் தும்மல், இருமல் மூலம் வெளிப்படும் நீர்த்திவலைகள் மூலம் மற்றவர்களுக்கு எளிதில் பரவுகிறது. அத்துடன், தொற்று பாதித்த ஒருவருடன் கைகுலுக்குகிறபோது, எதிர்த்தரப்பினர் கைக்கு வைரஸ் தாவி, அவர் தனது கையை முகத்திற்கு கொண்டு போகிறபோது அது வாய், மூக்கின் வழியே நுரையீரலுக்கு பரவிவிடுகிறது. இது உலகளவில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

அதேநேரத்தில், காற்றின் வழியே கொரோனாத்தொற்று பரவும் என்ற கருத்து, கடந்த ஏப்ரல் மாதம் முதன்முறையாக எழுந்தது. ஆனால் இதை அப்போது ஒப்புக்கொள்ள உலக சுகாதார நிறுவனம் தயங்கியது.

இது குறித்து ஜெனிவா நகரில் உலக சுகாதார நிறுவனத்திடம் கடந்த செவ்வாய்க்கிழமை நிருபர்கள் கேள்விகள் எழுப்பினர்.

அப்போது உலக சுகாதார நிறுவனத்தின் நிபுணர் டாக்டர் பெனிடெட்டா அலெக்ரான்ஸி இதை ஒப்புக்கொண்டார். இது குறித்து அவர் குறிப்பிடுகையில், "காற்றின் வழியே கொரோனா வைரஸ் தொற்று பரவும் என்பது தொடர்பாக வெளியாகி உள்ள

## மீண்டும் அவுஸ்திரேலியாவில் முடக்கம்

## ஐந்து மில்லியன் மக்கள் வெளியேறத்தடை

(கன்பரா)

கொரோனா வைரஸுக்கு எதிரான அவுஸ்திரேலியாவின் போராட்டத்தின் அடுத்த கட்டம் தொடங்கியுள்ளது.

மெல்பேர்ன், மார்னிங்டன் தீபகற்பம் மற்றும் மிட்செல் ஷைர் முழுவதும் ஐந்து மில்லியன் மக்கள் அத்தியாவசிய காரணங்களைத் தவிர்த்து, அடுத்த ஆறு வாரங்களுக்கு வீடுகளை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளது.

எப்போது வேண்டுமானாலும் எங்கும் சோதனைச் சாவடிகள் அமைத்து, நகரத்தை சுற்றி பாதுகாப்பு வளையம் அமைக்கப்படுமென பொலிஸார் கூறுகின்றனர்.

விக்டோரியா மாநிலத்தில் 191 புதிய நோய்த்தொற்றுகள் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து கடந்த செவ்வாய்க்கிழமை முடக்கநிலை அறிவிக்கப்பட்டது. இது தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து அதன் மிக உயர்ந்த தினசரி எண்ணிக்கை இதுவாகும்.

முந்தைய நாட்களில் பல்பொருள் அங்காடிகளில் கொவிட்-19 தொற்று பரவல் அச்சம் இருந்ததன் காரணமாக புதிய கட்டுப்பாடுகள் நேற்று முன்தினம் முதல் புதன் கிழமை நள்ளிரவு அமுல்படுத்தப்பட்டன. (2)

## திபெத் விவகாரம்

## சீன அதிகாரிகளுக்கு விசா வழங்க அமெரிக்கா கட்டுப்பாடு

(வோஷிங்டன்)

திபெத் அணுகல் சட்டத்தின் கீழ் சீனாவின் மூத்த அரசு அதிகாரிகள் பலருக்கு விசா வழங்க அமெரிக்கா கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இதற்கான அறிவிப்பை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக்பொம்பியோ வெளியிட்டார்.

திபெத் பகுதிக்குள் சீனாவின் ஆக்கிரமிப்பும் அதிகாரமும் தொடர்வதால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், அமெரிக்க மக்கள், பத்திரிகையாளர்கள், அதிகாரிகள் யாரையும் திபெத்துக்குள் நுழைய சீனா அனுமதிப்பதில்லை. அரசு முறைப் பயணமாக அமெரிக்க அதிகாரிகள் திபெத் செல்ல முயன்றாலும் அதற்கும் சீனா அனுமதி மறுத்து வருகிறது.

இது தொடர்பாக கடந்த 2018 ஆம் ஆண்டு திபெத் அணுகல் சட்டத்தை அமெரிக்கா கொண்டு வந்தது. இந்த சட்டப்படி திபெத்துக்குள் அமெரிக்க மக்களை அனுமதிக்க மறுக்கும் சீன கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள், சீனாவின் முக்கிய அதிகாரிகளுக்கும் விசா வழங்குவதில் அமெரிக்கா கட்டுப்பாடுகளை கொண்டு வரும். இந்த சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் இது



வரை அமெரிக்கா அதை தீவிரமாகச் செயற்படுத்தாமல் இருந்து வந்தது.

இந்த நிலையில் திபெத் அணுகல் சட்டத்தின் கீழ் சீனாவின் மூத்த அரசு அதிகாரிகள் பலருக்கு விசா வழங்க அமெரிக்கா கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இதற்கான அறிவிப்பை அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பொம்பியோ கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிட்டார். இதனிடையே அமெரிக்காவுக்கு பதிலடி தரும் விதமா ஹொங்காங் விவகாரத் தலையிடுவதை காரணம் காட் அமெரிக்க மக்களுக்கு விசா கட் ப்பாடுகளை சீனா அறிவித் ளது. இதுகுறித்து சீன வெளியு அமைச்சகம் வெளியிட்டுள் அறிக்கையில், "பொருளாதா தடைகள் என்கிற பெயரி ஹொங்கொங்கின் தேசி பாதுகாப்பை பாதுகாப்பதற்கா சீனாவின் சட்டத்தை தடுக்க அ ரிக்கா முயற்சிக்கிறது.

ஆனால் அது ஒரு போது வெற்றி பெறாது. ஹொங்கொ விவகாரத்தில் தலையிடு அமெரிக்க மக்களுக்கு விசா வழங்குவதில் கட்டுப்பாடுக விதிக்கப்படுகின்றன" என அ வித்துள்ளது. (2

## உலக சுகாதார அமைப்பின் நிபுணர்குழு நாட்டிற்குள் வர அனுமதியளித்த சீனா

(பீஜிங்)

கொவிட்-19 எனப்படும் வைரஸின் தோற்றம் குறித்து கண்டறிய உலக சுகாதார அமைப்பின் (WHO) நிபுணர்கள் குழுவை பீஜிங்கிற்கு அனுப்ப சீனா நேற்று முன்தினம் அனுமதி அளித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சீன தரப்பில் ஆலோசனை இடம்பெற்ற நிலையில், நிபுணர்கள் குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பதற்கு ஒப்புக்கொள்வதாக சீனாவின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஷாவோ லிஜியன் (Zhao Lijian) தெரிவித்துள்ளார். உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா வைரஸ் சீனாவில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கண்டறியப்பட்டது. வுஹான் நகரில் உள்ள ஈரப்பதமான விலங்குகள் மற்றும் பறவைகள் விற்பனை செய்யும் சந்தையில் இருந்து வைரஸ் பரவியதாக சீனா தெரிவித்திருந்தது.

இந்நிலையில், வுஹானில் பரவத் தொடங்கிய வைரஸ் தற்போது உலகம் முழுவதும் தற்போது தீவிரமாகப் பரவியுள்ள நிலையில் இந்த வைரஸ் இயற்கையாக தோன்றவில்லை எனவும் வுஹான் உயிரியல் ஆய்வகத்தில் இருந்து பரவியது என்றும் பெரும்பாலான நாடுகள் குற்றஞ்சாட்டின.

மேலும், உலக சுகாதார அமைப்பிற்கு சீனா சரியான தகவல்களை அளிக்கவில்லை என்றும் இதுவொரு தொற்று நோய் என சீனா அறிவிக்காமல் மறைத்து விட்டது எனவு ரச்சாட்டு முன்வைக்கப்பட் ளது. இந்நிலையில் கொரோனா வைரஸ் எப்படி உருவானது என்பதைக் கண்டறிய சீனாவுக் நிபுணர்கள் குழுவை அனுப் வுள்ளதாக உலக சுகாதார அமை ப்பு அண்மையில் அறிவித்தது.

எனினும், உலக சுகாதா அமைப்பின் இந்த முடிவுக்கு சீன எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் சீனாவுடன் உலக சுகாதார அமைப்பு ஆலோசனை நடத்தி யது. இந்தச் சூழலில் தற்போது உலக சுகாதார அமைப்பின் நிபுணர்கள் குழுவை நாட்டுக்குள் அனுமதிக்க சீனா சம்மதம் தெரி வித்துள்ளது. (2)

# வலம்புரி கல்விப் பிரிவு வழங்கும்
# க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை
# கணிதம் மாதிரி வினாத்தாள்

நேரம்: 3 மணித்தியாலம் — வினாப்பத்திரம் - 01

## பகுதி - I A


1) பொருள் ஒன்றின் பெறுமதியில் 20% கழிவு வழங்கப்பட்டது. பொருளின் பெறுமதி ரூ200 எனின் கழிவு யாது?

2) வாகனமொன்று 30 நிமிடங்களில் 12km தூரம் சென்றால் அதன் கதியினை மணிக்கு காண்க.

3) $3^4 = 81$ என்பதை மடக்கை வடிவில் எழுதுக.

4) சுருக்குக. $\frac{3}{x-2} + \frac{2}{2-x}$

5) உருவிலுள்ள தரவுகளைக் கொண்டு $B\hat{A}C$ இனை காண்க.





6) ஒரு வேலையினை 4 மனிதர்கள் 6 நாட்களில் செய்து முடிப்பர். முதல் 2 நாட்களின் பின்னர் 2மனிதர்கள் விலகிச் சென்றனர். மீதி வேலையைச் செய்வதற்கு எத்தனை நாட்கள் எடுக்கும்?

7) $x^2 - 9, x(x+3)$ எனும் அட்சர கணிதகோவைகளில் பொது மடங்குகளில் சிறியது எது?

8) $\sqrt{3}$ இன் 1ம் அண்ணளவாக்க பெறுமனம் $1.7/12$ எனின் இன் 1ம் அண்ணளவாக்க பெறுமானம் யாது?

9) தரப்பட்டுள்ள தரவுகளை கொண்டு $\Delta ADE : \Delta ABC$ இற்கான விகிதம் யாது




10) A,B என்பன மூட்டற்ற தொடைகளாகும். $n(A \cup B) = 12,\ n(A) = 8$ எனின் n(B) யாது?

11) காரணிகளை காண்க. $x^2 - 2x - 24$


12) 1 தொடக்கம் 10 வரை எண்ணிடப்பட்டுள்ள அட்டை உள்ள பெட்டியிலிருந்து ஒரு அட்டை எழுமாற்றாக எடுக்கப்பட்டால் சதுர எண் ஒன்று கிடைப்பதற்கான நிகழ்தகவு யாது?

13) AB ஆனது O இனை மையமாக உடைய வட்டத்தின் ஒரு நாண் ஆகும். OC ஆனது AB இற்கு செங்குத்தாகும். வட்ட ஆரை 5cm, TC=1cm எனின் AB யின் நீளம் யாது?





14) தீர்க்க. $x^2 - 4 = 0$

15) இரு முக்கோணிகளும் கோணம் கோணம் ஒத்த பக்கம் எனும் நிலையில் ஒருங்கிசைந்தால் $PRQ$ இன் பருமன் யாது?




16) ஒரு வகுப்பிலுள்ள மாணவர் பெற்ற புள்ளிகள் தரப்பட்டுள்ளது. வலையுரு வரையத்தினை வரைக.


| புள்ளிகள் | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| 30 - 40 | 4 |
| 40 - 60 | 12 |
| 60 - 70 | 5 |




17) கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களிற்கு சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் இடுக.


| | |
|---|---|
| $\sqrt{14} > 4$ | |
| $9^{\frac{1}{3}} < 2$ | |

18) நிலைக்குத்தான கோபுரம் ஒன்றின் அடியிலிருந்து சிறிய தூரத்திலுள்ள புள்ளி ஒன்றிலிருந்து உச்சியினை $50^o$ ஏற்றக் கோணத்தில் ஒருவர் காண்கிறார், பின்னர் 4m தூரம் நடந்து சென்று அதே உச்சியினை $70^o$ ஏற்ற கோணத்தில் காண்கிறார். அவ் இரு ஏற்றக் கோணங்களின் பெறுமானங்களையும் உரிய இடத்தில் குறித்து காட்டுக.





19) 3r ஆரையும் 2r செங்குத்து உயரமுடைய கூம்பின் கனவளவினை $\lambda > r$ இல் காண்க.

20) P,Q,R என்பன O இனை மையமாகவுடைய வட்டத்தில் மூன்று புள்ளிகளாகும். $O\hat{P}Q = 50^o$ எனின் கோணம் $P\hat{R}Q$ இன் பெறுமானம் யாது?





21) AB,BC இலிருந்து சமதூரத்திலும் AC யின் மீது உள்ளதுமான புள்ளியின் அமைவினை ஒழுக்கின் அறிவினை பயன்படுத்தி பருமட்டாக பெறுக.




22) $\begin{pmatrix} x & 3 \\ 2 & 4 \end{pmatrix} + \begin{pmatrix} 2 & -3 \\ y & -3 \end{pmatrix} = I$ எனின் x,y இனை காண்க. இங்கு I என்பது சர்வ சமன்பாட்டு தாயம் ஆகும்.


23) தரப்பட்டுள்ள உருவிலுள்ள வரையின் படித்திறன், சமன்பாடு யாது?




24) 4r, 3r ஆரையுடைய அரைவட்டங்கள் உருவில் காட்டப்பட்டுள்ளது. நிழற்றிய பரப்பு $14\lambda$ எனின் r இனை காண்க.




25) உருவில் DC ஆனது புள்ளி D யில் வரையப்பட்ட தொடலி ஆகும். BD || AC எனின் X இனை காண்க.



பகுதி I B

1) ஒரு பாத்திரத்தில் முற்றாக நீர் நிரம்பியுள்ளது. அவற்றின் 1/4 பங்கு முதலாம் நாளும் 2/5 பங்கு இரண்டாம் நாளும் பயன்படுத்தப்பட்டது.


i) முதல் இரண்டு நாட்களிலும் பயன்படுத்திய நீரின் அளவு யாது?

ii) மீதியின் 4/7 பங்கு நீர் மூன்றாம் நாள் பயன்படுத்தப்பட்டது எனின் மூன்றாம் நாள் பயன்படுத்திய நீர் முழுத் தாங்கியின் என்ன பின்னம்?

iii) மிகுதி நீரில் 10l வெளியேற்றிய பின் 1/10 பங்கு நீர் மீதமாக இருந்தது எனின் 10l இனால் குறிப்பிடப்படும் பின்னம் யாது?

iv) இத்தாங்கியின் மொத்த கொள்ளளவினை l இல் காண்க.

2) தரப்பட்டுள்ள உருவில் ஒரு செவ்வக பகுதி ABCD ஐயும் மையக் கோணம் $45^o$ ஆகவுள்ள ஒரு வட்டத்தின் இரு ஆரைச்சிறைகளையும் காட்டுகின்றது.




**i) ஆரைச்சிறை ஒன்றின் பரப்பளவு யாது?**

**ii) செவ்வகம் ABCD இன் பரப்பளவு இரு ஆரைச்சிறைகளின் பரப்பளவுகளின் 4 மடங்கு எனின் AB யின் நீளத்தினை காண்க.**

iii) வில் BE இன் நீளத்தினை காண்க.

iv) உருவின் சுற்றளவு யாது?

3)நிதன் கம்பனி Aயில் வைத்திருந்த 100 பங்குகளை ரூ200 வீதம் விற்பதால் ரூ5000 மூலதன இலாபம் பெறுகிறார்.

i) பங்குகளை விற்பதால் பெற்ற பணம் எவ்வளவு?


ii) நிறுவனம் Aயில் அவரது முதலீடு யாது?

iii) நிறுவனம் Aயில் உள்ள பங்குகளை வாங்கிய விலை யாது?

iv)பங்குகளை விற்பதால் பெற்ற பணத்தினை 4% மாத வட்டி வழங்கும் நிறுவனத்தில் முதலிடும் ஒருவருக்கு 4 மாத முடிவில் கிடைக்கும் மொத்தப் பணம் எவ்வளவு?

4) கீழ்வரும் அட்டவணையானது 60 மாணவர்கள் ஒரு பரீட்சையில் பெற்ற புள்ளிகளை காட்டுகிறது.

| புள்ளிகள் | மீடிறன்(f) | திரள் மீடிறன்(cf) |
|---|---|---|
| 0 – 10 | 4 | 4 |
| 10 – 20 | | 10 |
| 20 – 30 | 10 | |
| 30 – 40 | 14 | 34 |
| 40 – 50 | | 52 |
| 50 – 60 | 8 | |



i) மேற்குறிப்பிட்ட அட்டவணையில் இடைவெளி நிரப்புக.

ii) அட்டவணைக்கு ஏற்ப பொருத்தமான அளவிடையைப் பெற்று திரள்மீடிறன் வளையியினை வரைக.


iii) மாணவர்களின் புள்ளிகளின் இடையத்தினை வளையியிலிருந்து பெறுக.

iv) 40% மாணவர்கள் சித்திபெற தவறினர் எனின் அப்பரீட்சையின் சித்திப்புள்ளி யாது?

5)


**A. ஒரு பெட்டியில் 2 நீலம். 2 மஞ்சள் நிற ஒரே மாதிரியான மாபிள்கள் உள்ளன. அவற்றிலிருந்து ஒரு மாபிள் எழுமாற்றாக எடுக்கப்பட்டு நிறம் குறிக்கப்பட்டு அப்பையினுள் இடப்படாமல் இன்னொரு மாபிள் எடுக்கப்படுகிறது.**

**i) மாதிரி வெளியினை நெய்யரியில் குறிக்க?**




ii) இரு முறையும் வெவ்வேறு நிறம் கிடைப்பதற்கான நிகழ்ச்சியினை நெய்யரியில் குறிக்க.அதன் நிகழ்தகவினை காண்க.

B. எடுக்கப்பட்ட மாபிள்கள் அப்பெட்டியில்இடப்பட்டு அவற்றிற்கு 1 தொடக்கம் 4 வரை எண்ணிடப்பட்டு ஒன்றின் பின் ஒன்றாக பிரதி வைப்பின்றி இரு மாபிள்கள் எடுக்கப்படுகிறது. எடுக்கப்பட்ட எண் முக்கோண எண்ணா, இல்லையா என குறிக்கப்படுகின்றது.




i) மர வரிப்படத்தினை பூரணப்படுத்துக.

ii) இரு முறையும் எடுக்கப்பட்டதில் ஒருமுறை மட்டும் முக்கோண எண் கிடைப்பதற்கான நிகழ்தகவு யாது?

# வலம்புரி கல்விப் பிரிவு வழங்கும்
# க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை
# கணிதம் மாதிரி வினாத்தாள்

**நேரம்: 3 மணித்தியாலம்** **வினாப்பத்திரம் – 02**

## பகுதி IIB

01)
(a) சார்பு $y = x^2 + 2x - 2$ இன் வரைபை வரைவதற்கு ஒரு பூரணமற்ற பெறுமான அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| x | -4 | -3 | -2 | -1 | 0 | 1 | 2 |
|---|---|---|---|---|---|---|---|
| y | 6 | 1 | -2 | ........ | -2 | 1 | 6 |

i) x = (-1) ஆகும் போது y இன் பெறுமானத்தை காண்க.

ii) x அச்சு வழியேயும் y அச்சு வழியேயும் 10 சிறிய பிரிவுகளால் ஓர் அலகு வகை குறிக்குமாறு உள்ள அளவிடையைப் பயன்படுத்தி ஒரு வரைபு தாளில் மேற்குறித்த சார்பை வரைக.

(b) வரைபை பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

iii) y மறையாகவும் குறையுமாறும் உள்ள x இன் பெறுமான ஆயிடையைக் காண்க.

iv) தரப்பட்டுள்ள சார்பினை $y = (x+a)^2 - b$ வடிவில் எடுத்துரைக்க. a, b இனை காண்க.

v) y = 0 ஆகும் போது x இன் பெறுமானத்தை காண்க. இதிலிருந்து $\sqrt{3}$ இன் பெறுமானத்தை 1ம் தசமத்தில் காண்க.

02) ராஜா தொலைத்தொடர்பு நிறுவனத்தில் ஓர் சலுகையினைப் பெற்றுள்ளார். அதாவது மாதாந்தம் 750 நிமிடங்கள் இலவச அழைப்புக்களை மேற்கொள்ள முடியும். அவரது ஒரு மாதத்தில் பெறப்பட்ட 50 அழைப்புகளின் கால இடைவெளியினை நிமிடத்தில் அட்டவணை காட்டுகின்றது.

| கால இடைவெளி (நிமிடம்) | 0 - 4 | 4 - 8 | 8 - 12 | 12 - 16 | 16 - 20 | 20 - 24 |
|---|---|---|---|---|---|---|
| அழைப்புகளின் எண்ணிக்கை | 9 | 11 | 13 | 9 | 6 | 2 |

i) அதிகளவான அழைப்புக்கள் எக்கால இடைவெளியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ii) எடுகொண்ட இடையினை பயன்படுத்தி அல்லது வேறு விதமாக அழைப்புக்களின் இடையை காண்க.

iii) ராஜா ஒரு மாதத்தில் 100 அழைப்புக்களை மேற்கெண்டார் எனின் தொலைத்தொடர்பு நிறுவனம் கட்டணம் அறவிடப்படும் அழைப்புகளின் நிமிடத்தினை காண்க.

iv) மாதாந்த கட்டணம் ரூ600 ஒரு நிமிடத்திற்கு ரூ2 வீதம் அறவிடும் தொலைத்தொடர்பு நிறுவனம் ராஜா ஒரு மாதத்தில் 100 அழைப்புக்களை மேற்கொண்டிருந்தால் அறவிடும் பணத்தொகை யாது?

03) ஓர் அலுமாரியினை உடன் காசிற்கு வாங்கும் போது அதன் விலை ரூ200000 ஆகும். அத்தொகையின் 10% இனை முற்பணமாக செலுத்தி மிகுதியினை வட்டியுடன் 18 சம மாதத்தவணைகளாக செலுத்தி பெற முடியும். இக் கொடுப்பனவு முறைக்காக குறைந்து செல்லும் மீதி முறைக்கு வட்டி அறவிடப்படுகிறது. ஆண்டு வட்டி வீதம் 12% எனின் செலுத்த வேண்டிய தவணைப் பணம் யாது?

04) ஒரு கிடைதரையில் P, Q, R எனும் புள்ளிகள் முறையே Pயிற்கு கிழக்கே Q, PQ=120m ஆகுமாறும் R இலிருந்து Q இன் திசைகோள் 130°, R இலிருந்து Pஇன் திசைகோள் 220° ஆகுமாறு அமைந்துள்ளது.

i) P, Q, R ஆகியவற்றின் அமைவுகளை ஒருபரும்படி படத்தில் வரைந்து தரப்பட்டுள்ள அளவுகளைக் குறிக்க.

ii) கோணம் PQR இன் பருமனைக் காண்க.

iii) திரிகோண கணித அட்டவணையைப் பயன்படுத்தி தூரம் PR இனை மீற்றரில் காண்க.

iv) PT=40m ஆகுமாறு PR இன் மீது புள்ளி T அமைந்துள்ளது எனின் திரிகோண கணித அட்டவணையைப் பயன்படுத்தி கோணம் RQT காண்க. (QT = 100m என்க)

05)
(a) ஒரு தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்யும் சாரதிகளின் ஒருநாள் வேதனம் தொடர்பாக கீழே தரப்பட்டுள்ளது.

ஒரு லொறி சாரதிக்கு ரூ1200
ஒரு வான் சாரதிக்கு ரூ1000


இந்நிறுவனத்தில் வேலை செய்யும் வான் சாரதிகளின் எண்ணிக்கை லொறி சாரதிகளின் எண்ணிக்கையின் 3 மடங்கிலும் 5 குறைவாகும். இச்சாரதிகளிற்காக அந்நிறுவனம் ஒருநாளிற்கு ரூ16000 வேதனமாக வழுங்கப்படுகிறது.

i) அந்நிறுவனத்திலுள்ள லொறி சாரதிகளின் எண்ணிக்கை x, வான் சாரதிகளின் எண்ணிக்கை y எனவும் கொண்டு ஓர் ஒருங்கமை சமன்பாட்டுச் சோடிகளை உருவாக்குக.

ii) ஒருங்கமை சமன்பாட்டு சோடியை தீர்த்து அந்நிறுவனத்தில் உள்ள லொறி சாரதிகளின் எண்ணிக்கையையும் வான் சாரதிகளின் எண்ணிக்கையையும் தனித்தனியே காண்க.

(b) $125x + 4200 \leq 5400$ இனைத் தீர்த்து x எடுக்கத்தக்க உயர்ந்தபட்ச நிறை எண் பெறுமானத்தை காண்க.

06) பின்வரும் இரு தள உருவங்கள் முறையே ஆரை x அலகுகளுடைய ஓர் வட்டத்தின் ஓர் கால்வட்டமும், ஆரை (x+1) அலகுகளுடைய ஓர் ஆரைசிறையும் ஆகும்.




இரு தள உருக்களினதும் பரப்பளவுகள் சமமெனின், x இன் சார்பில் ஓர் இருபடி சமன்பாட்டினை உருவாக்கி $x^2 - 2x - 1 = 0$ என காட்டி x இன் பெறுமானத்தை ஒரு தசமதானத்தில் காண்க.($\sqrt{2} = 1.41$ என்க)

## பகுதி – II B

07)
(a) ஒரு நேரிய கம்பியிலிருந்து வெட்டப்பட்ட துண்டுகளின் நீளங்கள் முறையே 40cm, 50cm, 60cm ஆகுமாறு இருந்தது. வெட்டப்பட்ட இறுதி துண்டின் நீளம் 2m ஆகும்.

i) அக்கம்பியிலிருந்து வெட்டப்பட்ட துண்டுகளின் எண்ணிக்கை யாது?

ii) அந்நேரிய கம்பித் துண்டின் மொத்த நீளத்தினை m இல் காண்க.

(b) ஒரு பெருக்கல் விருத்தியின் முதலாம் உறுப்பு 3 ஆகும். அவ்விருத்தியின் பொது விகிதம் நேராக இருக்கும் அதேவேளை மூன்றாம், இரண்டாம் உறுப்புகளின் வித்தியாசம் 6 ஆகும்.

i) அவ்விருத்தியின் பொது விகிதம் யாது?

ii) அவ்விருத்தியின் 6ம் உறுப்பு 96 எனக் காட்டுக.

08) பின்வரும் அமைப்புக்களுக்கு cm/mm அளவிடை உள்ள ஒரு நேர் விளிம்பையும் ஒரு கவராயத்தையும் பயன்படுத்தி அமைப்புக் கோடுகளை தெளிவாக காட்டுக.

i) $\Delta ABC$ யில் AB= 6cm, =90°, BC=3cm ஆகுமாறு அமைக்க.

ii) $\hat{ACB}$ யின் கோண இரு கூறாக்கியினை அமைக்க. அது AB யினை Dயில் சந்திக்கின்றது.

iii) D யிலிருந்து AC யிற்கு வரையப்பட்ட செங்குத்து AC யினை F இல் சந்திக்கின்றது.

iv) D யினை மையமாகவும் DF இனை ஆரையாகவும் கொண்ட வட்டத்தினை அமைக்க.

v) AC யினை இல் கணிக்க.

vi) A யிலிருந்து இன்னொரு தொடலி AF இனை அமைக்க.

vii) $\frac{\Delta AFD}{\Delta DBC} = \sqrt{5} - 1$ எனக் காட்டுக.


09)

(a) அருகிலுள்ள உருவில் வட்டத்தின் மையம் O, AB ஆனது அதன் விட்டமாகும். OC||AD.அத்துடன் கோணம் OCA = x எனின்

i) கோணம் ABC


ii) கோணம் ADC

iii) கோணம் ACD என்பவற்றின் x சார்பில் காண்க.




(b) மேற்குறித்த உருவில் பைதகரசின் தொடர்பினை பயன்படுத்தி $4AO^2=BC^2+AC^2$ என காட்டுக.

10) உருவில் சதுரம் ABCD யில் AD யின் நடுப்புள்ளி M ஆகும். AB யின் மீதுள்ள புள்ளி E ஆகும். நீட்டப்பட்ட EM, CD என்பன F ல் சந்திக்கிறது.




i) உருவினை உமது விடைத்தாளில் பிரதி செய்து $\Delta AME \equiv \Delta MDF$ என காட்டுக.


ii) AEDF ஓர் இணைகரம் என நிறுவுக.

iii) AD யிற்கு செங்குத்தாக M இனூடாக வரையப்படும் நேர்கோடு DE இனை G இலும் BC யினை H இலும் சந்திக்கிறது எனின் DG = GE என நிறுவுக.

iv) AEDF பரப்பளவு = $8 \times \Delta DGM$ இன் பரப்பளவு என காட்டுக.

11) 2cm ஆரையுடைய ஒரு திண்ம கோளத்தினை உருக்கி அக்கோளத்தின் கனவளவிற்கு சமமான கனவளவுள்ள ஒரு திண்ம செவ்வட்ட கூம்பு அதன் அடியின் ஆரைக்கும் அதன் செங்குத்து உயரத்திற்கும் இடையே உள்ள விகிதம் 2:3 ஆக இருக்குமாறு செய்யப்படுகிறது. அவ்வாறுசெய்யப்பட்ட கூம்பின் செங்குத்து உயரம் $2x3^{2/3}$ என காட்டி மடக்கை அட்டவணையினை பயன்படுத்தி அதன் பெறுமானத்தினை இரண்டாம் தசமதானத்தில் காண்க.

12) 200 மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களை கீழ்வரும் பூரணமற்ற வெண் உரு காட்டுகிறது. A, B, C எனும் வகை குளிர் பானங்களின் விருப்பத் தெரிவாகும்.




i) நிழற்றிய பகுதியினை சொற்களில் விபரிக்குக.

ii) B வகை குளிர்பானத்தை விரும்புவோர் 50 எனின் அம் மூன்று வகையினையும் விரும்புவோர் எத்தனை பேர்?

iii) 80 பேர் மேற்குறித்த ஒன்றையும் விரும்பவில்லை எனின் C வகை குளிர்பானத்தை விரும்புவோர் எத்தனை பேர்?

iv) 65 பேர் A வகை குளிர்பானத்தினை விரும்புகின்றனர் எனின் ஒரு வகையினை மட்டும் விரும்புவோரின் எண்ணிக்கை மூன்று வகையினையும் விரும்புவோரின் இருமடங்கு என காட்டுக .

# முயற்சியாண்மைக் கல்வி தொகுதி 1

வினா இல-01

மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்க.

01.'முயற்சியாண்மை'அண்மைக் காலத்தினுள் உருவாகியஓர் எண்ணக்கருவாகும். அதனை மிகத் தெளிவாகவிளக்குவது.

1)சூழலில் காணப்படுகின்றவாய்ப்புக்களை இனங்கண்டு வித்தியாசமானகோணத்தில் சிந்தித்து புத்தாக்கங்களைஉருவாக்குதல்.

2)எதிர்காலத்தைமாற்றுவதற்காகமுயற்சிக்கும் நபர்களின் நடத்தையாகும்.

3)இயல்பாகஉருவாகியதிறமைகளின் மொத்தவடிவமாகும்.

4)சமூகமேம்பாட்டுக்குகாரணமாகஅமையக்கூடியசெயற்பாடுகளின் மொத்த வடிவமாகும்.

02.புதியபொருட்கள்,சேவைகளின் உற்பத்திநடவடிக்கைகளுக்குபயன்படுத்தும் பல்வேறுவளங்கள் உற்பத்திக் காரணிகள் எனஅழைக்கப்படும். பின்வருவனவற்றுள் உற்பத்திக் காரணிகளைமட்டும் உள்ளடக்கியவிடைத்தொகுதியினைத் தெரிவுசெய்க.

1)மூலப்பொருள்,காணி,வனம் மற்றும் நிலம்.

2)கட்டடம், ,யந்திரங்கள்,மற்றும் உபகரணங்கள்.

3)நிலம்,உழைப்பு, மூலதனம் மற்றும் முயற்சியாண்மை.

4)முயற்சி,புதியகருத்துக்கள்,பொருட்கள் மற்றும் சேவைகள்

03.ஆடைத் தொழிற்சாலையொன்றில் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் தையல் இயந்திரங்கள்,கட்டடம்,கருவிகள் என்பவற்றைக் குறிப்பது,

(1)நிலம் (2) உழைப்பு (3) மூலதனம் (4) முயற்சி

04. கொரோனாநோய்த்தொற்றுகாரணமாக பாடசாலைக்கல்வியை பெறமுடியாத நிலையில் பாதிக்கப்பட்ட,குடும்பவருமானம் குறைந்தக.பொ.த (சாதரணதர) மாணவர்களுக்குகற்றல் கையேடுகள் தயாரித்துவழங்குவதற்கானவேலைத் திட்டமொன்றுநடைமுறைப்படுத்தப்படுதல் என்பது,

1)ஆக்கத்திறனூடானமுயற்சியாண்மைஎன்பதாகும்

2)சமூகத்தினூடானமுயற்சியாண்மை் என்பதாகும்

3)நிறுவனரீதியானமுயற்சியாண்மைஎன்பதாகும்

4)சூழல் ரீதியானமுயற்சியாண்மைஎன்பதாகும்

05.அடிப்படைத் தேவைகள் உள்ளடங்கும் விடைத் தொகுதியினைத் தெரிவுசெய்க.

1)கல்வி,போக்குவரத்து,புகையிரதம்,பாடசாலை

2)உணவு,உடை,பாதுகாப்பு,கல்வி

3)ஆடை அணிகள்,வீடு,சோறு,பாண்

4)தொலைபேசி,கல்வி,தொடர்பாடல்,தொலைக்காட்சி

06.அண்மையில் முன்பள்ளி டிப்ளோமாவைமுடித்தவிசாலினி,முன்பள்ளிக் பாடசாலையொன்றைஆரம்பிப்பதற்குபொருத்தமான இடமொன்றைத் தேடுகின்றார். அதற்குமிகப் பொருத்தமானஇடமாகஅமைவது.

1)கட்டடத் தொகுதியொன்றுக்குஅருகாமையில் பாதுகாப்பான,அமைதியானசூழல் ஒன்றுகாணப்படல்

2)கைத்தொழில் பேட்டைஒன்றுக்குஅருகாமையில் இடமொன்றினைதெரிவுசெய்தல்

3)சந்தைத் தொகுதியொன்றுக்குஅருகாமையில் இடத்தினைதெரிவுசெய்தல்

4)பொதுவிளையாட்டுமைதானத்துக்குஅருகாமையிலஇடத்தினைத் தெரிவுசெய்தல்

07.மனித்தேவைகள்,விருப்பங்களைப் பூர்த்திசெய்வதற்காகபொருட்கள் மற்றும் சேவைகளைஉற்பத்திசெய்தல்,விநியோகித்தல் மற்றும் விற்பனைசெய்தல் தொடர்பானசகலநடவடிக்கைகளிலும் ஈடுபடுபவரைஅழைப்பது,

1)உற்பத்தியாளர் என்றாகும் 2)வணிகர் என்றாகும்

3)முயற்சியாளர் என்றாகும் 4)களஞ்சியசாலைப் பொறுப்பாளர்

08.வணிக அகச்சூழல் ஒன்றினுள் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணிக ளாவன,

1)உரிமையாளர்,முகாமையாளர்,ஊழியர்,வளங்கள்

2)உரிமையாளர்,முகாமையாளர்,ஊழியர்,வாடிக்கையாளர்

3)உரிமையாளர்,முகாமையாளர்,வழங்குனர்,முதலீட்டாளர்

4)முதலீட்டாளர்,முகாமையாளர்,ஊழியர்,போட்டியாளர்

09.முயற்சியாண்மை மூலம் முயற்சியாளருக்குகிடைக்கும் நன்மையல்லாதது,

(1)பயன்படுத்தாத ஆற்றல்களைபயன்படுத்தமுடிதல்

(2)சுதந்திரமும்,மிகஉயர்ந்தஆத்மதிருப்தியும் உருவாகுதல்

(3)தலைமைத்துவம் கிடைக்கின்றமை

(4)தன்னாதிக்கமுள்ளசுதந்திரமானபொருளாதாரச் சமூகம் உருவாகுதல்

10.முயற்சியாளர் ஒருவர் தனது ஆக்கபூர்வமான சிந்தனைகளை விழிப்புறச் செய்து, புதிய உற்பத்திகளை பரீட்சித்துப் பார்ப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்கும் வணிகமாக அமைவது

(1) பேரளவுவணிகம் (2) நடுத்தரளவுவணிகம்

(3) கூட்டுறவுவணிகம் (4) சிற்றளவுவணிகம்


# வெளிநாடு


# ...ா தொற்று, காற்றின் வழியே பரவும்
# ...ாண்ட உலக சுகாதார அமைப்பு

..., காற்றின் வழியே பரவக்கூடியது என வெளியாகி
...றயாக உலக சுகாதார நிறுவனம் ஒப்புக்கொண்டது.

...றயாக
... இதை
... உலக
...கியது.
... நகரில்
...த்திடம்
...ழமை
...எழுப்பி

...காதார
...டாக்டர்
...ான் ஸி
...ர். இது
...கையில்.
...ரோனா
...என்பது
... உள்ள






புதிய ஆதாரத்தை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.

இந்த ஆதாரத்தை நாங்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

தொற்றுப்பரவலில் இதன் தாக்கங்கள் குறித்தும், எடுக்க வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றியும் நாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்" எனத் தெரிவித்தார். (2)

...மை வெளியிட்
...யே அமெரிக்கா
...கரும் விதமாக
... விவகாரத்தில்
... காரணம் காட்டி
...ளுக்கு விசா கட்டு
...ா அறிவித்துள்
... சீன வெளியுறவு
...வளியிட்டுள்ள
... "பொருளாதார
...கிற பெயரில்
...கின் தேசிய
...துகாப்பதற்கான
...தை தடுக்க அமெ
...றது.
...து ஒரு போதும்
... ஹொங்கொங்
... தலையிடும்
...களுக்கு விசா
... கட்டுப்பாடுகள்
...றன" என அறி
(2)

# அமெரிக்காவை அலறவிடும் கொரோனா
# ஒரு நாளில் மட்டும் 61 ஆயிரம் பேர் பாதிப்பு

(வோஷிங்டன்)

உலகிலேயே கொரோனா வைரஸ் தொற்றினால் மிகப் பெரிய பாதிப்பை எதிர்கொண்ட நாடாக விளங்கும் அமெரிக்காவில், நாளொன்றுக்கான அதிகபட்ச பாதிப்பு எண்ணிக்கை பதிவாகியுள்ளது.

உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி நேற்று முன்தினம் மட்டும் அமெரிக்காவில் 61,848 பேர் பாதிப்படைந்துள்ளனர். மேலும் 890 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய அமெரிக்காவில் வைரஸ் தொற்று தோன்றியதிலிருந்து பதிவான, நாளொன்றுக்கான அதிகபட்ச பாதிப்பு எண்ணிக்கை இதுவாகும்.

அத்துடன், அமெரிக்காவில் கொவிட்-19 பெருந் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 31 இலட்சத்து 58 ஆயிரத்து 932 ஆகும். அதேபோல, அங்கு உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 34 ஆயிரத்து 862 ஆகும்.

இதுதவிர அங்கு 16 இலட்சத்து 31 ஆயிரத்து 391 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 15 ஆயிரத்து 457 பேர் தீவிர சிகிச்சையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், இதுவரை 13 இலட்சத்து 92 ஆயிரத்து 679 பேர் வைரஸ் தொற்றிலிருந்து மீண்டு வீடு திரும்பியுள்ளனர்.

அமெரிக்காவில் அதிகப்படியாக, நியூயோர்க் மாநிலத்தில் அதிகமாக கொவிட்-19 பாதிப்பு பதிவாகியுள்ளது. அங்கு 4 இலட்சத்து 24 ஆயிரத்து 263 பேர் பாதிப்படைந்துள்ளனர். (2)

...து எனவும் குற்
...வைக்கப்பட்டுள்
...ில் கொரோனா
...டி உருவானது
...டறிய சீனாவுக்கு
...ழுவை அனுப்ப
... சுகாதார அமை
...ல் அறிவித்தது.
... உலக சுகாதார
...த முடிவுக்கு சீனா
...வித்த நிலையில்
...லக சுகாதார
...ாசனை நடத்தி
...ழலில் தற்போது
...ர அமைப்பின்
...வை நாட்டுக்குள்
...ா சம்மதம் தெரி
(2)

# அமெரிக்காவில் தலைதூக்கும் புதிய வகை நோய்

## வைத்தியர்கள் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

கொரோனா வைரஸ் பாதிப்பு மிகத் தீவிரமாக இருக்கும் நிலையில் அமெரிக்காவில் மூளையை தின்னும் அமீபா நோய் பாதிப்பொன்று ஏற்பட்டுள்ளது.


மனிதர்கள் உடலில் உள்ள பல அணுக்களில், அமீபா என்பது ஓரணு உயிரி. அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் நெக்லேரியா பவுலரி என்ற மனித மூளையை தின்னும் அமீபா நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த மாகாண சுகாதாரத் துறை எச்சரித்துள்ளது.

மிதமான வெப்பநிலையில் உள்ள நல்ல நீரில் இந்த கிருமி இருக்கும் என தெரிய வந்துள்ளது.

மேற்படி நோய் தொடர்பாக தெரிய வருவதாவது, மூக்கின் மூலமாக உடலுக்குள் புகுந்து மூளையைச் சென்றடையும். இந்த அமீபா மூளையை கொஞ்சம் கொஞ்சமாக தின்ன ஆரம்பிக்குமாம்.

ஆனால் இந்த உணர்வு மனிதர்களுக்குத் தெரியாது எனவும் மிகவும் அபூர்வமான இந்த நோயால் அண்மையில் ஒருவர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பரிசோதனைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனால் ஏரி, குளம், நீச்சல் குளம் போன்றவற்றில் குளிக்கும் போது மூக்கின் வழியாக நீர் உள்ளே செல்வதை தவிர்க்கும்படி வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.

தலைவலி, காய்ச்சல், வாந்தி, கழுத்து வலி ஆகியவையே இதன் அறிகுறிகளென வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.



மேலும், இந்நோய் மூளையில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் நினைவு இழப்பது, குழப்பங்கள் ஏற்படுவது, வலிப்பு நோய், உடல் கட்டுப்பாட்டை இழப்பது ஆகியவையும் ஏற்படுமெனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (2)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

## கலாநிதி முருகர் குணசிங்கம்

18

1983 இல் இலங்கையில் ஈழத்தமிழருக்கு எதிராக நடத்தப்பட்ட படுகொலைத் தாக்குதல்களால் பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் இலங்கையை விட்டு வெளியேறி இந்தியாவுக்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் வட அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்கும் அகதிகளாகச் சென்றனர்.

இவ்வேளையில் அவுஸ்திரேலிய அரசும் ஈழத்து அகதிகளுக்குத் தனது கதவை அகலத் திறந்து விட்டது. ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் அகதிகளாக அவுஸ்திரேலியா நாட்டில் வந்து குவிந்தனர்.

இந்நிலைமை ஒரு குறுகிய காலத்திற்கே அவுஸ்திரேலியாவில் இடம்பெற்றது. அதன் பின்னர் ஈழத்தில் இருந்து வரும் தமிழ் அகதிகளை அவுஸ்திரேலிய அரசு ஏற்பதில் பல தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்ததன் விளைவாக தமிழ் அகதிகளின் வருகை குறைந்தது.

2009 இல் ஈழப் போராட்டத்தை இலங்கை அரசு முடிவுக்குக் கொண்டு வந்து விட்டதாக அறிவித்ததில் இருந்து பல ஈழத்தமிழர்கள் அவுஸ்திரேலியச் சட்டதிட்டங்களுக்கு முரணாக (Illegally) கடல் வழியாக அவுஸ்தி ரேலியாவுக்குள் வந்துள்ளனர்.

அவர்களுள் பலருக்குத் தற்காலிக அகதிகள் என்ற அடையாளம் அவுஸ்திரேலியக் குடிவரவு இலாகாவினால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் பலரை அவுஸ்திரேலியாவிலும் பல அண்டைத்தீவுகளில் (Christmas Island) உள்ள தடுப்பு முகாம்களில் தடுத்து வைத்து விசாரணை செய்து வருகின்றார்கள்.

மேற்கூறப்பட்டவை தவிர அவுஸ்திரேலிய அரசாங்கம் குடும்பத்துடன் மீள் இணைதல் (Family Reunion) என்ற கொள்கையின் கீழ் 1980களில் இருந்து விண்ணப்பதாரரின் மனைவி அல்லது கணவர், அவர்களின் பிள்ளைகள், தாய், தந்தையர், உடன் பிறந்த சகோதர, சகோதரிகள் ஆகியோர் அவுஸ்திரேலியாவில் உள்ள விண்ணப்பதாரருடன் வந்து இணைந்து கொள்வதற்கான வழியையும் திறந்து விட்டது.

இதன் விளைவாக பலதரப்பட்டவர்கள் அவுஸ்திரேலியா வந்து தமது உறவுகளுடன் இணைந்து கொண்டனர்.

ஆனால் 1990களின் நடுப்பகுதியில் இருந்து மீண்டும் இறுக்கமான கட்டுப்பாடுகள் விதித்ததன் விளைவாக குடும்பத்துடன் மீள் இணைதல் என்ற வழியின் ஊடாக ஈழத்தமிழர்கள் அவுஸ்திரேலியா வருவது மிகமிகக் குறைந்துள்ளது.


எடுத்துக்காட்டாக ஆங்கில அறிவு, பட்டப்படிப்பு, வயது எல்லை, தொழில் சார் திறமை அல்லது பயிற்சி போன்றவை குடும்ப மீள் இணைதல் கொள்கையின் ஊடாக வருபவர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் ஈழத்தில் உள்ள தமிழர்களில் அவ்வாறான தகுதி உள்ளவர்களுள் பெரும்பான்மையினர் ஏதோ வகையில் ஏற்கனவே பல நாடுகளுக்கும் சென்று விட்டனர்.

தற்போது ஈழத்தில் உள்ள தமிழர்களிடம் மேற்கண்ட திறமைகள் குறைந்து காணப்படுகின்றன.

இதன் காரணமாகவும் அவுஸ்திரேலியா வரும் ஈழத் தமிழர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைந்து வருகின்றது.

மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர், மலேசியா, தென் அமெரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில் சென்று வாழ்ந்து கொண்டு இருந்த ஈழத் தமிழர்களுள் தங்கள் கல்வித் தகைமை, தொழிற்றிறமை, பயிற்சி, வயது போன்றவற்றின் அடிப்படையில் அவுஸ்திரேலியாவுக்கு மீளப் புலம்பெயர்ந்து வந்தவர்களும் கணிசமான அளவில் நிரந்தர வதிவிட உரிமை பெற்று உள்ளவர்கள்.



மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிந்த ஈழத் தமிழர்கள் சுற்றுலா விசாவில் (Tourist vissa) அவுஸ்திரேலியா வந்த பின்னர் இலங்கைக்குப் போக முடியாத காரணங்களைக் காட்டி அகதி அந்தஸ்துக் கோரி விண்ணப்பித்து அவர்களுள் அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறுதொகையினரும் இதில் அடங்குவர். இறுதியாக மாணவர் விசா (Student visa) பெற்று அவுஸ்திரேலியாவில் பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பு, மேற்படிப்பு, தொழற்கல்வி படிக்க வந்த ஈழத்தமிழ் இளம்தலைமுறையினர் படிப்பு முடிந்தவுடன் தொழில் பெற்று அதனூடாக திறமை அடிப்படையில் நிரந்தர வதிவிட விசா பெற்று தங்கி இருக்கிறார்கள்.

அவுஸ்திரேலிய அரசின் குடிசன மதிப்பு இலாகா எண்ணிக்கையின்படி 1971 இற்கு முன்னர் 202 பேர் மட்டுமே தமிழ்மொழி பேசுபவர்களாக இருந்தனர் என்பதனை அறிய முடிகின்றது.

ஆனால் இத்தொகையில் எத்தனை பேர் ஈழத்தமிழர்கள், எத்தனை பேர் இந்தியத் தமிழர்கள், அல்லது ஏனைய நாடுகளில் இருந்து குடியேறிய தமிழர்கள் என்பது பற்றி அறிய முடியவில்லை.

ஆனால் அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை 1980 களில் இருந்து ஒவ்வோராண்டும் அதிகரித்துக்கொண்டு போவதைக்காண முடிகின்றது.

1991 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி 11,376, 1996 இல் 18,690, 2001 இல் 24,067, 2006 இல் 32,701 தமிழர்கள் அவுஸ்திரேலியாவில் நிரந்தரமாக வாழ்வதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மேற்படி கணக்கெடுப்பில் தமிழ் பேசும் ஈழத்துத் தமிழர்களும் இந்தியத் தமிழர்களும் பிற நாடுகளான மலேசியா, சிங்கப்பூர், நியூசிலாந்து, ஐக்கிய அமெரிக்கா, கனடா, தென் ஆபிரிக்காவில் இருந்து அவுஸ்திரேலியா வந்து குடியேறிய தமிழர்களும் தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையிலேயே சேர்க்கப்பட்டுள்ளனர்.

வீட்டில் தமிழ்மொழி பேசுகின்ற தமிழர் என்ற அடிப்படையிலும் எந்தெந்த நாட்டில் இருந்து வந்தவர்கள் என்ற அடிப்படையில்தான் மேற்படி மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப்பட்டு இருப்பதைப் பார்க்க முடிகின்றது.

ஆனால் ஈழத்தமிழர்களின் இளம் தலைமுறையினர் ஆங்கில மொழியில் படித்தவர்கள் "வீட்டில் பேசும் மொழி" என்னும் பகுதியை நிரப்பும்போது "தமிழ் மொழி" என்று குறிப்பிடாது.

"ஆங்கில மொழி" எனக்குறிப்பிடுவதால் மொத்தத் தமிழர்களின் எண்ணிக்கையைப் பெற முடியவில்லை. மேலும் வயது வந்த தமிழர்களும் ஆங்கில மொழியில் பேசுகின்ற தமிழர்களும் இலங்கையில் நடைபெறுகின்ற இனப் பிரச்சினை காரணமாக வீட்டில் பேசுகின்ற மொழி ஆங்கிலம் எனப் படிவங்களில் போடுவதாலும் தமிழர் பற்றிய மொத்தத் தொகையைப் பெற முடியாத நிலை இருக்கின்றது.

அதேபோன்று மேற்படி இலாகாவினரால் மேற்கொள்ளப்படும் குடிசன மதிப்பு எண்ணிக்கையின்போது "பிறந்த நாடு" என்ற அடிப்படையிலும் மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப்படுகின்றது.

இதனால் அவுஸ்திரேலியாவிலும் ஏனைய நாடுகளிலும் பிறந்து வளர்ந்த இளம்தலைமுறையினர்கள் "பிறந்த நாடு" என்று பகுப்பினுள் இலங்கை என்று குறிப்பிடாமல் தாம் பிறந்த நாடு எதுவோ அவற்றையே குறிப்பிடுகின்றார்கள்.

இதன் விளைவாகத் தமிழ் இளம் தலைமுறையினரின் தொகை இக் கணக் கெடுப்பில் "இலங்கை" என்ற பகுப்பினுள் இடம்பெறாமல் போய்விடுகின்றது.

மத அடிப்படையில் ஈழத்தமிழர்கள் பெரும்பாலானவர்கள் இந்துக்களாகவும் சிறுதொகையினர் கிறிஸ்தவர்களாகவும் இருக்கின்றார்கள். சிங்கள இன மக்களில் சிறு தொகையினர் கிறிஸ்தவர்களாக இருக்கின்றார்கள்.

இதன் விளைவாக மத அடிப்படையிலும் இலங்கைத் தமிழரைச் சரியாகக் கணக்கிட முடியவில்லை.

எனவே அவுஸ்திரேலியாவில் இன அடிப்படையில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு எடுக்காதவரை எத்தனை ஈழத் தமிழர்கள் அவுஸ்திரேலியாவில் உள்ளனர் என்று சரியாகக் கணிப்பது இயலாது.

இந்நிலையே ஈழத்தமிழர்கள் குடிபெயர்ந்து வாழுகின்ற சுமார் 16 நாடுகளில் இருப்பதை 2013-14 காலப்பகுதியில் இந்நூலாசியரின் ஆய்வுப் பயணத்தின்போது நேரில் கண்டறியக் கூடியதாக இருந்தது.

இதற்கான காரணங்களைக் கேட்ட பொழுது இன அடிப்படையில் மக்கள் தொகை கணக்கெடுப்பதை அந்த நாட்டு அரசாங்கங்கள் விரும்பவில்லை எனப் பொதுவாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான பல்வேறுபட்ட சிக்கல்களுக்கு நடுவே அவுஸ்திரேலிய அரசின் குடிசன மதிப்பு இலாகாவினால் 1991 தொடக்கம் 2010 வரையில் எடுக்கப்பட்ட சனத் தொகைக் கணக்கெடுப்பினைப் பல்வேறு கோணங்களில் அலசி ஆராய்ந்து பார்த்த பொழுது சுமார் 20,000 இற்குக் கூடுதலாக 25 ஆயிரத்துக்கு உட்பட்ட ஈழத்தமிழர்கள் அவுஸ்திரேலியாவின் ஆறு மாநிலங்களிலும் நிரந்தமாக வாழ்ந்து வருவதைக்காண முடிகின்றது.

இதில் நியூ சவுத்வேல்ஸ் மாநிலத்தில் கூடுதலாகவும் அடுத்ததாக விக்ரோறிய மாநிலத்திலும் அதனைத் தொடர்ந்து குயின்ஸ்லாண்ட் மாநிலத்திலும் ஈழத் தமிழர்கள் அதிகளவில் தமது குடியிருப்புக்களை அமைத்து இருக்கின்றார்கள்.

ஏனைய மாநிலங்களில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே ஈழத்தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

(தொடரும்)

# டிப்பர் வாகனம் மோதியதில் 18 மாடுகள் உடல் சிதறிப் பலி! ஏ-35 வீதியில் துயரம்

**(கண்டாவளை)**

**கிளிநொச்சி-பரந்தன் ஏ-35 வீதியின் வெலிக்கண்டல் சந்திப்பகுதியில் வாகனத்தில் மோதுண்டு 18 மாடுகள் உயிரிழந்துள்ளன. இத்துயரச் சம்பவம் கிளிநொச்சி-பரந்தன் முல்லைத்தீவு ஏ-35 வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.**





விசுவமடு பகுதியில் இருந்து 35 வீதியூடாக வேகமாக வந்த டிப்பர் வாகனம் வீதியால் சென்ற மாடுகளை மோதித் தள்ளிவிட்டு குறித்த டிப்பர் வாகனம் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாக இதனை அவதானித்தவர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் கால்நடை பண்ணையாளர்கள் தமது கால்நடைகளை பயிர்ச்செய்கைக்கு உட்படாத பகுதியான வெலிக்கண்டல்பகுதியில்வைத்து பராமரித்து வருகின்ற நிலையில் இவ்வாறு விபத்து இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இச்சம்பவம் தொடர்பாக மாடுகளின் உரிமையாளரினால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன்மாடுகளை மோதி இறக்கச் செய்துவிட்டு தப்பியோடிய டிப்பர் சாரதியைக் கைது செய்யும் நடவடிக்கையையும் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-315)

## விபத்துக்களால் உயிரிழந்தவர்களில் பெரும்பான்மை இளவயதினரே

### சட்ட வைத்திய அதிகாரி

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற விபத்துக்களால் உயிரிழந்தவர்களில் 70 வீதமானோர் இளவயதுடையவர்கள்என கிளிநொச்சி வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சி வைத்தியசாலையில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற வீதி விபத்துக்கள் தொடர்பான செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைய நாட்களாக விபத்துக்களால் உயிரிழப்பவர்களின் வீதம் அதிகரித்துச் செல்கின்றது. குறிப்பாக டிப்பர் உள்ளிட்ட கனரக வாகனங்களாலேயே அதிகளவான விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த விபத்துக்களில் உயிரிழந்தவர்களில் 70 வீதமானவர்கள் இள வயதுடையவர்களாகக் காணப்படுகின்றனர் எனத் தெரிவித்தார்.

இதேவேளை இளவயதுடையவர்களும் அதிகளவில் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையிலே விபத்துக்களால் உயிரிழந்தவர்களது உடலங்கள் உரிய உடல் கூற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்படுகின்றன. அவர்களில் போதைப் பொருள் பாவனையினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை என இதுவரை பதிவாகவில்லை எனவும் உயிரிழந்தவர்களின் உடல் கூற்று பரிசோதனைகள், இரத்த மாதிரிகளில் அவ்வாறு பதிவாகவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

வீதி விபத்துக்களால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் சாரதிகளும் பொது மக்களும் விழிப்புடன் செயற்பட்டால் மாத்திரமே தவிர்க்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(4-5-100)

## வடக்கிற்கான புகையிரத சேவை வழமைக்குத் திரும்பியது



(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்று முன்தினம் அதிகாலை கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதம் ஈரப்பெரியகுளம் புனாவை எல்லைப் பகுதியில் தடம்புரண்டதையடுத்து புகையிரதப் பாதை சீரமைப்புப்பணிகளும் தடம் புரண்ட புகையிரதப் பெட்டிகளை அகற்றும் பணிகளும் இடம்பெற்று பிற்பகல் 2.30 மணியளவில் வடக்கிற்கான புகையிரத சேவைகள் வழமைக்குத்திரும்பின.

வவுனியாவில் நேற்று முன்தினம் அதிகாலை கொழும்புக்குச் சென்ற கடுகதி புகையிரதம் ஈரப்பெரியகுளம் பளாவை எல்லைப் பகுதியில் புகையிரதப் பாதையைவிட்டு விலகி தடம் புரண்டுள்ளது. இதையடுத்து தடம் புரண்ட புகையிரதப் பெட்டிகளை கழற்றிவிட்டு ஏனைய பெட்டிகளுடன் ஒரு மணி நேரத்தின் பின்னர் புகையிரதம் கொழும்பு நோக்கி தனது சேவையை மேற்கொண்டது .

இந்நிலையில் தடம் புரண்ட பெட்டிகளை அகற்றும் பணிகள் புகையிரத அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்டிருந்த அதே வேளை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற புகையிரதங்கள் அனைத்தும் வவுனியா புகையிரத நிலையத்தில் தரித்து வைக்கப்பட்டுள்ளதுடன் கொழும்பிலிருந்து யாழ்.நோக்கி வந்த புகையிரதங்கள் மதவாச்சி புகையிரத நிலையில் தரித்துநிறுத்தப்பட்டிருந்தது. எனினும் பிற்பகல் 2.30 மணியளவில் புகையிரதப் பாதைகள் சீரமைக்கப்பட்டு தடம் புரண்ட புகையிரதப் பெட்டிகள் அங்கிருந்து அகற்றப்பட்டு வடபகுதிக்கான புகையிரத சேவைகள் வழமைக்குத் திரும்பியது. (4-5-299)



# பிள்ளைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் நோக்கில் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்

## பிரதமர் திட்டவட்டம்

(கொழும்பு)

**பிள்ளைகளுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் நோக்கில் நாட்டையும் தேசத்தையும் கட்டியெழுப்ப வேண்டும் என்றும் அதற்காக தனது கடமையை நிறைவேற்றுவதற்கான உரிய தருணம் தற்போது வந்துள்ளதாகவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**



குளியாப்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பொன்றின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்கால சந்ததியினருக்காக தமது ஆட்சிக்காலத்தில் நிறுவப்பட்ட துறைமுகம், விமான நிலையம் போன்ற வளங்களை இருநூறு வருட காலத்திற்கு விற்பனை செய்வதற்கு கடந்த நல்லாட்சி அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டது. நாட்டின் வளங்களை இவ்வாறு விற்பனை செய்வது பாரிய குற்றமாகும் என பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

எதிர்கால சந்ததியினருக்காக ஏதேனுமொன்றை விட்டுச்செல்ல வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தமது ஆட்சிக் காலத்தில் இவ்வாறானதொரு அபிவிருத்தி செயற்பாடு முன் னெடுக்கப்பட்டதாக சுட்டிக்காட்டிய பிரதமர், எனவே இம்முறை தேர்தலில் இந்த செயல்கள் அனைத்தையும் மனதில் கொண்டு நன்கு சிந்தித்து மக்கள் தமது பொன்னான வாக்குகளை வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தற்போது இரண்டாக பிளவுபட்டுள்ள ஐக்கிய தேசிய கட்சி சிறிகொத்தாவை கைப்பற்றுவதற்கே மக்களின் ஆணையைப்பெற முயற்சிக்கிறது எனத் தெரிவித்த பிரதமர. தான் மக்களின் ஆணையைக் கோருவது நாட்டின் கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு அபிவிருத்தி மற்றும் கிராம மட்ட அபிவிருத்தி உள்ளிட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கே என்றும் குறிப்பிட்டார். (ஐ-4)

# ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 298 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமான ஐக்கிய அரபு இராச்சியத்தில் சிக்கியிருந்த 298 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பினர்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானம் ஒன்றின் மூலம் குறித்த நபர்கள் வருகை தந்தனர். இவர்கள் அனைவரும் மத்தள விமான நிலையத்திற்கே அழைத்து வரப்பட்டனர். இவர்கள் அனைவரும் மத்தள விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். (ஐ-4)

# கட்சி உறுப்புரிமையிலிருந்து விலகினார் ரோஹித போகொல்லாகம

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்புரிமையை முன்னாள் அமைச்சர் ரோஹித போகொல்லாகம இராஜினாமா செய்துள்ளார்.

இற்கமைய தாம் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுத் தேர்தல் தேசியப் பட்டியல் மற்றும் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து விலகியுள்ளதாக ரோஹித போகொல்லாகம அறிவித்துள்ளார்.



இது தொடர்பிலான கடிதத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலளார் அகிலவிராஜ் காரியவசத்திற்கு அனுப்பி வைத்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு முன்னர் ரோஹித போகொல்லாகம கிழக்கு மாகாண ஆளுநராகவும் செயற்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# ஹோட்டல் உரிமையாளர் படுகொலை 30 பேரிடம் வாக்குமூலம் பதிவு

(பிலியந்தல)

பிலியந்தல பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், சம்பவம் தொடர்பில் 30 பேரிடம் இதுவரை வாக்குமூலம் பெற்றுக்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், சுற்றியுள்ள சி.சி.ரி.வி காட்சிகளை ஆய்வு செய்து வருவதாக பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது.

50 வயதுடைய ஹோட்டல் உரிமையாளர் சடலமாக கடந்த 7 ஆம் திகதி மீட்கப்பட்டதுடன் அவரது மனைவி படுகாயமடைந்த நிலையில் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனிதர்கள் ஜாக்கிரதை!

நாய்கள் ஜாக்கிரதை என்று அங்கங்கே பலகை மாட்டியிருக்கின்றதைப் பார்த்திருப்பீர்கள். காலம் போகின்ற போக்கைப் பார்த்தால் ''மனிதர்கள் ஜாக்கிரதை என்று தெருவுக்குத் தெரு எழுதி மாட்டி வைக்கலாம் போல இருக்கு.

ஆமாம் சேர். இவன் எப்பொழுது வருவான்...? எந்த ரூபத்திலே வருவான்? என்ன செய்வான்? என்கிறதை ஊகிக்கிறது மிகவும் கஷ்டம். நுகர்வோர் பாதுகாப்பு (Consumer Protection) என்று எல்லோரும் சொல்கின்றார்களே... அந்தப் பாதுகாப்பு யாரிடம் இருந்தது? மனிதனிடம் இருந்து மனிதனைப் பாதுகாக்கின்ற ஒரு முயற்சிதானே அது?

புலியும் சிங்கமும் வந்தால் இங்கே கலப்படம் செய்து கொண்டிருக்கு?

கரடியும் நரியும் வந்தால் பொய்யான முத்திரையை குத்தி வியாபாரம் செய்து கொண்டிருக்கு? எல்லாம் மனிதன் செய்கின்ற தப்புத்தான்... மனிதனே அதற்கு பலியாகின்றான்.

மிளகாய்த் தூளிலே மரத்தூளை கலந்து விடுகின்றான் சேர். அதை வாங்கி ஆகா பேஷ்...என்று சமையல் செய்து சாப்பிட்டு விடுகின்றான். அதற்குப் பின் வயிறைப் பிடித்துக் கொண்டு நிற்கின்றான் வயிறு வலிக்குதே என்று.

மனிதனிலே உள்ள நம்பிக்கை மனிதனுக்கு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே தான் வருகின்றது.

இனிமேல் வருங்காலத்திலே மனிதனுடைய நடவடிக்கைகளை இயந்திரங்கள் கண்காணிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை வந்து கொண்டிருக்கு. இப்பொழுது கேட்டால் ஆச்சரியப்படுவீர்கள். ஆனால் வரப் போகிறது என்னமோ உண்மை தான்.

யாருக்கும் தெரியாமல் ஒரு மனிதனுடைய நடவடிக்கைகளை. கணனி மூலமாக கண்காணிக்க முடியும்.

தாய்லாந்திலே பதினைந்து வயதிற்கு மேற்பட்டவர்களுக்கெல்லாம் அடையாள அட்டை கொடுத்து விடுகின்றார்களாம். அதிலே அந்த நபருடைய வர்ணப்படம், முகவரி, அடையாளக்குறி, கைரேகை, குடும்பப் பின்னணி, குற்றப்பட்டியல் எல்லாம் இருக்கும்.

சிங்கப்பூரிலே உள்ள 27 இலட்சம் மக்கஞக்கு ஏற்கனவே இது மாதிரியான மின்னணு அடையாளச் சீட்டு கொடுத்து விட்டார்களாம். ஒவ்வொரு மோட்டார் வண்டியிலேயும் மின்னணு எண் பலகையும், சின்னக் கறுப்புப் பெட்டியும் பொருத்தப் போகிறார்களாம்.

தெருக்களிலே வீதியின் மேற்பரப்பிலேயும் உணர்கருவிகள் (Sensors) பொருத்தப்படும். இது மூலமாக தனி நபரின் வீதி உபயோகம் எவ்வளவு என்பதை கணக்குப் போடுகின்றார்களாம்.

சிறையிலேயிருந்து கைதிகள் விடுதலையாகுகின்றார்களே...அப்போ அவர்கள் உடம்பிலே மின்னணு முறையாலே அடையாளம் போட்டுவிடுளகிறது ...பின்பு அவர்கள் நடமாட்டத்தை கண்காணிக்கிறது...எங்கே போகின்றார்கள், வருகின்றார்கள் என்பது தெரிந்துவிடும். இந்தப் பழக்கம் இப்பொழுதும் அமெரிக்காவிலே உண்டாம். ஒலியெழுப்புகின்ற ஒரு கருவியை (Beeper) உடம்பிலேயே மாட்டிவிட்டு விடுகின்றார்கள். அதை ஒன்றும் செய்ய முடியாது. (Tamper proof beeper)

குற்றவாளி குறிப்பிட்ட எல்லையை மீறி எங்கேயாவது போனால்...அந்தக் கருவி சத்தம் போட்டு அதிகாரிகளுக்குக் காட்டிக் கொடுத்துவிடும்.

இன்னொரு குறிப்பிட்ட எல்லையை மீறி எங்கேயாவது போனால்.. அந்தக் கருவி சத்தம் போட்டு அதிகாரிகளுக்குக் காட்டிக் கொடுத்துவிடும். இன்னொரு செய்தி என்ன தெரியுமா?

வலது கையிலே மின்னணுச் சில்லு (chip) ஒன்றைப் பொருத்திக்கொள்கிறது.

கடையிலே போய் பொருட்கள் வாங்குகின்றோம். வாங்கிக் கொண்டு அதற்குப் பின்பு வலது கையை நுண்படம் எடுக்கின்ற கருவி (Scanner) மேலே காட்டினால் போதும் உங்கள் பேர் கணக்கிலே அந்த செலவு சரிகட்டப்படும்.

இன்னொரு நுண் சில்லு உண்டு... Micro chip. மிகச் சிறியது. இதை ஊசி மூலமாக உடம்புக்குள்ளே செலுத்தி விடலாம். அதற்குப் பின் அந்த ஆள் எங்கே போனாலும் தெரிந்து போய்விடும். இப்பொழுது மிருகங்களுக்கு இதை செய்து கொண்டு இருக்கிறார்களாம். மனிதன் தொடர்ந்து ஏமாற்றிக் கொண்டிருந்தால் அவனுக்கும் இது மாதிரி செய்ய வேண்டிய அவசியம் வந்துவிடும்.

இதையெல்லாம் நினைத்துப் பார்த்தாவது மனிதன் திருந்த வேண்டும். இன்னொருத்தரை ஏமாற்றுகின்ற வேலையை நிறுத்த வேண்டும். இல்லை என்றால் வருங்காலத்திலே இப்பொழுது நான் சொன்னதெல்லாம் வந்து தான் தீரும்! அவ்வளவு தூரத்திற்கு ஏன்?எழுத்திலே கூட ஏமாற்று வேலை நடக்கின்றது சேர்? ஒரு ஆள் ஒரு புத்தகம் எழுதினார். "பணம் சம்பாதிக்க நூறு வழிகள்" என்று. இப்படி ஒரு புத்தகம் எழுதிவிட்டு அவரே பிச்சை எடுத்துக் கொண்டிருந்தார். என்ன இது? பணம் சம்பாதிக்க நூறு வழிகள் என்று புத்தகம் எழுதிவிட்டு... நீங்கள் பிச்சை எடுக்கின்றீர்களே என்று கேட்டார்கள். அதற்கு அவர்... "அந்த நூறு வழிகளிலே இதுவும் ஒரு வழி" என்றாராம்.

# பச்சை நிறத்தை சஜித் அணி பயன்படுத்தக்கூடாது

## ஆணைக்குழுவிற்கு அகிலவிராஜ் கடிதம்



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் வர்ணமான பச்சை நிறத்தை தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது பயன்படுத்துவதன் ஊடாக கட்சி ஆதரவாளர்களைக் குழப்புவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் குற்றஞ்சாட்டியதுடன் சஜித் பிரேமதாஸ தரப்பினர் பச்சை வர்ணத்தைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இதுகுறித்து தெளிவுபடுத்தி தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிற்கு அவர் அனுப்பி ல்வைத்திருக்கும் கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)



# ஆன்மீகம்



## ஒன்றையே பற்று, உறுதியாகப் பற்று!

அப்போதைக்கு அப்போது தோன்றி மறைவது ஆசை! ஒன்றையே எப்போதும் உள்ளத்தில் இருத்தி ஒளிர வைப்பதே இலட்சியம். இலட்சியம் என்று ஒன்றை வகுத்துக் கொள்ளாத மனிதன் தன் வாழ்வையே அலட்சியம் செய்கிறான் என்பதுதான் பொருள். ஆசை என்பது ஒரு மாம்பழத்தைச் சாப்பிடுவது போன்றது என்பது ஒரு மாந்தோப்பை உருவாக்குவது போன்றது.

நம்மால் அதையெல்லாம் நடத்திக்காட்ட முடியுமா என்று நினைக்காமல் சாதிக்க முடியும் என்று நம் முன்னோர்கள் எண்ணியதால்தான் கட்டாந்தரைகள் கட்டடங்கள் ஆகியிருக்கின்றன. பொட்டல் காடுகள் பூஞ்சோலைகளாக மாறியிருக்கின்றன. வறண்ட பிரதேசங்கள் வயல்வெளிகளாக உருப்பெற்றிருக்கின்றன.

"கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள்
கவர்ந்திட மாட்டோவோ? - அட
மண்ணில் தெரியுது வானம் - அது நம்
வசப்படலாகாதோ?"

-என்றான் மகாகவி பாரதி

"எண்ணிய நான் எண்ணியவாறு எனக்கருளும் தெய்வம்' என்று பாடுகிறார் வள்ளற்பெருமான். அயர்ச்சி இல்லாத முயற்சி நம்மை உயர்ச்சியில் வைக்கிறது. மருந்துக்குக்கூட கல் கிடைக்காத மருத நிலப்பகுதியில் - தஞ்சையில் - குறிஞ்சியைக் கொண்டு வந்தானே ராஜராஜ சோழன். பெரிய கோயில் - பெரிய நந்தி - பெரிய லிங்கம் எல்லாம் எப்படி வந்தன? "பெரிதினும் பெரிது கேள்" என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க அவன் எண்ணம் பெரிதாக இருந்தது. இலட்சியம் உறுதியாக இருந்தது.

அதனால்தான் தஞ்சை பெரிய கோயில் இப்போது தமிழகத்தில் தலைநிமிர்ந்து நிற்கிறது. தமிழகத்தையே தலைநிமிர வைக்கிறது. வயல்வெளியாக இருக்கும் இப்பகுதியில் இப்படி ஒரு கோயில் அமைப்பது சாத்தியமா என ராஜராஜன் தன் இலட்சியத்தில் பின்வாங்கியிருந்தால் அவன் இப்படி ஒரு பேர் வாங்கியிருக்க முடியுமா?

"குறியைக் குறியாது குறித்தறியும் நெறி" - என்று ஒரு சொற்றொடரை நம் சிந்தனைக்குத் தருகிறார் அருணகிரிநாதர். "வாக்கிற்கு அருணகிரி" என்று புலவர்களாலேயே புகழப்பெறுகின்ற அருணகிரிநாதர் கந்தர் அநுபூதியில் காட்டும் மந்திரச்சொல் இது. ஏற்றுக் கொண்ட இலட்சியமே குறி. அந்தக் குறியில் மிகக் கவனமாக இருந்து வேறு எதையும் குறியாமல் அது ஒன்றையே உள்வாங்கிக் கொண்டு அதை நோக்கி நடைபோடுவதுதான் குறியை அடையும் நெறி என்கிறார். இதை மகாபாரத சம்பவம் ஒன்று மனதில் பதியும்படி விளக்குகின்றது. குருநாதராகப் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் அமைந்தவர் துரோணர். அவர் ஒருநாள் குருகுலத்தில் மாணவர்களுக்கு குறி பார்த்து கணை விடும் பயிற்சி வகுப்பை எடுத்தார். அடர்ந்து வளர்ந்திருந்த ஒரு மரம். அந்த மரத்தின் ஒரு கிளையில் ஒரு காக்கை பொம்மையைக் கட்டி வைக்கச் சொன்னார். துரோணர் அனைவரையும் அழைத்தார். "இந்தக் காக்கைதான் உங்கள் குறி. அம்பைச் செலுத்தி அதைக் கீழே வீழ்த்துபவனுக்கு ஒரு அன்பளிப்பு கட்டாயம் உண்டு. ஒரே முறைதான் கணை செலுத்த வேண்டும்" என்றார். எல்லோரும் ஆடாமல் அசையாமல் வில்லும் அம்பும் ஏந்தி நின்றார்கள். துரோணர் "துரியோதனா! இலட்சியத்தைப் பார்க்கின்றாயா?" என்றார்.

"பார்க்கின்றேன்" என்றான் துரியோதனன்.

"காக்கை பொம்மை கட்டிய கிளை தெரிகின்றதா?"

"தெரிகின்றது"

"மரம் தெரிகின்றதா?"

"தெரிகின்றது"

"நான் தெரிகின்றேனா?"

"தெரிகின்றீர் குருநாதரே!"

துரியோதனா! கீழே வில்லை வைத்துவிடு.

துரியோதனன் நிலத்தில் வில்லை வைத்தவுடன் தருமர் தொடங்கி அனைத்து மாணவர்களையும் அழைத்து மேற்கண்ட கேள்விகளையே கேட்டார். அனைவரும் துரியோதனன் சொன்னவாறே பதில் கூறினார்கள். முடிவில் அர்ஜுனனை அழைத்தார்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## பொருளாதார மீளுருவாக்கம்: மத்திய வங்கி சலுகை!

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி, நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வழங்கல் வீதம் ஆகியவற்றைக் குறைக்க முடிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையின் கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, தலா 100 அடிப்படைப் புள்ளிகள் மூலம் நிலையான வைப்பு வசதி 4.50 சதவீதமாகவும் மற்றும் கடன் வழங்கல் வீதம் 5.50 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

கொரோனா நெருக்கடி காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார தொய்வு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தாக்கம் 2020 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் கடுமையாக ஏற்பட்டுள்ளது.

எனவே, பொருளாதார மீளுருவாக்கம் எதிர்பார்க்கப்படும் நிலையில் ஆண்டின் இரண்டாம் பாதியில் நாணய மற்றும் நிதி ஊக்க நடவடிக்கைகளின் ஆதரவுடன், வளர்ச்சியை ஊக்குவித்தல், நம்பிக்கையை மேம்படுத்துதல், பொருளாதார கட்டமைப்பை உயர்த்துவது கட்டாயமாகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## ஹெரோயின், தோட்டாக்களுடன் மூன்று பெண்கள் கைது

(கொழும்பு)

ஹுங்கம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஹெரோயினுடன் மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது குறித்த பெண்களிடம் இருந்து 52 கிராம் 615 மில்லிகிராம் ஹெரோயின், 9 மில்லி மீற்றர் துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தும் தோட்டாக்கள் 2, மகசின் ஒன்று, சட்லைட் தொலைபேசி ஒன்று மற்றும் 4 கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 60 | 80 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 140 | 120 | 180 | 300 |
| தக்காளி | 130 | 150 | 120 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 110 | 100 |
| கோவா | 150 | 120 | 120 | 140 |
| கரட் | 120 | 140 | 140 | 200 |
| பூசணி | 40 | 35 | 40 | 60 |
| புடோல் | 50 | 80 | 60 | 120 |
| வாழைக்காய் | 140 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 240 | 150 |
| பெரிய வெங்காயம் | 70 | 90 | 80 | 100 |
| பாகற்காய் | 180 | 240 | 220 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 100 | 120 |
| பயற்றங்காய் | 80 | 100 | 60 | 60 |
| லீக்ஸ் | 150 | 110 | 140 | 120 |
| பீற்றூட் | 100 | 100 | 100 | 120 |
| கறிமிளகாய் | 180 | 180 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 140 | 200 |
| போஞ்சி | 160 | 130 | 140 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | -- | 60 |
| கீரை - 1 பிடி | 30 | 25 | 30 | 20 |
| தேசிக்காய் | 300 | 200 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 60-80 |
| இராசவள்ளி | -- | 250 | 300 | 280 |
| வெங்காயப்பூ | 220 | 240 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 90 | -- | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 30 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 60 | 50 | 60 |




# சிங்கத்தை ஏமாற்றிய முயல்

ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வாழ்ந்து வந்தது. அது அங்கிருந்த பிராணிகளை தன் உணவுக்காக தொடர்ந்து வேட்டையாடியது. இதனால் காட்டில் உள்ள பிராணிகள் பயத்துடனேயே வாழ்ந்து வந்தன.

நாளுக்கு நாள் சிங்கத்தின் தொல்லை அதிகரித்தது. அதனால் எல்லாப் பிராணிகளும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வந்தன. சிங்கத்திடம் சென்று, நீங்கள் சாப்பிடுவதற்காக எங்களில் ஒருவர் ஒவ்வொரு நாளும் உங்கள் இருப்பிடத்துக்கு அனுப்பி வைக்கப்படுவர்.

இனிமேல் வேட்டையாடுவதற்கு வெளியில் வர வேண்டிய அவசியம் இல்லை என்றது. அதற்கு சிங்கமும் சரி என்றது.

முயல் செல்ல வேண்டிய முறை வந்தது. நண்பர்களே! எனக்கு சற்று அவகாசம் தாருங்கள். எனது தந்திரத்தால் நீங்களும் சிங்கத்தின் அநியாயத்திலிருந்து தப்ப வழி பிறக்கும். வருங்கால சந்ததிகள் காட்டில் நிம்மதியாக வாழ முடியும் என்றது.

பிறகு முயல் தாமதமாகச் சிங்கம் இருக்கும் இடத்திற்கு சென்றது. சிங்கம் முயலை நோக்கி அட அறிவு கெட்டவனே ஏன் இவ்வளவு தாமதம்? என்று கேட்டது.

முயல், அரசே நான் வரும் வழியில் என்னை இன்னொரு சிங்கம் தாக்க வந்தது. அதனிடம் இருந்து நான் தப்பித்து வர தாமதமாகி விட்டது என்றது.

என்னைப்போல் ஒருவனா? இந்த காட்டிற்கு நான் மட்டும் தான் ராஜாவாக இருக்க வேண்டும். முதலில் அவனை அழித்தால் தான் நமக்கு தினமும் சரியாக உணவு கிடைக்கும் என்று சிங்கம் நினைத்தது.

அதனால் புதிதாக காட்டுக்குள் வந்திருப்பவனை கொல்ல நினைத்து முயலிடம் அவன்



இருக்கும் இடத்தைக் காட்டு. முதலில் அவனைக் கொன்று விட்டுப் பிறகு உன்னை சாப்பிடுகிறேன் என்றது.

முயல் தந்திரமாக சிங்கத்தை தூரத்தில் தெரியும் கிணற்றுக்கு அழைத்துச் சென்றது. இந்த கிணற்றில் தான் அந்த சிங்கம் பதுங்கியிருக்கிறது என்றது.

சிங்கம் கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தது. அதில் சிங்கத்தின் முகம் தெரிந்தது. அது தன்னுடைய முகம் தான் என்று அறியாத சிங்கம் தன்னுடைய எதிரி என்று நினைத்து அவனை அழிக்க நினைத்து கிணற்றுக்குள் குதித்தது.

சிங்கம் கிணற்றுக்குள் விழுந்த பின் முயல் மற்றப் பிராணிகளை நோக்கி சந்தோஷத்தால் துள்ளிக் குதித்து ஓடியது. சிங்கம் இறந்து போனது. மற்றப் பிராணிகளிடம் சென்று நம்முடைய எதிரி அழிந்து விட்டான் என்று சந்தோசத்தில் கத்திச் சொன்னது.

முயலின் இச்செய்தியைக் கேட்ட பிராணி கள் அனைத்தும் ஒன்று கூடி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன. காட்டு மிருகங்கள் அனைத்தும் முயலுக்கு மரியாதை செய்தன. அனைத்து மிரு கங்களும் நிம்மதியாக வாழ்ந்தன.

**நீதி :**
**கோபத்தில் எடுக்கும் முடிவு சரியாக இருக்காது.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## வீரப்பரம்பரை

கொடுங்கோன் மற்றும் சிம்ம விஷ்ணுவிடம் தோல்வியடைந்த களப்பிரர்கள், பல்லவர் காலத்தில் சிற்றரசர்களாக அடங்கிப் போனார்கள்.

இந்தச் சிற்றரசர்களையும் முதலாம் நரசிம்ம வர்மனும் இரண்டாம் நந்திவர்மனும் வென்று களப் பிரர்களை துளிச் சுவடி ல்லாமல் மறையச் செய் தார்கள். தமிழகம், மீண்டும் மூவேந்தர்களின் ஆட்சியின் கீழ் வந்தது.

களப்பிரர்களுக்கு அடுத்து தமிழகம் பல்லவர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

அக்காலக்கட்டத்திலும் சோழர்களின் ஆதிக்கம் சொல்லிக்கொள்ளும் படியாக இல்லை.

கி.பி.875 வரை சோழர்களால் தலையெடுக்க முடியவில்லை. ஆட்சியதிகாரம் முற்றிலும் பறிக்கப்பட்டுச் சோழர்களின் எதிர்காலமே கேள்விக் குறியாக இருந்த காலமது.

கி.பி.5இலிருந்து 8ஆம் நூற்றாண்டு வரை பழையாறை, உரகபுரம் ஆகிய ஊர்களில் மட்டுமே சோழர்கள் வாழ்ந்து வந்தார்கள். தவிரவும், செல்வாக்கு இல்லாத அக் காலகட்டத்தில் சோழர்கள் காவிரிக்கரையோரமாக வாழ்ந்து முற்றிலுமாக நசிந்து போகாமல் பலர் தங்கள் இருப்பிடங்களை விட்டுத் தெலுங்கு, கன்னட நாடுகளுக்கு குடி பெயர்ந்தார்கள். அவர்கள் ரேனாண்டுச் சோழர்கள் என்றழைக்கப்பட்டார்கள்.




எப்படி ராஜராஜன் காலத்தில் தஞ்சாவூருக்கு ஒரு தனிச்சிறப்பு இருந்ததோ, அதுபோல அதற்கு முன்னர் சோழர்களின் வாழ்விடமாக இருந்தது, பழையாறை. இது நீண்ட வரலாறு கொண்ட நகரம் ஆகும்.

இங்கே வரலாற்றுக் காலத்துக்கு முந்தைய முதுமக்கள் தாழிகளும் பானையோடுகளும் ஏராளமாகக் கிடைத்துள்ளன. சோழர் காலத்தில் அது பழைய ஆறை என்றும் அழைக்கப்பட்டது.

பல்லவர்கள் தென்னாட்டை ஆண்ட சமயத்தில் பழையாறை சோழர்களின் தலைநகரமாக இருந்திருக்கிறது. பழையாறை சோழர்களின் தலைநகரமாக இருந்திருக்கிறது. பழையாறையில் வாழ்ந்து கொண்டு பல்லவர்களுக்கு அடிபணிந்து வரி செலுத்திக் கொண்டிருந்தார்கள் சோழர்கள்.

மீண்டும் விஜயாலய சோழனால் சோழர் ஆட்சி திரும்பிய போதும் பழையாறையின் முக்கியத்துவம் குறையவில்லை. சோழ அரசின் தலைநகரமாகத் தஞ்சை மாற்றப்பட்டாலும் சோழர்களின் பல மாளிகைகள் பழையாறையில் தான் இருந்தன.(கல்கியின் பொன்னியின் செல்வனில் பெரும்பாலான நிகழ்ச்சிகள் பழையாறையில் தான் நிகழ்கின்றன)

களப்பிரர்களிடமிருந்து காஞ்சியை மீட்ட பல்லவர்கள், மீதமுள்ள குறுநில மன்னர்களையும் தோற்கடித்துக் காவிரிக்கரை வரை தங்கள் அதிகார எல்லையை விரிவுபடுத்தினார்கள். திருப்பம் கி.பி. 850இல் வந்தது. அதை விஜயாலய சோழன் ஏற்படுத்தினார்.

திருவாலங்காட்டுச் செப்பேடு, அந்தத் திருப்பத்தை அதாவது, விஜயாலய சோழன் தஞ்சையைக் கைப்பற்றி சோழ ராஜ்ஜியத்தை நிறுவியதை இவ்வாறு கூறுகிறது.

**'கோச்செங்கணான் மரபில், வெற்றிக்கு இருப்பிடமாயும் தோள் வலிமை கொண்டவனாயும் மன்னர்களால் வணங்கப்படும் பாத பீடம் உடைய வனாகவும் திகழ்ந்த விஜயாலயன் பிறந்தான்'**

என்று வர்ணிக்கும் அந்தச் செப்பேடு, அழகான மாளிகைகள் உடைய தஞ்சாபுரியை விஜயாலய சோழன் வென்றான் என்கிறது.

சோழர்களுக்கு முன்னால் தஞ்சையை ஆண்டவர்கள், பாண்டியர்களோ, சோழர்களோ, சேரர்களோ அல்லர். முத்தரையர்கள் என்கிற ஓர் இனத்தவர் தஞ்சையை ஆண்டு வந்தார்கள்.

இவர்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்லர். எப்படி, இரண்டாம் நூற்றாண்டில் கர்நாடகாவிலிருந்து களப்பிரர்கள் தமிழ்நாட்டுக்குள் நுழைந்தார்களோ, அதுபோல இவர்களும் கர்நாடகாவிலிருந்து தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் அல்லர்.

(தொடரும்)

ஆற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்பு இல்லா விட்டால் அந்த ஆற்றல் மதிப்பற்றதாகி விடும்.
~ மாவீரன் நெப்போலியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் பிரசாரங்களை கடுமையாகக் கட்டுப்படுத்தினால்...

ஜனநாயகத்தை நிலைப்படுத்துவதற்காக நடத்தப்படுவதே பொதுத் தேர்தலாகும்.

தேர்தல் வகைமைகள் வித்தியாசப்பட்டாலும் பொதுத் தேர்தல் என்பதே பாராளுமன்ற ஆட்சிக்கான வித்திடல்.

அந்த வகையில் இலங்கையின் பாராளுமன்ற அரசாங்கத்தை அமைப்பதற்கான பொதுத் தேர்தல் எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கெடு காலம்போல, பாராளுமன்றம் கலைக்கப்பட்ட கையோடு கொரோனாத் தொற்று உலகை உலுப்பி நிற்க,

பொதுத் தேர்தலை நடத்துவதில் ஏகப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாயிற்று.

இந்நிலையில் எதிர்வரும் ஓகஸ்ட் 5ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

முன்பெல்லாம் பொதுத் தேர்தல் என்றால், மேடை போட்டு பொதுக்கூட்டங்கள் நடைபெறும்.

கூட்டம் எங்கு நடக்கிறதோ அந்த ஊர் முழுவதும் ஒலிபெருக்கி கட்டப்பட்டு தேர்தல் பிரசார உரைகள் கதறும்.

ஆனால் இம்முறை அதற்கான சந்தர்ப்பம் இல்லை எனலாம்.

வரையறுக்கப்பட்டவர்களின் பங்கேற்புடன் சமூக இடைவெளி பேணுவதும் முகக் கவசம் அணிந்தும் (மாஸ்க்) இருக்கக்கூடிய சூழ்நிலையில் பொதுக் கூட்டம் வைத்து பிரசாரம் செய்வது இயலாத விடயமாயிற்று.

இதுதான் என்றால், ஏலவே நடைமுறையில் இருக்கக்கூடிய சுவரொட்டிகள் ஒட்டுவதற்கான தடை என்ற விடயமும் மிக இறுக்கமாகப் பின்பற்றப்படுகிறது.

தேர்தல் பிரசார சுவரொட்டிகள் ஒட்டப்பட்டால் கைது செய்யப்படுவீர்கள் என்ற அறிவிப்பு சுவரொட்டிகளைக் கடுமையாகக் குறைத்துள்ளது.

இத்தோடு தேர்தல் பிரசார வரையறைகள் முற்றுப் பெறுகிறது என்றால் இல்லவே இல்லை.

தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய நேற்று முன்தினம் அதிரடியான ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதன் பிரகாரம் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ளும் பொருட்டு வீடு வீடாகச் செல்ல முடியாது.

வேண்டுமானால் கட்சி ஆதரவாளர்கள் மூவர் மட்டும் குறித்த நேர வரையறைகளுக்குள் பொதுமக்களின் வீடுகளுக்குச் சென்று பிரசாரம் செய்யலாம் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விதிக்கப்படுகின்ற கட்டுப்பாடுகள், வேட்பாளர்களின் கொள்கை விளக்கத்துக்கும் வாக்காளர் எழுப்பும் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதற்குமான சந்தர்ப்பத்தை இல்லாமல் செய்கிறது.

உண்மையில் தேர்தல் பிரசாரத்துக்கான வாய்ப்புகள் ஜனநாயகத்தின் இயங்கு நிலைக்குப் பேருதவி புரிகிறது என்பதால், தேர்தல் பிரசாரங்களை மக்கள் மத்தியில் முன்னெடுப்பதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவது அவசியமாகும்.

# எம்.சி.சி.குறித்த ஆய்வுக்குழுவின் அறிக்கையை ஆராய மேலும் அவகாசம் வழங்கிய ஜனாதிபதி

(கொழும்பு)

அமெரிக்காவுடனான எம்.சி.சி. உடன்படிக்கை தொடர்பான ஆய்வுக் குழுவின் அறிக்கையை ஆராய்வதற்கு ஜனாதிபதி கோடடாபய ராஜபக்ஷவால், மேலும் இரண்டு வாரங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அவசாசம் அமைச்சரவைக்கு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இதுகுறித்து சில அமைச்சர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கருத்துக்களை வெளியிட்டிருந்த நிலையில் அமைச்சர்களினால் மேலதிக கால அவகாசம் தேவையாகவுள்ளதாக கோரிக்கை விடுக்கப்பட்டதையடுத்து ஜனாதிபதியால் இந்த அவகாசம் வழங்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டிற்கு பாதகமான விளைவை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடுவதில்லை எனபதில் ஜனாதிபதி தெளிவாகவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இரு தரப்பு உடன்படிக்கைகளைக் கையாளும்போது குழந்தைகள் போல அரசாங்கம் நடந்துகொள்ள முடியாது என பந்துல குணவர்த்தன மேலும் கூறியுள்ளார். (ஜ-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 11 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** விளாத்தியடி உரும்பிராய், மருதனார்மடம் விவசாய பண்ணை, அண்ணா பண்ணை, இணுவில் அங்கிலிப்பாய், கொக்கன் வளவு, இணுவில் ஆச்சிரமம், பூவோடை இந்து மயானப் பிரதேசம், உரும்பிராய், இராஜ வீதி இருபாலை வீதி, இராஜ வீதி கோப்பாய், கோப்பாய் கல்வியியற் கல்லூரி, கோப்பாய் இராணுவமுகாம் கோப்பாய் கிருஸ்ணன் கோவிலடி, வடலியடைப்பு, தொல்புரம், வழக்கம்பரை, கள்ளவேம்படி, சுழிபுரம், பத்தனைக் கேணியடி, பிரான்பற்று, பண்டத்தரிப்பு, இடும்பன், சில்லாலை, சாந்தை, மாதகல், காஞ்சிபுரம், ஜம்பு கோளப்பட்டினம், குசுமாந்துறை, காட்டுப்புலம், இளவாலை, பெரியவிளான், மாரீசன் கூடல், சேந்தாங்குளம், மெயகண்டான்பாடசாலை, ஜமபு கோளப்பட்டின விடுதி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** கோவில்குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, வவுனியா நகரம் ஒருபகுதி, பஸார் வீதி, 1ம் குறுக்குத் தெரு, 2ம் குறுக்குத் தெரு, இலுப்பையடி, சூசைப்பிள்ளையார் குளம், கொறவப் பொத்தானை வீதி, றம்பைக்குளம், ஹோட்டல் ஓவியா, எஸ்.வி.ஆர். அரிசி ஆலை, இராணி அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, கிறிஸ்தவகுளம், புளியங்குளம், அரசடிகுளம், காந்திநகர், வாரிக் குட்டியூர், சங்கரபுரம் ஆகிய இடங்களிலும்

மேலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** காலை 9.30 மணியிலிருந்து மதியம் ஒரு மணிவரை ஒலுமடு ஒருபகுதி, சின்ன சாளம்பன், மணவாளப்பட்டன் முறிப்பு ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** சீனத்துறைமுகம், வங்காலை ஒரு பகுதி, முள்ளிப்பழம், தள்ளாடி, கடலோரி வீதி, சாந்திபுரம், Southbar, தரவன்கோட்டை, தள்ளாடி இராணுவ முகாம,டயலொக்தொலைத் தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களிலும் 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரையும்

மேலும் **மன்னார் பிரதேசத்தில்** சிறுநாவற் குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் Palmyrah house, கூல்மென் ஐஸ்தொழிற்சாலை, அநதோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற்சாலை, Palmyrah house கரைசல், எருக்கலம்பிட்டி நீர்ப்பாசன சபை, New Silk Road, தோட்டவெளி, Timex ஆடைத் தொழிற்சாலை, Industrial Estate, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ்தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட்சிற்றி, தள்ளாடி இராணுவ முகாம,டயலொக்தொலைத்தொடர்பு நிலையம், மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களில் காலை 6 மணியிலிருந்து மாலை 3 மணி வரையான காலப்பகுதியில் காலையில் இரண்டு மணித்தியாலங்களும் பிற்பகலில் இரண்டு மணித்தியாலங்களும் மின்சாரம் தடைப்படும்.

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

இறைவனை அடுத்திருப்பவர்களின் வாழ்வு சுருங்காது. முருகனுடைய வலப்புறத்தில் விளங்கும் வள்ளி தேவியின் திருக்கரத்தில் தாமரை வல நேந்திரமாகிய சூரிய ஒளிபட்டு அறுபது நாழிகையும் சுணங்காமல் மலர்ந்த வண்ணமாக விளங்கும். (தொடரும்)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### அன்பும் துறவும்

**மாக்யூன்:** அவை இரண்டும் ஒரே நாணயத்தின் ஒரே பக்கம் தான் (சிரிப்பு)

**தாரா:** அப்படியானால் அன்பு செய்பவர் அவருடைய அன்புக்குரியவரைத் துறந்து விடுகிறார் என்று அர்த்தமா?

**ஸ்ரீஸ்ரீ:** உனது பந்தத்தையும் உடைமைத் தன்மையையும் துறந்துவிடு. துறவு அன்பைக் குறைப்பதில்லை. அதை அதிகப்படுத்துகிறது. துறவு மட்டுமே அன்பையும் மகிழ்ச்சியையும் தொடர்ந்து இருக்கச் செய்கிறது. துறவு இல்லாவிடில் அன்பானது துன்பம், தனக்கே சொந்தம் (உடைமை) என்ற உணர்வு, பொறாமை, கோபம் என மாறுகிறது. துறவானது மன நிறைவைத் தருகிறது. மனநிறைவு அன்பை ஆதரிக்கிறது. ஒருவர் துறவு இல்லாதபோது மனநிறைவற்ற தன்மை, ஏமாற்றம், துக்கம், பயம், சந்தேகம் பாகுபடுத்தி ஆராயும் தன்மையெல்லாம் அடைகிறார். நீண்ட நாடகம் தொடங்குகிறது. இதைத்தான் சமுதாயத்தில் நான் பார்க்கிறோம்- இல்லையா?

துறவிகள் எனத் தவறாக அழைக்கப்படுபவர்கள் வாழ்வில் ஏமாற்றமடைந்து ஓடிப் போயிருக்கிறார்கள். உண்மையான துறவு ஞானத்திலிருந்தும் விவேகத்திலிருந்தும் கால, இட, நியதியைப் பின்னணியில் கொண்ட வாழ்வை பற்றிய ஞானத்திலிருந்து பெருந்தன்மையும் தயாளமும் உடைய இந்தப் பிரமாண்டத்தின் அமைப்பிலிருந்தும் பிறக்கிறது.

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### 16 வகை இலட்சுமிகள்

**ஸ்ரீசக்திலட்சுமி:-** எந்த வேலையும் என்னால் முடியாது என்ற சொல்லாமல் எதையும் சிந்தித்து நம்மால் முடியும் என்ற நம்பிக்கையுடன் செய்தால் ஸ்ரீ சக்தி லட்சுமி நமக்கு என்றும் சக்தியைக் கொடுப்பாள்.

**ஸ்ரீசாந்திலட்சுமி:-** நாம் ஒவ்வொருவரும் வாழ்வில் வரும் இன்ப துன்பங்களை சமமாக பாவித்து வாழ பழக வேண்டும். நிம்மதி என்பது வெளியில் இல்லை. நம் மனதை இருக்குமிடத்திலேயே நாம் சாந்தப்படுத்த முடியும். ஸ்ரீசாந்தி லட்சுமியை தியானம் செய்தால் எப்பொழுதும் நிம்மதியாக வாழலாம்.

**ஸ்ரீசாயாலட்சுமி:-** நாம் சம்சார பந்தத்திலிருந்தாலும் தாமரை இலை தண்ணீர் போல கடமையைச் செய்து பலனை எதிர்பாராமல் மனதை பக்தி மார்க்கத்தில் சாய்ந்து ஸ்ரீசாயாலட்சுமியை தியானித்து அருளைப் பெற வேண்டும்.

**ஸ்ரீத்ருஷ்ணாலட்சுமி:-** எப்போதும் நாம் பக்தி வேட்கையுடன் இருக்க வேண்டும், பிறருக்கு உதவ வேண்டும், ஞானம் பெற வேண்டும், பிறவிப் பிணித் தீர வேண்டும் என்ற வேட்கையுடன் ஸ்ரீ த்ருஷ்ணா லட்சுமியைத் துதித்து நலம் அடையலாம். (தொடரும்)

## இராசிபலன்

10.07.2020
ஆனி 26, வெள்ளிக்கிழமை
பஞ்சமி பிற்பகல் 12.52 மணிவரை
பூரட்டாதி முழுவதும்
சுபநேரம் 5.58 - 7.28 மணிவரை
இராகுகாலம் 10.28 - 11.58 மணிவரை
சந்திராஷ்டமம் மகம்

வளவன்


மேஷம்
ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


ரிஷபம்
வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன நன்மை யுண்டு.


மிதுனம்
வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பகை விலகி பாசம் கூடும் நாள்.


கடகம்
கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், திருடர் பயமுண்டு, மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.


சிம்மம்
தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன நன்மையுண்டு.


கன்னி
பல நாட்களாக வசூலிக்காமல் இருந்த கடன்கள் திடீரென வசூலாகலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.


துலாம்
நிதிநிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், வளர்ச்சி கூடும் நாள், கோரிக்கைகள் நிறைவேற கோவிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.


விருச்சிகம்
உறவினர் வருகையுண்டு, வாகன சுகமுண்டு, குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


தனுசு
நேற்றை பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வியாபார விரோதம் விலகும், பயணங்கள் கைகூடும்.


மகரம்
பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், அதிர்ஷ்டகரமான நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.


கும்பம்
வழிபாட்டில் ஆர்வம் கூடும், சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், தொழில் நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், போசன சுகமுண்டு.


மீனம்
எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், உடன்பிறப்புக்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், வருமானம் திருப்தி தரும்.

உன்னை எரித்தாலும் அகில் போல மணம் பரப்பு

# கொரோனாவின் இரண்டாவது அலையை தடுக்கும் பொறுப்பு பொதுமக்களுக்கும்

## முன்னாள் சபாநாயகர் கரு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**வெலிக்கடை சிறைச்சாலையில் கைதி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கும் நிலையில், மக்கள் தமது அனைத்துவித செயற்பாடுகளையும் உயர் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திய முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, கொவிட்-19 வைரஸ் பரவலின் இரண்டாவது அலை ஏற்படுவதைத்தடுக்கும் பொறுப்பு பொதுமக்களுக்கும் இருக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார்.**

வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள கைதி ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பது உறுதி செய்யப்பட்டதையடுத்து அங்கு கைதிகளைப் பார்வையிடுவதற்கு வழங்கப்பட்டிருந்த அனுமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதுடன்.



Karu Jayasuriya
@KaruOnline

As a prison inmate tested positive for Covid-19, people must switch back to the highest safety protocols in all activities. Washing hands or wearing masks must not be a mere health ritual. Preventing a second wave is a common responsibility of the government and the people alike.

8:14 AM · Jul 8, 2020 · Twitter Web App

சிறைச்சாலையிலும் கந்தக்காட்டிலுள்ள போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கும் நிலையத்திலும் பலரைத் தனிமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது,

தற்போது சிறைக்கைதி ஒருவர் கொவிட்-19 கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டிருப்பதால், அனைத்து செயற்பாடுகளின் போதும் மக்கள் உயர் சுகாதாரப் பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமாகும்.

அவ்வப்போது கைகளைக் கழுவுவதும் முகக்கவசம் அணிவதும் வெறுமனே கட்டாயத்தின் பேரில் செய்கின்ற ஓர் சடங்கு போன்று இருக்கக்கூடாது. நாட்டில் கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலை ஏற்படுவதைத் தடுப்பது அரசாங்கத்திற்கும் மக்களுக்குமான பொதுவான பொறுப்பாகும் என்று குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

## பிணைமுறி மோசடி விவகாரம்

# ரணிலும் அவரது சகாக்களும் ஒருபோதும் தப்பிக்க முடியாது-சுசில்

(கொழும்பு)

பிணைமுறி மோசடியில் இருந்து முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அவரது சகாக்கள் ஒருபோதும் தப்பிக்க முடியாது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிணைமுறி கொடுக்கல்-வாங்கல் விநியோக மோசடி தொடர்பில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொறுப்பற்ற விதத்தில் கருத்துரைக்கிறார். மோசடி தொடர்பில் பொறுப்புக்கூறலில் இருந்து இவரும், மோசடி இடம்பெறவில்லை என்று குறிப்பிட்டு புத்தகம் வெளியிட்ட ஐக்கிய



மக்கள் சக்தியினரும் விலக முடியாது.

பிணைமுறிகள் விநியோகத்தில் மோசடி இடம்பெற்றது என எதிர்த்தரப்பினர் குறிப்பிட்டபோது அதனை அப்போதைய ஆளும் தரப்பினர் எதிர்த்தார்கள்.

குற்றச்சாட்டு தொடர்பில் ஆராய்வதற்கு ரணில் விக்கிரமசிங்க நீதியரசர்கள் மூவரை உள்ளடக்கிய பிடியாணைக் குழுவை நியமித்தார்.

மோசடிகள் இடம்பெறவில்லை என்றே அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் அறிக்கையின் உள்ளடக்கங்களும் பொய்யாக்கப்பட்டன.

மோசடி தொடர்பில் ஆராய்ந்த முதலாவது கோப் குழுவின் அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்காத வகையில் ரணில் விக்கிரமசிங்க அரசியல் காய் நகர்த்தி பாராளுமன்றத்தை கலைத்தார்.

இதன் காரணமாக பல விடயங்கள் வெளியாகவில்லை. தற்போது ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் ஊடாக பல விடயங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே கடந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்தவர்கள் அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும்.

அத்துடன் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை மாற்றியமைத்து புதிய திருத்தத்தை உருவாக்க வேண்டுமாயின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களை பெற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ஜ-4)

## யாழ்.நகரில்...

வீதியில் நேற்று பகல் ஒருவர் மீது கத்திக்குத்து நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையத்தில் பணியாற்றும் 41 வயதுடைய ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையம் ஒன்றில் பணியாற்றும் ஊழியர் மீதே கத்திக்குத்து தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,18)

## கல்வியங்காடு...

வசிக்கும் இளைஞர் ஒருவருக்கு வரணி தாவளை இயற்றாலைப் பகுதியில் வீடு, காணிகள் இருப்பதாகவும் அவற்றைப் பார்ப்பதற்கு குறித்த இளைஞர் அடிக்கடி வரணி வந்து போவதாகவும் இவ்வாறு காணி, வீட்டை பார்ப்பதற்கு வந்தவர் திரும்பி கல்வியங்காடுக்கு வரவில்லை என்பதால் அவரின் சகோதரர் நேற்று வரணியிலுள்ள வீட்டிற்கு வந்து பார்த்த போது இளைஞர் வீட்டினுள் சடலமாகக் காணப்பட்டார்.

குறித்த சம்பவத்தில் யோகராசா மோகனதாஸ் (வயது - 27) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-3,114)

## நவாலி படு...

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமானத் தாக்குதலின் 25ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றைய தினம் வியாழக்கிழமை மாலை தேவாலயத்தில் நினைவுகூரப்பட்டது.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நேற்று மாலை பங்குத் தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து தேவாலயத்திற்கு அருகில் அமைக்கப்பட்டு உள்ள நினைவுத் தூபியில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மலர் தூவி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் அஞ்சலி செலுத்த பொலிஸார் தடைகளை ஏற்படுத்திய போதிலும் அதனையும் மீறி மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

தூபியில் அஞ்சலி செலுத்துவதற்காக பொலிஸார் தடை ஏற்படுத்தி இருந்தனர்.

அருட்தந்தையர்கள் மட்டும் சுடரேற்றி அஞ்சலி செலுத்த பொலிஸார் அனுமதித்தனர். அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் அஞ்சலி செலுத்த பொலிஸார் அனுமதிக்கவில்லை.

இந்நிலையில் நேற்றைய அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் பொலிஸாரின் தடைகளை மீறி சுடரேற்ற முற்பட்டபோது பொலிஸ் அதிகாரியொருவர் அவரை இழுத்து விழுத்த முற்பட்டார்.

இருந்த போதிலும் அதனையும் மீறி சிவாஜிலிங்கம் நினைவுத் தூபியில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணனும் சுடரேற்றினார். அதனைத் தொடர்ந்து பொலிஸாரின் தடைகளை மீறி பொதுமக்கள் நினைவுத் தூபியில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

அதன் போது பொலிஸார் கொரோனோ தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நீங்கள் ஒன்று கூடியதற்காக உங்கள் அனைவரையும் கைது செய்து தனிமைப்படுத்தும் அதிகாரம் எமக்கு உண்டு என அச்சுறுத்தினர்.

அதனைத் தொடர்ந்து அருட்தந்தையர்கள், மக்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தி விட்டு சென்று விடுவார்கள். அவர்களை அஞ்சலி செலுத்த அனுமதிக்குமாறு பொலிஸாரைக் கேட்டதற்கு இணங்க சமூக இடைவெளிகளைப் பேணி அஞ்சலி செலுத்துமாறு அறிவுறுத்தி அஞ்சலி செலுத்த அனுமதித்தனர்.

அதேவேளை பொலிஸாரின் தடைகளை மீறி மக்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்திக் கொண்டு இருந்த வேளை அவ்விடததில் ஏற்பட்ட குழப்ப நிலையை அடுத்து அவ்விடத்திற்கு துப்பாக்கிகளுடன் பத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் விரைந்து பொதுமக்கள் மத்தியில் அவர்களை அச்சுறுத்தும் விதமாக செயற்பட்டனர். (ம-3)

## கொரோனா...

வெலிக்கடை சிறைச்சாலையில் கொரோனா தொற்றுக்குள்ளான கைதியுடன் புனர்வாழ்வு நிலையத்தில் இருந்தவர்களுக்கே நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் ஆலோசகராக செயற்பட்ட மாரவில பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறினார்.

வெலிக்கடை கைதியுடன் மூன்று மாதங்கள் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் தங்கியிருந்தவர்கள் மற்றும் அங்கு பணியாற்றிய ஊழியர்கள் அடங்கலாக 450 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அங்கு மேற்கொள்ளக்கூடிய பி.சி.ஆர் பரிசோதனை மற்றும் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 2,151 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## 2,327 கிலோ...

டன் ஒப்பிடும்போது இவ்வருடம் போதைப் பொருள் கடத்தல் வடக்கில் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ள வட்க்கு கடற்படை கட்டளை தலைமையகம், வடக்கு மாகாணத்தில் கடந்த 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இவ்வருடம் அதிகளவிலான போதைப் பொருட்கள் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 2019ஆம் ஆண்டு 2096 கிலோ கிராம் கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

எனினும் இவ் வருடம் இன்றைய தினம் (நேற்று) வரை 2327 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இவ்வருடம் போதைப்பொருள் கடத்தல் அதிகரித்துள்ளதை காணக்கூடியதாக உள்ளது. (ம-3)

# 2,366 முறைப்பாடுகள்

பாராளுமன்றத் பொதுத் தேர்தல் தொடர்பில் இதுவரை 2,366 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-3)

## வாள்வெட்டுக்...

யாழ்ப்பாணம் மாவட்ட செயலக தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகம் முன்பாக உத்தியோகத்தர் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 5 சந்தேக நபர்கள் தங்கியிருந்து குற்றச்செயல்களில் ஈடுபட்ட வீடு பொலிஸாரால் நேற்று முற்றுகையிடப்பட்டுள்ளது.

நீர்வேலி கரந்தனில் உள்ள அந்த வீட்டின் வாழைத் தோட்டத்தில் இருந்து கைக்குண்டு ஒன்று, வாள்கள் மூன்று, மோட்டார் சைக்கிள்கள் இரண்டு, இராணுவச் சீருடைகள், தேசிய அடையாள அட்டைகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பெரும் குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரின் நடவடிக்கையில் சந்தேக நபர்கள நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## தந்தையின் கத்தி...

தினம் குடும்பத்தில் ஏற்பட்ட தகராற்றினை தொடர்ந்து தனது 5 வயதுச் சிறுமி மீது சரமாரியாக கத்தியால் வெட்டிய சம்பவத்தில படுகாயமடைந்த சிறுமி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தினை தொடர்ந்து பாதிக்கப்பட்ட சிறுமியின் தந்தையான 28 வயதுடைய நபரை முள்ளியவளை பொலிஸார் கைது செய்து இது தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள். (ம-3,281)

## ஒரு பவுன் தங்...

தங்கத்தின் விலை முதன்முறையாக 100,000 ரூபாயை எட்டியது.

கொரோனா தொற்று காரணமாக தங்க வரத்து நின்று போனதால் நாட்டில் தங்கத்திற்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

இதனால் விலை உயர்ந்து செல்வதாக தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

22 கரட் தங்கத்தின் விலை 93,000 ரூபாயாக நேற்று உயர்ந்தது.

கொரோனா தொற்று ஆரம்பிம்பித்த சமயத்தில் ரூபாய் 82,000 முதல் 84,000 வரை இதன்விலை காணப்பட்டது.

நிலவும் சூழ்நிலைகளை பொறுத்து விலை மாறுபடும், தங்க வரத்து தொடர்ந்து தடைப்பட்டிருப்பின் விலை மேலும் உயரும் எனத் தெரிகிறது. (ம-3)

சம்பத
திகதி 09/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 010
ஆங்கில எழுத்து S
வெல்லப்பட்ட இலக்கங்கள் 14 23 45 64
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/07/09
சீட்டிழுப்பு இலக்கம் 4178
ஆங்கில எழுத்து U
வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 8 7 3 0 6
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 09-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2473
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 07 41 46 52
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 09/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 545
E 08
வெற்றி இலக்கங்கள் 01 10 24 58

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1595 திகதி 2020/07/09
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 05 10 45 61
தேசிய லொத்தர் சபை

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1671
சீட்டிழுப்பு திகதி 09/07/2020
வெற்றி இலக்கங்கள் 22 23 39 58
ஆங்கில எழுத்து O
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 50,454,200
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 975
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.07.08
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,582,380/-
வெற்றி இலக்கங்கள் 21 27 42 72
ஆங்கில எழுத்து Y
அபிவிருத்தி லொத்தர் சபை
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2856
வர்ணம் கபிலம்
திகதி 09.07.2020
வெற்றி இலக்கங்கள் 04 12 23 37 விருச்சிகம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,669,406
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1172
சீட்டிழுப்பு திகதி 09.07.2020 வியாழக்கிழமை
F 11 12 41 65
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,587,908
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

# முகக்கவசம் அணியாதோர் மீது சட்டரீதியான நடவடிக்கை

## வடக்கு சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

"வடமாகாணத்தின் பல இடங்களில் பொதுமக்கள் முகக் கவசம் அணியாது நடமாடுவது அவதானிக்கப்பட்டு முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக இனிவரும் நாட்களில் மிகவும் இறுக் கமாக கண்காணிக்கப்பட்டு சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்."

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்று மாலை வெளியிட்டுள்ள சிறப்பு ஊடக அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நமது நாட்டில் கோரோனா நோய் தொடர்பான அபாயம் தொடர்ந்தும் இருப்ப தால் மக்கள் தங்கள் வீடுகளுக்கு வெளியே செல்லும் பொழுது முகக் கவசம் அணி வதும், குறைந்தது இருவருக்கிடையில் ஒரு மீற்றர் இடைவெளியை பேணுவதும், சரியான முறையில் கைகளை அடிக்கடி கழுவுவதும் பொதுச் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளாக கைக்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் தற்போது நமது நாட்டில் மக்கள் வீட்டிற்கு வெளியில் செல்லும் போதும், பொது இடங்கள் மற்றும் பொது நிகழ்வுகளுக்கு வருகை தரும் பொழுதும், முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட் டுள்ளது. அவ்வாறு முகக் கவசம் அணி யாது நடமாடுபவர்களுக்கு எதிராக சட்டரீதி யான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் 14 நாட்கள் கட்டாய தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தப்படுவார்களென ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் வடமாகாணத்தின் பல இடங்களில் பொதுமக்கள் முகக் கவசம் அணியாது நடமாடுவது அவதானிக்கப் பட்டு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக இனிவரும் நாட்களில் மிகவும் இறுக்கமாக கண்காணிக்கப்பட்டு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே மக்கள் பொது இடங்களில் நடமாடும்போது கட்டாயமாக முகக்கவசம் அணிவதை உறுதிப்படுத்துவதன் மூலம் தங்களையும் தங்கள் சமூகத்தினையும் கொரோனா நோய் தொற்றிலிருந்து பாது காத்துக்கொள்வதுடன் கட்டாய தனிமை ப்படுத்தலுக்கு உள்ளாவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது. (ம-3)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**கணக்கீடு**
புதிய மாணவர் வருகையால்
புதிய அலகுகள், புதிய பிரிவுகள் நாளை ஆரம்பம்

| | | | |
|---|---|---|---|
| A/L | 2022 | ஆரம்பம் | 11a.m |
| A/L | 2022 | கணக்கு சமன்பாடு | 10a.m |
| A/L | 2021 | உற்பத்தி கிரயக் கூற்று | 9a.m |
| A/L | 2020 | சம்பளப் பட்டியல் | 8a.m |
| A/L | 2020 Day | கம்பனி (திங்கள் - வெள்ளி) | 3 - 5p.m |

கருத்தரங்கு ஒவ்வொரு செவ்வாய் - 3 p.m
[ மாத சேவைக் கட்டணம் ரூபாய் 300/- மட்டும் ]
கடந்த வருட பெறுபேற்றில் யாழ். நிலை 01,02 மற்றும் தொடர் நிலைகள் பெற்ற மாணவர்களை உருவாக்கிய
**S.தவா**
(3256)
**D.C.Mn யாழ். நகர்**
(யாழ்/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகாமை)
தொடர்பு :- 077 239 5858

# வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு தேர்தல் தொடர்பில் அக்கறையில்லை

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு தமிழ் மக்களிடம் தேர்தல் தொடர்பில் அக்கறையின்மை ஏற்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக் குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தல் செயலகத்தில் நேற்று ஊடக பிரதானிகளை சந்தித்த போதே அவர் இதனைக் கூறினார்.

தேர்தலின் முக்கியத்துவம் தொடர்பில் மக்களுக்கு ஊடகங்கள் தெளிவுப்படுத்த வேண்டும். இதேவேளை எதிர்வரும் தேர்தலில் மக்கள் அச்சமின்றி வாக்களிக்க முடியும்.

கொரோனா அச்சம் நீங்கவில்லை என்பதை அனைவரும் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.தேர்தலை விட மக்களின் உயிரே எமக்கு மேலானது.இதற்கு அமைவாகவே வாக்களிப்பு நிலையங்களில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இம்முறை தேர்தல் பணிகளில் இராணுவத்தினரை ஈடுபடுத்தப் போவதில்லை என்றார். (ம-3)

**விற்பனைக்கு / குத்தகைக்கு**
2ஆம் குறுக்குத்தரு, பருத்தித்துறை (பருத்தித்துறை மத்திய சந்தைக்குப் பின்புறமாக) 2 பரப்புக் காணியுடன் கூடிய இரண்டு கடைகளுடன் கூடிய பேக்கரி விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும்.
நிறுவனமாகவும் அல்லது பேக்கரியாகவும் பாவிக்கும் வகையில் உள்ளது. விரும்பிய வர்கள் தொடர்பு கொள்ளவும்.
(C-9867)
தொடர்புகளுக்கு
077 421 5879

காரைநகர் வியாவில் பதி
ஆதிஷேத்திரம் திருவருள்மிகு
பூரணை புட்கல சமேத
ஹரி ஹர புத்ர ஐயப்பசுவாமி
தேவஸ்தானம்
**திவ்விய மகோற்சவம் - 2020**
கொடியேற்றம் ( ஆனி 27 )
*11.07.2020 ( சனிக்கிழமை )பகல் 10.30 மணி*
தேர்த்திருவிழா 19.07.2020 ( ஞாயிற்றுக்கிழமை )
*காலை 7.00 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம்பெற்று 9.00 மணியளவில் தேர் வீதிஉலா நடைபெறும்.*
குறிப்பு :- கொரோனாத் தொற்றுக் காரணமாக அனைத்து அடியார்களும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு தயவுடன் வேண்டப்படுகின்றனர்.
வியாவில் ஐயனார் தேவஸ்தானம். ஆலய அறங்காவலர்
விளம்பர அனுசரணை
**கஜமுகன் ஹாட்வெயார்ஸ்**
147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 7144 (C-9855)

**AMC ACADAMY**
Clock Tower Road, Jaffna.
PERSONAL CLASSES

| | Medium Tamil | Medium English |
|---|---|---|
| A/L Accounting 2020, 21,22 | ✓ | ✓ |
| AAT ALL Stages | ✓ | ✓ |
| External B.Com | ✓ | ✓ |
| EB Exam | ✓ | — |
| Gr. 7 All Subjects | — | ✓ |

A.Kalaichelvan 077 694 4543

# நடைப்பயிற்சியில் ஈடுபட்டவர்கள் மீது மோ.சைக்கிள் மோதியதில்

## சாவகச்சேரியில் 3பேர் காயம்

(சாவகச்சேரி)

நடைப்பயிற்சியில் ஈடுபட்டவர்கள் மீது மோட்டார் சைக்கிளில் வந்தவர் மோதி விபத்துக்குள்ளாக்கியதில் 3 பேர் காய மடைந்துள்ளனர்.

ஏ9 வீதி, சாவகச்சேரி பகுதியில் நேற்று இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாண திசையாக ஏ9 வீதியால் இருவர் நடைப்பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் பின்னால் வந்தவர் அவர்கள் மீது மோதியுள்ளார்.

இதில் மூவரும் காயமடைந்தனர்.மருதங்கேணி பிர தேசசெயலக உத்தியோகத்தரான மதிதரன் என்பவர் கால் முறிந்த நிலையிலும், தவராசா பாஸ்கரன் (வயது-43) என்பவர் தலையில் காயமடைந்த நிலையிலும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மோட்டார் சைக் கிளை செலுத்தி சென்ற, யாழ்ப்பா ணத்தை சேர்ந்த வர்த்தக நிலைய உரிமையாளரான சண்முகநாதன் பிர தீபன் (வயது-38) என்பவரே அவர் கள் மீது மோதி னார். விபத்தின் போது அவரும் காய மடைந்து வைத்தி யசாலையில் அனு மதிக்கப்பட்டார்.

அவர்கள் மேல திக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலை க்கு மாற்றப்பட் டனர். (ம-3)

மீண்டும்

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை**
அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும்
100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.
(C-9831)
**அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113
**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

**இலங்கை விசா நீடிப்பு**
வெளிநாட்டிலிருந்து இலங்கை வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
**VISA EXTENSION** (விசா நீடிப்பு)
FOR FOREIGN PASSPORT
எமது கிளைகள்
யாழ்ப்பாணம், நெல்லியடி, புதுக்குடியிருப்பு, மருதங்கேணி, சாவகச்சேரி, மாணிப்பாய், கிளிநொச்சி, கொடிகாமம், சுன்னாகம், பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768227499

**பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு**
தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)

**விமானப் பயணச்சீட்டுக்கள்**
**விரைவுப் பொதிகள் சேவை**
**விசா சேவைகள்** V2 TRAVELS
எமது கிளைகள்
கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்
- பயிற்சிக்கால ஊக்கத்தொகை 10'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்
- ஆரம்ப சம்பளம் -15'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com

**விஜ்னா**
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
**O/L Day Class** ( 8.00 to 2.00 )
புதிய பிரிவினருக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (C-9866)
T.P : 076 482 4490

**நிரு ரீயூசன் சென்ரர்**
**A/L 2022 புதிய பிரிவு**
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
ஆரம்பம் :- 11.07.2020
சனி காலை 7 மணி
(3250)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது